ஜனவரி 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org

Vol.8, Issue 8 | Annual Subscription ₹ 480
Rotary News, January 2026, Chennai




Rotary

A BOOK FOR TRAINERS AND ENVIRONMENTAL ENTHUSIASTS

# "IT'S FAR MORE THAN A WASTE MANAGEMENT GUIDE-IT'S A BROADER VISION"

GET A SIGNED BOOK






GIFT A PACK OF BOOKS TO A DESERVING SCHOOL THIS 2026

**The Responsible Living book contains 80+ illustrative caselets on climate change impacts**

Understanding caselets of climate change and Waste Management also help learners, policymakers, and leaders in education institutions ask the right questions, prioritize effective interventions, and recognize that climate change is a shared problem requiring collective responsibility and timely action.

BUY NOW

₹ 299/-

Available in both English and Tamil

rjgarbagebank@gmail.com

+91 84388 52866

DPIIT #startupindia DIPP205349

# உள்ளே




**12**

பசியைப் போக்க 28 ஆண்டுகால கருணை முயற்சி



**22**

ஒரு தனித்துவமான தலைமைப்பயணம்



**30**

“டாகோஜு தன்யவாத்” தலைப்பின் பின்னணி



**44**

கிழக்கு மகாராஷ்டிராவின் பழங்குடியின மக்களுக்காக நலத்திட்டங்கள்



**48**

அறிவியல் உங்களைத் தேடி வரும்போது



**52**

கலை, சுகாதாரம் மற்றும் நம்பிக்கை



**54**

பொன் விழா கொண்டாட்டத்தில் RC சோன்கட்ச்



Rotary

A publication of Rotary Global Media Network



நம் சுற்றுச் சூழலை பாதுகாக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹324**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## தேஜஸ் மாநாட்டுத் தகவல், கட்டுரைகள் சூப்பர்




*இயக்குநர்களுக்கு மூன்றாண்டு பதவிக்காலம் இருக்க வேண்டுமா? என்னும் கட்டுரைக்கு எனது பாராட்டுகள். பல்வேறு பிரச்னைகள், கேள்விகள் எழும்போது இதுபோன்ற மாநாட்டில் பதில் அளிப்பது அவ்வளவு எளிதல்ல என்பது அனுபவம் உள்ள எனக்குத் தெரியும். சில சமயங்களில் பங்கேற்பாளர்களுக்கு எதையும் சரிவர சொல்லத்தெரியாது. ஆனால், நிகழ்வைத் தொகுத்து வழங்கும் தொழில்முறை பத்திரிகையாளர்தான் அதை சரிசெய்ய வேண்டியிருக்கும்.*

*RI முன்னாள் தலைவர் கேட்ட கடுமையான சில கேள்விகளுக்கு தற்போதைய RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ பதிலளித்தார். இந்த இருவருக்கும் இடையே நடந்த உரையாடல்கள் ஆக்ரோஷமாக இருந்தாலும் அனைவரையும் ஈர்க்கும் வகையில் இருந்தது. USAID நிதியுதவியை தற்போதுள்ள அமெரிக்க அரசு நிறுத்திவைத்துள்ளது, WHO-விலிருந்து விலகல் போன்றவை ரோட்டரியின் அடிப்படை கோட்பாடுகளுக்கு முரணாக உள்ளது என்பது உண்மைதான். 64 ஆளுநர்களுக்கு இந்த ஆண்டு US விசா மறுக்கப்பட்ட செய்தியை படித்தபோது அதிர்ச்சி அடைந்தேன். "நாம் ஏன் இன்னும் அமெரிக்காவில் இருந்து செயல்பட வேண்டும்? என்கிற கேள்வி சரியானதே. ஆனால், மற்ற சில நாடுகளும் விசா வழங்க மறுத்துவிட்டன என்பது விவாதத்தில் தெரியவந்தது. பெல்ஜியம் உச்சி மாநாட்டிற்கு 200-க்கும் மேலா விசாக்கள் மறுக்கப்பட்டுள்ளன.*

*பெரும்பாலான ஆய்வுக் கூட்டங்கள்— ரோட்டரியுடன் மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம் மற்றும் பொதுவான வளர்ச்சியின் வரம்பை உள்ளடக்கியிருந்தது. அவை சர்ச்சைகளை தவிர்க்கும் விதத்திலும், வேறுபாடுகளை விவாதிக்காமல் அடக்கிவாசிப்பதாகவுமே இருந்தன. ஒருவகையில் அப்படிச் செய்யாதது ரோட்டரியின் மதிப்பை நிலைநாட்டுவது போல் இருந்தது. விருப்பு வெறுப்பு இல்லாமல் தில்லி தேஜஸ் மாநாட்டுச் செய்திகளை சிறப்பாக வெளியிட்ட ரோட்டரி செய்திக்குழுவினருக்கும், ரஷிதாவுக்கும் பாராட்டுகள்.*

*S R மது, RC மெட்ராஸ் சவுத் — D 3234*

*தேஜஸ் மாநாட்டு நிகழ்வுகளை எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் வெளியிட்டது பாராட்டுக் குரியது. மாநாட்டில் பங்கேற்காத நபர்கள்கூட அதை படித்து அனுபவிக்க முடிந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரனின் கேள்வி-பதில் அமர்வு. நான் அவரது பல அமர்வுகளில் கலந்துகொண்டுள்ளேன். அவற்றிலிருந்து ரோட்டரியின் மகத்துவம் பாதுகாக்கப்படும் என்கிற உணர்வு நமக்கு ஏற்படும். RI இயக்குநர் முருகானந்தம் அளித்த பதில்கள் எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தன. தேஜஸ் மாநாடு பற்றி ஆசிரியர் ரஷீதா பகத் எழுதிய கட்டுரைகள், தகவல்கள் மிகவும் பயனுள்ளவை.*

*R தாயுமானவன்*
*RC கடலூர் மிட்-டவுன் — D2981*

*தேஜஸ் மாநாடு பற்றிய அட்டைப்படம் பிரமிக்கவைக்கிறது. ரோட்டரி தலைவர் அரெஸ்ஸோ தமது செய்தியில் மனித*

200 பெண்களின் மேம்பாட்டுக்கு உதவிய RID 3233 கட்டுரை (டிசம்பர் இதழ்) சுவாரஸ்யமாக இருந்தது. ரஷீதாவுக்கு நன்றி. எங்கள் சங்கத்தில் ஒரு தையல் பயிற்சி திட்டமும் உள்ளது. ஆனால் இப்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது. உங்கள் கட்டுரை, அதை செயல்படுத்த எங்களைத் தூண்டுகிறது. அருந்ததி ராய் பற்றிய கட்டுரை தகவல் களஞ்சியம். ஆனால், அவர் புகைப்பிடிப்பது போன்ற புகைப்படம் நன்றாக இல்லை.

ராதேஷியாம் மோடி
RC அகோலா — D3030

ரோட்டரி நோய் ஒழிப்பில் முன்னிலையில் இருக்கிறது. போலியோவை முடிவுக்கு கொண்டு வருவோம் என்பது வெற்றிகரமான பிரசாரம். ரோட்டரி நியூஸ் உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக் டர்கள் படித்து வருகின்றனர். அருந்ததி ராய் புகைப்பிடிக்கும் படம் அருவருப்பாக உள்ளது. பிரபலங்களின் செயல்பாடுகள் இளைஞர்கள் மனதில் எளிதில் பதிந்துவிடும் என்பதால் இந்த படத்தை தவிர்த்திருக்கலாம்.

ஓய்வுபெற்ற கமாண்டர்
L ராதாகிருஷ்ணன்
RC சென்னை IT சிட்டி — D 3233.

RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ நவம்பர் இதழில் நாம் பெருந்தன்மையுடனும், மகிழ்ச்சி யுடனும் நம்பிக்கையுடனும் அறக்கட்டளைக்கு அள்ளிக் கொடுப்போம். அதன் மூலம் நன்மைக்காக ஒன்றுபடுவோம் என சுட்டிக்காட்டியுள்ளார். அப்படிச் செய்வதன் மூலம் நாம் திட்டங்களை மட்டுமல்ல, அமைதி, நம்பிக்கை மற்றும் சுயநலமில்லா சேவை ஆகிய மரபுகளையும் விட்டுச் செல்கிறோம். TRF அறங்காவலர் பரத் பாண்ட்யாவின் கட்டுரை சூப்பர். வெளிவந்த கட்டுரைகளில் RID முருகானந்தம், பால் அண்ட் ஜீன் ஹாரிஸ் வீட்டை புதுப்பிக்க $2,50,000 நன்கொடை அளித்தது பற்றிய கட்டுரை நல்ல தகவல். ரோட்டரிக்கு தாராள மனப்பான்மையுடன் மிகப்பெரிய நன்கொடை அளித்த அவருக்கு பாராட்டுகள்.

திருச்சியில் சாதனை படைத்த ரோட்டரி சங்கம் பற்றிய ஜெய்ஸ்ரீயின் கட்டுரை அருமையாக இருந்தது. 415

*நேயத்தின் முக்கிய அம்சங்களான ஆற்றுப்படுத்துதல், நட்புறவு மற்றும் மகிழ்ச்சிக்கான அணுகல் பற்றி மனதை தொடும் வகையில் குறிப்பிட்டிருந்தார்.*

*தனது ஆசிரியர் குறிப்பிலும், உள் பக்கங்களிலும் ரஷீதா பகத், தேஜஸ் மாநாட்டுச் செய்திகளை விரிவாக குறிப்பிட்டிருந்தார்.*

*அருந்ததிராயின்* " Mother Mary comes to me" *நல்ல விமர்சனம் உள்ளது. தாயுடனான அன்பு மற்றும் வெறுப்பை இந்த புத்தகம் விவரிக்கிறது. முதியோர் வாழ்க்கையில் குதூகலம் கட்டுரை பிரமாதம். முதியோர்களை மதிக்க வேண்டும் என்பதை ரோட்டரி நியூஸ் சரியாகச் சொல்லியுள்ளது.*

K M K *மூர்த்தி,*
RC *செகந்திராபாத்* — D 3150

*டிசம்பர் இதழில், ஆசிரியர் குறிப்பில், சியாச்சின் பனிப்பாறை பகுதியில்* 21, *அடி உயரத்தில், மைனஸ் வெப்ப நிலையில் இந்திய ராணுவத்தினர் நாட்டை காப்பதாக தங்கள் கடமைகளைச் செய்வதை பற்றி படித்தேன். மேலும் தேஜஸ் மாநாட்டில், மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கேந்திரிய சைனிக் வாரியத்தின் செயலாளர் பிரிகேடியர்* D S *பசோ்ா, நமது நாட்டை, பூமியை, தேசிய கொடியை காப்பதற்காக எல்லையில் ராணுவத்தினர் எப்படிப் போராடி வருகிறார்கள் என்று கூறியதை படித்தபோது மெய்சிலிர்த்தது. நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்யும் நமது வீரர்களுக்கு வீரவணக்கம்.*

*நிரஞ்சன் கர்*
RC *புவனேஸ்வர்* — D 3262

*தேஜாஸ் நிறுவனத்தில்* RI *தலைவர் அரேசோ ஆற்றிய உரை குறித்த கட்டுரை எனக்குப் பிடித்திருந்தது. அவர் ரோட்டரியன்களை ஏழைகளுக்குக் கல்வி வாய்ப்புகளையும் சுகாதார வசதிகளையும் வழங்கும்படி வலியுறுத்தினார், மேலும் அந்தச் செய்தியை வலியுறுத்துவதற்காக பகவத் கீதை மற்றும் உபநிடதங்களிலிருந்து மேற்கோள் காட்டினார்.*

T D *பாட்டியா*
RC *டெல்லி மயூர் விஹார்* — D 3012

உறுப்பினர்களுடன் ரோட்டரி சங்கம் உருவானது அதிசயம்தான். நிறுவன உறுப்பினர்களுக்கு பாராட்டுகள்.

டேனியல் சிட்டிலப்பள்ளி
RC கலூர் — D 3205

PDG V R முத்துவின் பஞ்ச் திட்டம் நல்ல முயற்சி. அதைப் பற்றிய பதிவும் நன்றாகவே இருந்தது. இந்த திட்டம் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தாலும், கட்டுரையாக படிக்கும்போதுதான் அதை புரிந்துகொள்ள முடிந்தது. இந்த திட்டத்தை ஊரகப்பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் உள்ளூர் ரோட்டரி சங்கங்கள் மூலம் விரிவு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் விழுப்புரம் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வருவதால் ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும் சிரமப்படும் கிராமப்புற மாணவர்களைப் பற்றி எனக்கு முழுமையாகத் தெரியும்.

R சாய்ராமன்
RC விழுப்புரம் — D 2982

## செயற்கைக்கோள் திட்டம் — இந்தியாவின் பெருமை

விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வியத்தகு எழுச்சி என்ற கட்டுரையில் இந்தியாவின் விண்வெளித் திட்டம் பற்றிய தகவல்களை நீங்கள் எளிமையாக கூறியுள்ளது பாராட்டுக்குரியது. இந்தியாவில் ராக்கெட்டுகள் என்றால் என்ன, அவற்றின் வரலாறு என்ன என்று தெரியாத பலர் உள்ளனர். தொழில்நுட்பத்தை இந்த நிலைக்கு கொண்டுவர விஞ்ஞானிகள் எவ்வளவு முயற்சி மேற்கொண்டார்கள் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது. மாட்டு வண்டிகளில் ராக்கெட்டை கொண்டு செல்வதிலிருந்து, ராக்கெட் தொழில்நுட்பத்தில் உலகில் மூன்றாவது அல்லது நான்காவது இடத்தை பிடித்திருப்பது வரை அனைத்து பெருமைகளும் நமது விஞ்ஞானிகளையே சேரும்.

நமது விண்வெளித் திட்டத்தில் ராக்கெட்டுகளை தீபாவளி பட்டாசுகளுடன் ஒப்பிட்டு பார்த்த சம்பவம் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது. ஏடிஎம்கள், டெலிபேங்கிங் அன்றாட செயல்களுக்கும் இதர பரிவர்த்தனைகளுக்கும் உதவியாக இருப்பது செயற்கைக் கோள்கள் தான் என்பதை பலரும் அறிந்திருக்கமாட்டார்கள்.

விஜய் ரதி, RC லட்டூர்
ஹொரைஸன் — D 3132

**அட்டைப்படத்தில்:**
ரோமா பிர்வானி, தனது கணவர் மகாராஜால் தொடங்கப்பட்டு, RID 3030-ஐச் சேர்ந்த RC தியோலாலியால் நடத்தப்படும் ஒரு சேவை முன்னெடுப்பான பூரி-பாஜி மையத்தில் உதவி செய்கிறார்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

# RI தலைவரிடமிருந்து...



## பணிப் பயிற்சிக்கு மேல்...

கலிஃபோர்னியாவிலுள்ள சலினாசுக்கு வெளியிலிருக்கும் ஒரு வண்டி நிறுத்தகத்தில் பல இளைஞர்கள் பழைய கார்களை மீட்டெடுக்கக் கற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் வெறும் திறமையைமட்டும் வளர்த்துக்கொள்வதில்லை, தங்கள் வருங்காலங்களை மீண்டும் பெறுகிறார்கள். இந்தப் பயிற்சித் திட்டம் பலருக்கு வழிகாட்டுதலை அளிக்கிறது, சிலரைக் கெட்டவர்களுடன் சேர்வதிலிருந்து விலக்கிப் பொருளுள்ள வேலைவாய்ப்பை அளிக்கிறது.

ஒவ்வொரு ஜனவரியிலும் ரோட்டரியின் தொழில் சார்ந்த சேவை மாதம் இதைத்தான் கொண்டாடுகிறது: உலகில் நல்லவற்றைச் செய்வதற்கான தனித்துவமான திறன்களைக் கொண்ட மக்களை ஒன்றாக்குவதன் ஆற்றல்.

கலிஃபோர்னியாவில் இந்தத் திட்டத்தை நடத்தும் கேரமெல்-பை-சீ ரோட்டரி சங்க உறுப்பினர்கள் சமூகத்தில் தானியங்கி வண்டிகளைப் பழுதுபார்க்கும் திறன் வாய்ந்தோர் அவ்வளவாக இல்லை என்றும், பல இளைஞர்கள் வேலைப் பயிற்சி இன்றி உள்ளார்கள் என்றும் அறிந்தார்கள், இதற்கு வெறும் தொழில்நுட்பத் திறன்கள் போதாது என்று உணர்ந்தார்கள், அதனால், தொழில் சார்ந்த பயிற்சியுடன் அறிவுறுத்தல், ஆதரவுச் சேவைகளை வழங்கும் “ராஞ்சோ சியெலோ” என்ற அமைப்புடன் செயல்பட்டார்கள்.

அடுத்த பத்தாண்டுகளில், வளரும் பொருளாதாரங்களில் 1.2 பில்லியன் இளைஞர்கள் பணிபுரியும் வயதை எட்டுகிறார்கள். ஆனால், அங்கு 420 மில்லியன் பணிகள்தான் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முதன்மையான இடைவெளியாகும். பொருளாதார வாய்ப்புகளிலிருந்து எப்போதோ விலக்கப்பட்ட சமூகங்களுக்கு நம் ஆதரவு தேவைப்படுகிறது.

ஆனால், ஆதரவு என்றால் நம் விருப்பதைத் திணிப்பது இல்லை. உள்ளூர்த் தேவைகளைக் கேட்கவேண்டும், கூட்டுப்பணிகளைக் கட்டமைக்க வேண்டும், சமூகங்கள் தாங்களே தொடர்ந்து நடத்தக்கூடிய திட்டங்களை வடிவமைக்கவேண்டும்.

வாழ்க்கைகளை மாற்றக்கூடிய அறிவு உங்களிடம் உள்ளது. உங்கள் பணித்துறை எதுவானாலும், உங்கள் திறமையும் ரோட்டரியின் மதிப்பீடுகளும் சேர்ந்து நீடித்த மாற்றத்தை உருவாக்கும். நீங்கள் எதையாவது கொடுக்க இயலுமா என்று கேட்காதீர்கள், நீங்கள் சேவை புரிவதற்கு உங்கள் திறமைகளை எப்படிப் பயன்படுத்துவீர்கள் என்று சிந்தியுங்கள்.

இந்த ஜனவரியில், உங்கள் சமூகத்தின் தொழில் சார்ந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு உங்கள் சங்கம் எப்படி உதவலாம் என்று சிந்திக்கும்படி நான் ஊக்குவிக்கிறேன். உங்கள் உறுப்பினர்களிடம் உள்ள எந்தத் திறன்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையை மாற்றக்கூடும்? உங்கள் வலைப்பின்னல்களைக் கொண்டு இளைஞர்களுக்குக் கதவுகளைத் திறப்பது எப்படி? தொடர்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய கூட்டுப்பணிகள் எவை?

நாம் செய்கிற அனைத்தின் மையத்திலும் நேர்மையை வைப்போம், மனித குலத்துக்காகப் பணியாற்றுவதற்கு நம் தொழில்முறைத் திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டாடுவோம்.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேஸ்ஸோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

ஆசிரியர் பக்கம்



# அமைதி முயற்சிக்கு இதுவே நல்ல தருணம்

ரோட்டரி உலகில், குறிப்பாக இந்தியாவில், புனேயில் உள்ள சிம்பியோஸிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் ரோட்டரியின் எட்டாவது அமைதி மையத்தை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் பரபரப்பாக நடந்துகொண்டிருக்கும் வேளையில், டிசம்பர் 14-ம் தேதி, ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள பிரபலமான போண்டி கடற்கரையில் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்த செய்தி வெளிவந்துள்ளது. உள்ளூர் யூத சமூகத்தைச் சேர்ந்த சுமார் 1,000 பேர் ஹனுக்கா (விளக்குத் திருவிழா) கொண்டாட்டத்தில் இருந்தபோது, வீடியோவில் பதிவான துப்பாக்கி ஏந்திய இருவர் கண்மூடித்தனமாக கூட்டத்தினரை நோக்கி சுட்டதில் ஒரு குழந்தை உள்பட 15 பேர் பலியானார்கள்.

இந்த பயங்கரவாதச் செயல் பற்றிய செய்தி சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து, உயரமான மற்றும் குண்டான ஒரு நபர் காரின் பின்னாலிருந்து ஓடிவந்து, துப்பாக்கி வைத்திருந்த இருவரில் ஒருவரின் மீது பாய்ந்து, அவரிடமிருந்த துப்பாக்கியை பறித்தார். ஆனால், மற்றொரு நபர் துப்பாக்கியால் சுடவே அவர் குண்டுக்காயங்களுடன் தப்பினார்.

துப்பாக்கி ஏந்திய அந்த நபர், நிராயுதபாணியாக இருந்த மக்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டார். கண்ணுக்கு கண் என்பது நம்மில் பலருக்கு உள்ளுணர்வாக பதிந்துள்ளது. எனவே எப்போதும் போல எழுந்த முதல் குரல் “அவரைச் சுடுங்கள்” என்பதுதான். ஆனால், ஆயுதப் பயிற்சி பெறாத சாதாரண ஒருவரால் துப்பாக்கியால் ஒருவரை சுட்டு வீழ்த்த முடியாது என்பதை உணர முடிந்தது. எனினும் பயங்கரவாதியை பிடிக்க துணிச்சலாகச் சென்ற நபர், நல்லவேளையாக உடலில் குண்டுக்காயங்களுடன் தப்பினார். இதில் வினோதமானது என்னவென்றால் அவர் சிரியாவைச் சேர்ந்த முஸ்லிம் என்பதுதான். பல யூதர்களைக் காப்பாற்ற தனது உயிரை பணயம் வைத்தவர். அவரது பெயர் அகமது என்பதும், சிட்னியில் பழக்கடை உரிமையாளர் என்பதும் தெரியவந்தது. துப்பாக்கிச்சூடு நடத்திய இருவரும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். காசாவில் தினமும் அப்பாவி பாலஸ்தீனர்கள் கொல்லப்படுவதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இந்த பயங்கரவாதச் செயலில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

புவிசார் அரசியலை நாம் விட்டுவிடுவோம். ஆனால், உலகைச் சுற்றி நடக்கும் வன்முறையை குறைந்தபட்சம் நாம் பயங்கரவாதச் செயல்கள் என்று சொல்லலாம். முதல் கட்டமாக போர் மற்றும் ராணுவ நடவடிக்கைகள் மூலம் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுக்கு அரசின் ஆதரவு உண்டு. அதற்கு இரண்டு உதாரணங்கள் உக்ரைன் மற்றும் பாலஸ்தீனத்தில் நாம் பார்ப்பது. அத்துடன் உலகில் அமெரிக்கா மற்றும் வேறுசில பகுதிகளில் பள்ளிகள் உள்ளிட்ட பொது இடங்களில் அவ்வப்போது நடக்கும் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள். துப்பாக்கிகளை வைத்திருப்பதை எளிதாக்கும் சட்டங்கள்தான் இவற்றுக்கு காரணம். இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஒப்புதல் இல்லாவிட்டாலும் வன்முறைக்கு ஆதரவு கிடைப்பதுதான். இதற்கு வசதி செய்து தருவது யார்? இந்த நாடுகளில் உள்ள குடிமக்கள் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் இந்த துப்பாக்கிகளை தாராளமாக வைத்திருப்பதற்கான சட்டங்களையும், போர்களையும் ஆதரிப்பதுதான். இது நமக்கு கோபத்தைவிட வருத்தத்தையே அளிக்கிறது. நாம் எந்த வகையான மக்களாக மாறி வருகிறோம் என்பதைப் பற்றி இது நிறைய கூறுகிறது. இதில் மோசமான விஷயம் என்னவென்றால், வன்முறை அல்லது அரசு ஆதரவிலான படுகொலைகளை கண்டிப்பதில் நாம் தேர்ந்தெடுத்து செயல்படுவதுதான். நமது அரசியல் மற்றும் கொள்கைகளைப் பொறுத்து நமது செயல்பாடுகள் மாறுபடுகின்றன.

இந்தச் சூழலில்தான், இதன் பின்னணியில்தான் ரோட்டரியின் அமைதிக்கான தளராத, உணர்ச்சிபூர்வமான தேடல் விலைமதிப்பற்றதாகிறது. உலகெங்கிலும் உள்ள மூத்த ரோட்டரி தலைவர்கள் அமைதியை நிலைநாட்டும் விஷயத்தில் வெறும் சொற்பொழிவுகள் மற்றும் வாய்ப்பேச்சு பிரசங்கங்கள் மட்டுமல்லாமல், தங்கள் பணத்தையும் முதலீடு செய்கிறார்கள். உறுதியான செயல்பாடுகள், அறிஞர்களின் நிபுணத்துவம், அமைதி மையங்களை நிறுவி நிதியளிப்பது, தந்திரமான சூழ்நிலைகளிலும், இடங்களிலும் அமைதியை நிலைநாட்ட எப்படி பேச்சுவார்த்தை நடத்துவது என்பது குறித்து இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பது என அமைதி முயற்சியை மேம்படுத்துவதில் RI உறுதியாக உள்ளது.

இந்த ஜனவரியில் புனேவில் அடுத்த ரோட்டரி அமைதி மையம் திறக்கப்படுவதில் இந்திய ரோட்டேரியன்கள் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ள வேண்டும். தேசப்பிதா காந்திஜியின் அமைதி மற்றும் அகிம்சை மந்திரத்தை நாம் மீண்டும் பின்பற்ற வேண்டிய தேவை உள்ளது கடவுளுக்கும் தெரியும். இந்த முயற்சிக்கு நல்ல அதிர்ஷ்டமும் கடவுளும் துணை நிற்கட்டும். இந்த அமைதி மையத்துக்கு வெற்றி, பாராட்டு, வாழ்த்துக்கள். நமது மதிப்பிற்குரிய காந்திஜியின் அமைதி மற்றும் அகிம்சை மந்திரத்தை நாமும் மீண்டும் ஒருமுறை பின்பற்ற வேண்டும் என்பது கடவுளுக்குத் தெரியும்! இந்த அமைதி மையத்திற்கு நல்வாழ்த்துக்கள்!

ரஷீதா பகத்

ADVT.




Rotary Club of VIRUDHUNAGAR

UNITE FOR GOOD






# PROJECT PUNCH

Celebrating 3 Key highlights

## LESSONS TURNING INTO RESULTS

Ms. Karunyashri S, Department of ECE, V.V. College of Engineering, Tisayanvillai, Tirunelveli, Tamil Nadu, has been placed in INFOSYS — one among only 214 selected from 2,300 candidates.

She attributes her success to Project Punch, which provided her the first platform to speak confidently in English, laying the foundation for her placement success.

## Project Punch A 3-day Spoken English programme



( Sponsored by IDHAYAM Edible Oils and executed by Beehive Communication Club in association with RID 3212) attains a milestone achievement.

## FIRST-TIME EVER

Project Punch – Edition 139 marked a milestone by welcoming Dental students for the first time.

We are proud to have delivered Spoken English training to the future dentists of K.S.R. Institute of Dental Science and Research, Tiruchengode, Tamil Nadu.

**As on December 13, 2025**

No. of Occurrences **139**

No. of Beneficiaries **15,411**

## A DISTINCTIVE ADVANTAGE

1615 students have benefited from 40 factory visits to IDHAYAM Edible Oils, gaining valuable industrial exposure and leadership insights through direct interaction with PDG Rtn. AKS V. R. Muthu.

LEKHA ads/Jan 26/ Rotary/NTEN



**Do you wish to Host Project Punch?**

**Contact:**

Project Chairman
Rtn. A.Shyamraj - 97502 07464

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

# RI இயக்குனர் செய்தி



# ஒளிர்வோம், வளர்வோம்!

2026 ஆண்டு பிறக்க இருக்கும் வேளையில், நன்றி சொல்லும் இதயங்களுடனும், புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்துடனும் ரோட்டரிக்கு சேவை செய்வோம். எனக்கு ரோட்டரி என்பது ஒளியின் இயக்கம். ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒளிச்சுடரை ஏந்திச் செல்பவர்கள். இந்த ஒளியை பிரகாசிக்கவிட்டால் ரோட்டரி ஒளிரும். அந்த ஒளியை பரவலாக பகிர்ந்து கொள்ளும்போது ரோட்டரி வளரும். AKS உறுப்பினரான பின் நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன். ஒருவேளை நான் வேகத்தை குறைக்கலாம், இதர ரோட்டரி வேலைகளில் கவனம் செலுத்தலாம் என்று. ஆனால், ஒருதருணம் வந்து எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

எனது தாய் சங்கமான பெல்நகர ரோட்டரி சங்கம், திருச்சிராப்பள்ளியிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள மணப்பாறையில் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற உலகளாவிய மானியத் திட்டதொடக்க விழாவுக்கு என்னை அழைத்திருந்தது. அந்த மருத்துவமனை ஏறக்குறைய 80 கிராம மக்களுக்கு சேவை செய்து வருகிறது. ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கான தாய்மார்களை பிரசவத்துக்கு அழைக்கிறது. ஆனால், பல ஆண்டுகளாக அங்கு பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவு சரிவர செயல்பட வில்லை. பிறக்கும் சிசுக்கள் நோய்வாய்ப்பட்டால், மேல் சிகிச்சைக்காக திருச்சிக்குத்தான் செல்ல வேண்டும். மனதை நெருடும் விஷயம் என்னவென்றால் குழந்தைகள் சிகிச்சைக்குச் செல்லும் வழியிலேயே இறந்து விடுவதுதான்.

ரோட்டரியின் சர்வதேச மானியத்தால், பச்சிளங் குழந்தைகள் வார்டில் குழந்தைகள் உயிர்காக்கும் கருவிகள் நிறுவப்பட்டன. இதனால் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான சிசுக்களின் உயிர்கள் காப்பாற்றப் பட்டுள்ளன. உடைந்து போகும் நிலையில் இருந்த குழந்தைகள், உறுதியுடன் சுவாசித்து வளர்வதைக் கண்டு அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன். இதுதான் ரோட்டரியின் மாயாஜாலம். இந்த அனுபவம் எனக்கு பொதுவாழ்வில் ரோட்டரியின்  சக்தி என்ன என்பதை நினைவுபடுத்தியது.

ரோட்டரி, உறுப்பினர்கள், அறக்கட்டளை மற்றும் சேவை இவற்றின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் பொது மக்கள் வைத்திருக்கும் நன்மதிப்புதான். இந்தியாவின் மக்கள் தொகையில் 83 சதவீம் பேர் ரோட்டரி பற்றி அறிந்திருக் கிறார்கள். ஆனால், விழிப்புணர்வு இருந்தால் மட்டும் போதாது. புரிதல்தான் உண்மையிலேயே முக்கியமானது. ரோட்டரி என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்பதை மக்கள் அறிவார்கள். அந்த வகையில் இந்தியா உலகில் முன்னிலையில் இருக்கிறது. 73 சதவீதம் பேர் புரிதலுடன் இருக்கிறார்கள்.

நாரா மலர்-வாசனையில்லாத பூக்கள் என்று திருக்குறள் கூறுகிறது. அதன் பொருள் மிக அழகான பூக்கள்கூட வாசனை இல்லாவிட்டால் நறுமணத்தை இழந்துவிடுகிறது. அதேபோல நாம் ரோட்டரியில் எவ்வளவு சாதித்தாலும்-நாம் செய்தவேலை தெரியவில்லை என்றால், நமது ஒளி பிறரை சென்று அடையாவிட்டால் - அது வாசனை இல்லாத பூக்களைப் போன்றதாகும்.

இன்டராக்ட் மற்றும் ரோட்ராக்ட் மூலம் நாம் ரோட்டரியின் கதையை புதிய தலைமுறையினரிடம் எடுத்துச் சென்றுள்ளோம். நம் போலியோ ஒழிப்பு முயற்சியும், இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும் ரோட்டரியின் பெயரை அங்கீகரிக்கப்பட்ட மதிக்கத்தக்க பெயராக மாற்றியுள்ளது. 2026-ல் ரோட்டரியின் நற்பெயரை பெரிய அளவில் கொண்டாடுவதை நாம் உறுதிசெய்வோம்.

பகிர்ந்துகொள்ளப்படும் ஒவ்வொரு புகைப்படமும், ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு மனிதக் கதைகளும் — நறுமணத்தை கூட்டுவதுபோல் ரோட்டரிக்கு பெருமை சேர்க்கட்டும். மக்களிடம் ரோட்டரி மீதான நன்மதிப்பு உயர்ந்தால், ரோட்டரி தானாக வளரும். எனவே அன்பு நண்பர்களே, இந்த புத்தாண்டில் நாம் அடியெடுத்து வைக்கும்போது, நமது திட்டங்கள் ஓங்கி ஒலிக்கட்டும், நமது கதைகள் பரவலாக பேசப்படட்டும்.

**M முருகானந்தம்**
RI இயக்குனர் 2025–27

TRF
**தலைவரிடமிருந்து...**



# நீடித்த மாற்றம்

**நைஜீரியாவில் ஆரோக்கியமான குடும்பங்களுக்கான ஒன்றாக, அறக்கட்டளையின் அளவிலான திட்டங்களில் ஒன்று இந்த தொலைநோக்கை உள்ளடக்கியது. நைஜீரியாவைச் சேர்ந்த ரோட்டேரியனும், இனப்பெருக்கம், தாய்-சேய் நலத்திற்கான ரோட்டரி செயல்குழு இணை நிறுவனருமான டோலாபோ லூஃபாதேஜுவிடம் இந்த மாடல் எப்படி வெற்றிகரமாக உள்ளது என்பதை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டேன்.**

*நைஜீரியாவில், 2022-ல் தொடங்கப்பட்ட ஆரோக்கியமான குடும்பங்களுக்கான திட்டம் தாய் மற்றும் சிசுக்கள் இறப்பை 25 சதவீதம் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. அவசரகால மகப்பேறியல், பிறந்த குழந்தைகள் பராமரிப்பு, முறையான மகப்பேறு நடைமுறைகள் மற்றும் நீண்டகாலம் செயல்படும், மீட்கப்படும் கருத்தடை முறைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார விரிவாக்கப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.*

*மிக முக்கியமான அம்சம் என்ன வென்றால் சமூக ஈடுபாடு. பாரம்பரிய, மதம் மற்றும் இளம் தலைவர்களுடன் நாங்கள் உரையாடல் நடத்துகிறோம். கூட்டு மருத்துவச் சேவை மற்றும் வீட்டு வருகைகளுக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். ரோட்டரி உருவாக்கியுள்ள வழிமுறைகளை ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாநில சுகாதார அமைச்சகம் பின்பற்றி வருகிறது.*

*எங்கள் மின்னணு தரவு-கண் காணிப்பு அமைப்பு தாய்-சேய் இறப்புகளை சிறப்பாக கண்காணிக்க அனுமதிக்கிறது. குறிப்பாக எங்களது சமூக அடிப்படையிலான நடைமுறைகள் இப்போது வீட்டு பிரசவங்களின் போது தாய் இறப்பதை கண்காணிக்கிறது. முன்பு இவற்றை கண்காணித்து அளவிட முடியாமல் இருந்தது.*

*மிக முக்கியமாக, பிரசவத்தின்போது தாய்மார்கள் இறப்பது 20 சதவீதமும், சிசுக்கள் இறப்பு 28 சதவீதமும் குறைந்துள்ளது. அதேபோல பிரவசத்துக்குப் பின் மருத்துவமனைக்கு ஆலோசனைக்கு வருவது 10 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*நான் நடவடிக்கை குழுவில் உறுப்பினராக உள்ளேன். மேலும் இந்த திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுவதற்கு நீண்டகாலத்துக்கு முன்பே, அதாவது 20 ஆண்டுகளுக்கு மேலாக இத்திட்டத்தை பின்பற்றி வருகிறேன். நவம்பரில் மருத்துவச்சிகள் மற்றும் சுகாதார ஊழியர்கள் கொண்ட குழுவின் அர்ப்பணிப்பான பணி, சேவைகளையும் நான் நேரில் பார்வையிட்டேன்.*

*ரோட்டரியின் அர்ப்பணிப்பும், உத்திகளுடனான கூட்டாண்மையும் இணையும்போது எது சாத்தியம் என்பதை இந்த பரிணாம வளர்ச்சி காட்டுகிறது. இந்த திட்டத்தின் வெற்றி, நைஜீரியாவைச் சேர்ந்த பெரு நன்கொடையாளர் சர் எமேகா ஓஃப்பர் 5 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்யத் தூண்டியது. மேலும் இந்த முயற்சியை விரிவுபடுத்த அனுமதித்தது. இதர நாடுகளும் இந்த மாதிரியை கடைப்பிடிப்பதில் ஆர்வமாக உள்ளன.*

**ரோட்டரி அறக்கட்டளைக்கு நீங்கள் செய்யும் ஒவ்வொரு பங்களிப்பும் உங்களின் தாராள மனப்பான்மையால் உலகில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியை அறக்கட்டளைக்கு அளிக்கிறது.■**

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

RID 2981 லியோன் J
RID 2982 சிவசுந்தரம் P
RID 3000 கார்த்திக் J
RID 3011 ரவீந்தர் குக்னானி
RID 3012 அமிதா அனில் மொஹிந்த்ரு
RID 3020 கல்யாண் சக்ரவர்த்தி Y
RID 3030 தியானேஷ்வர் P ஷேவாலே
RID 3040 சுஷில் மல்ஹோத்ரா
RID 3053 நிஷா ஷெகாவத்
RID 3055 நிகம்குமார் L சௌத்ரி
RID 3056 பிரக்யா மேத்தா
RID 3060 அமர்தீப் சிங் புனெட்
RID 3070 ரோஹித் ஓபராய்
RID 3080 ரவி பிரகாஷ்
RID 3090 பூபேஷ் மேத்தா
RID 3100 நிதின்குமார் அகர்வால்
RID 3110 ராஜன் வித்யார்த்தி
RID 3120 அசுதோஷ் அகர்வால்
RID 3131 சந்தோஷ் மதுகர் மராத்தே
RID 3132 சுதீர் V லத்தூர்
RID 3141 மணீஷ் மோத்வானி
RID 3142 ஹர்ஷ் வீரேந்திர மகோல்
RID 3150 ராம் பிரசாத் S V
RID 3160 ரவீந்திரா M K
RID 3170 அருண் டேனியல் பண்டாரே
RID 3181 ராமகிருஷ்ண P கண்ணன்
RID 3182 பலாக்ஷா K
RID 3191 ஸ்ரீதர் B R
RID 3192 எலிசபெத் செரியன் பரமேஷ்
RID 3203 தனசேகர் B
RID 3204 பிஜோஷ் மானுவல்
RID 3205 ரமேஷ் G N
RID 3206 செல்லா K ராகவேந்திரன்
RID 3211 டினா ஆண்டனி குன்னும்கல்
RID 3212 தினேஷ் பாபு J
RID 3231 சுரேஷ் V
RID 3233 தேவேந்திரன் D
RID 3234 வினோத்குமார் சரோகி
RID 3240 காமேஸ்வர் சிங் எலங்பம்
RID 3250 நம்ரதா
RID 3261 அமித் ஜெயஸ்வால்
RID 3262 மனோஜ்குமார் திரிபாதி
RID 3291 ரமேந்து ஹோம்சௌதுரி



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

M முருகானந்தம் RID 3000
RI Director &
Chairman, Rotary News Trust

KP நாகேஷ் RID 3191
RI Director

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF Trustee

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மகாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3234

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3234

ராஜு சுப்ரமணியன் RID 3141

அனிருதா ராய்சௌத்ரி RID 3291

குலாம் A வானதி RID 3141

**செயற்குழு உறுப்பினர்கள்** (2025–26)

ரோஹித் ஒபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர் ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF அறங்காவலர் செய்தி**



# ரிப்பன் உறுதிப்பாடு

ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடை அளிப்பது உலகெங்கிலும் நமது சமூகத்தினர் சந்தித்து வரும் நெருக்கடியான சவால்களை நிவர்த்தி செய்யும் சேவைத்திட்டங்களை ஆதரிப்பதற்கான ஒரு வழியாகும். உண்மையில் உலகில் நன்மை செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் சமூக தன்னார்வலர்களின் (ரோட்டேரியன்கள்) உலகளாவிய வலையமைப்பிற்கு பங்களிக்க TRF உங்களை அனுமதிக்கிறது.

போலியோவை ஒழிப்பதற்காக அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற நாம் TRF-க்கு நன்கொடை அளிக்கிறோம். இந்த பயணம் நீண்டது மற்றும் சவாலானது. ஆனால், இன்று நாம் போலியோ இல்லாத உலகத்தை உருவாக்குவதில் நெருங்கி வந்துள்ளோம். நமது முயற்சியை இரட்டிப்பாக்க வேண்டிய தருணம் இதுதான். போலியோவை இப்போதே ஒழிப்போம் என்ற பிரசாரம் பணம் திரட்டுவதற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து, தடுப்பூசி போடுவதும், எதிர்கால சந்ததியினர் என்றென்றும் போலியோவிலிருந்து விடுபடுவதை உறுதிசெய்வதும் ஆகும்.

இன்றைய வருடாந்திர நிதியை ஆதரிப்பது நாளைய உலகளாவிய மானியங்களை அளிக்க எங்களுக்கு உதவுகிறது. கடந்த 107 ஆண்டுகளில் அறக்கட்டளை வாழ்க்கை மாற்றத்திற்காகவும், நிலையான திட்டங்களுக்காகவும் 5 பில்லியனுக்கும் அதிகமான டாலர்களைச் செலவிட்டுள்ளது.

அறக்கட்டளை நிதியை ஆதரிப்பது நமது ரோட்டரி அறக்கட்டளைக்கு பிரகாசமான நாளை உறுதிசெய்கிறது. அறக்கட்டளை நிதியை அதிகரிப்பதன் மூலம், ரோட்டரி நம் வாழ்நாளுக்கு அப்பாலும் உலகில் நன்மை செய்ய முடியும் என்பதை உறுதி செய்ய முடியும்.

எனது நண்பர்களே, நாம் TRF-க்கு கொடுக்கும்போது அதனால் பயனடையப்போவது யார் என்பது நமக்குத் தெரியாது. பயனாளி உலகில் எந்தப் பகுதியில் இருக்கிறார் என்பதும் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். பயனாளியின் ஆசீர்வாதம் உங்களுக்கு எப்போதும் கிடைக்கும்.

அன்பு வாசகர்களே, ரோட்டரி மீதான உங்கள் அர்ப்பணிப்புக்கு நன்றி. உங்களைப் போன்ற ரோட்டரி உறுப்பினர்கள் தான் நமது அமைப்பின் இதயம். மேலும் உங்கள் அக்கறை, கருணை மற்றும் தாராளமனப்பான்மை ஆகியவை TRF-ன் செயல்பாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனவே உங்கள் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பூங்கொத்துடன் நான் இங்கே இருக்கிறேன். உங்கள் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை உங்களுக்கு நினைவூட்டவும் நான் இங்கிருக்கிறேன். இந்த ஆண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் TRF-க்கு தயக்கமில்லாமல் கொடுப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துகள்!

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்



பூரிகள் தயாரிக்கப்படுகின்றன.



Rotary PEOPLE OF ACTION

# பசியைப் போக்க 28 ஆண்டுகால கருணை முயற்சி

ரஷீதா பகத்

ஒரு தனி மனிதனின் தொலைநோக்குப் பார்வை, கருணை, அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வம், அத்தோடு தாராள மனப்பான்மை ஆகியவை ஒரு சமூகத்தில் உள்ள நூற்றுக்கணக்கான ஏழை மக்களின் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை, RID 3030-ன் கீழ் உள்ள ரோட்டரி கிளப் ஆஃப் தியோலாலியின் முன்னாள் தலைவர் மகாராஜ் K பிர்மானியின் கதையிலிருந்து அளவிட முடியும்.

28 ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் 24 அன்று, 40 ஆண்டுகளாக அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியராகவும், IIT காரக்பூர் பட்டதாரியாகவும், நாசிக் மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க தொழிலதிபராகவும் திகழும் மகாராஜ், நகரில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் நிலைமையைக் கண்டு மனம் வருந்தினார். அவர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு காலையிலும் வெறும் வயிற்றுடன் வேலைக்கு வந்தனர். அதிகாலையிலேயே வேலைக்குச் செல்ல வேண்டியிருந்ததால், அவர்களுக்கு காலை உணவோ அல்லது மதிய உணவோ தயாரிக்க நேரமில்லை. இதைக் கருத்தில் கொண்டு அவர் ஒரு 'பூரி-பாஜி' மையத்தை அமைத்தார்.

பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு அமைப்புகள் சார்ந்த வெற்றிகரமான தொழிலை நடத்தி வந்த மகாராஜ், நகரில் உள்ள வசதி குறைந்த மற்றும் ஏழை மக்களைப் பற்றி மிகவும் கவலைப்பட்டார். 1990-களில் அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தன. நகரில் உள்ள பல கட்டுமானத் தொழிலாளர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருந்தனர். ஏழைகள் மீதான அவரது அக்கறையும், அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற விருப்பமும், ஏழைகளுக்கு உணவளிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளித்த ஆன்மீக குரு சுவாமி சிவானந்தருடனான அவரது தொடர்பிலிருந்து வந்தது. இது மகாராஜின் சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

எனவே, ஊட்டச்சத்து குறைபாடுகள் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, ஆரம்பத்தில் மகாராஜ் ஒரு மருத்துவ மையத்தைத் தொடங்கினார். அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருந்துகள் வழங்கப்பட்டன.

மருந்துக்காக இங்கு வந்த பெரும்பாலான நோயாளிகள் மிகவும் மெலிந்து மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருப்பதை கவனித்த மகாராஜ், இந்த மக்களுக்கு பால் மற்றும் வாழைப்பழங்களை இலவசமாக விநியோகிக்கத் தொடங்கினார். ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு, இது அவர் எதிர்பார்த்த



முடிவுகளைத் தரவில்லை என்பதை அவர் கவனித்தார். மருத்துவர்கள் மற்றும் உணவு நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த போதுமான ஊட்டச்சத்தே ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்தார். அடுத்து, ஏழைகளுக்கு சத்தான உணவளிக்க என்ன செய்யலாம் என்று அவர் தனது சங்க உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தார்.

பல்வேறு விருப்பங்கள் விவாதிக்கப்பட்டு, இறுதியாக பூரி-பாஜி தயாரித்து வழங்கும் இடத்தை அமைக்கும் யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இதைச் சொல்வது எளிது, செய்வது கடினம். மே 1996-ல் மகாராஜ் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கினார், இதில் பாஜியுடன் நான்கு பூரிகள் பரிமாறப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.


மதக் காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட பிரிவினர் வெங்காயம் அல்லது பூண்டு உட்கொள்ளாததால், அவை இல்லாமல் பாஜி தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. இறுதியாக ஒரு செய்முறை முடிவு செய்யப்பட்டது. அதன்படி உருளைக்கிழங்கு, உளுத்தம் பருப்பு, பச்சை மிளகாய், மஞ்சள் தூள்,



*பூரி-பாஜி மையத்தில் RC தியோலாலியின் முன்னாள் தலைவர் J சுந்தரராமன்.*










*மகாராஜ் பிர்மானி மற்றும் அவரது மனைவி ரோமா.*






கறிவேப்பிலை மற்றும் கடுகு ஆகியவற்றைப் பயன்படுத்தி பாஜி தயாரிக்கப்பட்டது.

இதன் விளைவாக உருவான உணவு ஏழைகளிடையே உடனடியாக பிரபலமானது. 28 ஆண்டுகள் கடந்தும், அதன் பொருட்கள் அல்லது அசல் செய்முறையில் எந்த மாற்றமும் செய்யப்படாமல் இருப்பதை உறுதி செய்ய மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. பாக்கெட்டின் விலை மற்றும் அதன் கலவை மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது... பூரிகள் 4-லிருந்து 5-ஆக உயர்ந்துள்ளன. மானியம் வழங்கப்பட்டாலும், கடந்த 28 ஆண்டுகளில், ஒரு பாக்கெட்டின் விலை ஆரம்பத்தில் இருந்த 3 ரூபாயிலிருந்து 5, 7 மற்றும் இப்போது 10 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டியிருந்தது. சராசரியாக ஒரு தொழிலாளி ஒவ்வொரு நாளும் 4 முதல் 5 பாக்கெட்டுகளை வாங்குகிறார், இது அவரது குடும்பத்திற்கு போதுமானது.

ஒரு ஏழை நபரால் ஒரு பாக்கெட்டுக்கு 10 ரூபாய் கூட

கொடுக்க முடியவில்லை என்றால், அவருக்கு பூரி-பாஜி பாக்கெட் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என்பதே மகாராஜின் நிலையான கொள்கையாக இருந்து வருகிறது. தியோலாலியில் யாரும் பசியோடு தூங்கக்கூடாது என்பதே அவர்களது தாரக மந்திரம். மானியம் மற்றும் இலவசங்களால் ஏற்படும் நஷ்டத்தை அவரே ஏற்றுக்கொள்கிறார் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. இதற்கான தொகை மாதம் ஒரு லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேல் ஆகிறது.

ஆண்டுகள் கடந்தும், சுவை அப்படியே இருக்கிறது... இதன் விளைவாக, ஏழைகள் மற்றும் எளியவர்கள் மட்டுமல்லாமல், கார்களில் வருபவர்கள் கூட எங்கள் பூரி-பாஜி பாக்கெட்டுகளை வாங்க வரிசையில் நிற்கிறார்கள், காரணம் அதன் சுவை அவ்வளவு நன்றாக இருக்கிறது," என்று பூரி-பாஜி மையத்தில் தன்னார்வலராகப் பணியாற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் J சுந்தரராமன் கூறுகிறார். மகாராஜ் மற்றும் அவரது மனைவி ரோமா ஆகியோரால் நடத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, நிதியளிக்கப்பட்டாலும், இந்தத் திட்டம் தியோலாலி ரோட்டரி சங்கம் மற்றும் அதன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 18 கி.மீ தொலைவில் உள்ள நாசிக் நகரிலிருந்தும் மக்கள் பூரி-பாஜி பாக்கெட்டுகளை வாங்க இங்கு

*ஆண்டுகள் கடந்தும், சுவை அப்படியே இருக்கிறது... இதன் விளைவாக, கார்களில் வருபவர்கள் கூட எங்கள் பூரி-பாஜி பாக்கெட்டுகளை வாங்க வரிசையில் நிற்கிறார்கள்.*

**J சுந்தரராமன்**
*முன்னாள் தலைவர்,*
RC *தியோலாலி*



*ரோமா பிர்மானி மையத்தில் பூரிகளைப் பொரித்துக் கொண்டிருக்கிறார்.*



வருகிறார்கள்! இதற்குத் தெளிவாகக் காரணம், நல்ல தரமான மாவு மற்றும் உருளைக்கிழங்குகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன, மேலும் பூரி பொரிக்கப் பயன்படுத்தப்படும் எண்ணெய் மீண்டும் ஒருபோதும் பயன்படுத்தப்படுவதில்லை. ஒரு சிறிய இடத்தில், இத்தகைய சுகாதாரமான நடைமுறைகளைப் பற்றிய செய்திகள் காட்டுத்தீ போல பரவுகின்றன!

பூரி-பாஜி மையம் பெரிய வெற்றியைப் பெற்று உள்ளூர் மக்களால், குறிப்பாக தினக்கூலி தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது – அவர்கள் காலை மற்றும் மதிய உணவிற்காக ஒரு சில பாக்கெட்டுகளை எளிதாக வாங்க முடிந்தது. இருப்பினும், ஆரம்ப ஆண்டுகளில், இத்திட்டம் உள்ளூர் உணவக உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளிடமிருந்து சில எதிர்ப்புகளைச் சந்தித்தது. இது தங்கள் வருமானத்தைக் குறைத்துவிடும் என்று அவர்கள் பயந்தனர்.

அவர்களிடமிருந்து மகாராஜுக்கு மிரட்டல் அழைப்புகள் வந்தன. ஆனால் கருணையுள்ள அந்த தொழிலதிபர், இந்த சவாலைக் கண்டு அஞ்சாமல், பணிவையும் கண்ணியத்தையும் வெளிப்படுத்தினார். இந்தத் திட்டத்தை எதிர்த்த அனைவரையும் அவர் சந்தித்து, இதன் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கத்தை விளக்கினார். ஊட்டச்சத்து இல்லாமை காரணமாக தங்கள் ஊரில் உள்ள ஏழை மக்கள் நோய்வாய்ப்படக்கூடாது அல்லது பணம் இல்லாததால் பசியோடு இருக்கக்கூடாது என்பதே அவரது ஒரே குறிக்கோளாக இருந்தது.

ஏற்கனவே இருக்கும் வணிகங்களைப் பாதிக்கும் வகையில் பணம் சம்பாதிப்பதோ அல்லது உணவுத் தொழிலைத் தொடங்குவதோ அவரது நோக்கம் இல்லை என்பது தெளிவானதும், சூழ்நிலை மாறத் தொடங்கியது. மறைந்த டாக்டர் அருண் சுவாதி சங்கத் தலைவராக இருந்த காலத்தில் ஒரு முழு அளவிலான திட்டம் தொடங்கப்பட்டது. இதற்கு ப்ராஜெக்ட் ரோட்டரி ஸ்ரம பரிஹார் என்று பெயரிடப்பட்டது. சத்தான மற்றும்

சுவையான பூரி-பாஜி உணவின் விலை அப்போது 3 ரூபாய் மட்டுமே. அந்தத் தொகை கூட இல்லாதவர்களுக்கு அது இலவசமாகக் கிடைத்தது.

இந்த முயற்சி மிகப்பெரிய வெற்றியடைந்தது. எந்தளவுக்கு என்றால், இரண்டு ஆண்டுகளுக்குள் மகாராஜின் மருத்துவ மையம் மூடப்பட்டது. ஏனெனில் மக்களுக்கு சிகிச்சை அளிக்கவோ அல்லது ஊட்டச்சத்து குறைபாடுகளுக்கான மருந்துகளை வழங்கவோ இனி தேவை இல்லாமல் போனது.

2025-ம் ஆண்டில், இப்போது இரண்டு பூரி-பாஜி மையங்கள் உள்ளன. ஒன்று தியோலாலியிலும் மற்றொன்று அருகிலுள்ள கிராமமான சன்சாரி காவ்னிலும் உள்ளது. இது அந்தப் பகுதி கிராம மக்களுக்கு பயனளிக்கிறது. "இது ஒரு கிளை மையம் போன்றது, அவர்கள் இங்கிருந்து பூரிகளை மொத்தமாக 8 ரூபாய்க்கு வாங்கி 10 ரூபாய்க்கு விற்கிறார்கள்" என்று சுந்தரராமன் கூறுகிறார்.

தியோலாலி ரோட்டரி சங்கம் இந்தத் திட்டத்தில் முழுமையாக ஈடுபட்டு அதை ஆதரிக்கிறது. சங்க உறுப்பினர்களின் பிறந்தநாள்கள் அல்லது திருமண ஆண்டு விழாக்கள்,



## கோவிட் காலத்தில் சேவை

*சுவாரஸ்யமாக, கோவிட் பெருந் தொற்றின் இருண்ட நாட்களில், மற்ற அனைத்து ஹோட்டல்களும் உணவகங்களும் கட்டாயமாக மூடப்பட்ட நிலையில், உள்ளூர் அரசாங்க சுகாதார அதிகாரிகளால் செயல்பட அனுமதி வழங்கப்பட்ட அரிய உணவகங்களில் தியோலாலியில் உள்ள இந்த பூரி-பாஜி மையமும் ஒன்றாகும். "அந்த நாட்களில் இந்த மையம் சமூகத்திற்குச் சேவை செய்வதில் குறிப்பிடத்தக்க மன உறுதியையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியது. அந்த நேரத்தில், தியோலாலியில் உள்ள ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் தங்கள் உணவிற்காக எங்களை பெரிதும் நம்பியிருந்தார்கள், நாங்கள் அவர்களைக் கைவிடவில்லை. மகாராஜ் பிர்மானி அவர்களால் தொடங்கப்பட்டு நிர்வகிக்கப்படும் இந்த மையத்தில் கடந்த 28 ஆண்டுகளாகத் தன்னார்வலராகப் பணியாற்றி வரும் RC தியோலாலியின் முன்னாள் தலைவர் J சுந்தரராமன் கூறுகையில், "சில ரோட்டேரிய தன்னார்வலர்கள் காலையில் வந்து, மையத்தில் பணிபுரியும் இளைஞர்களின் உதவியுடன், அந்த சவாலான காலங்களில் 100 பூரி-பாஜி பாக்கெட்டுகளை எடுத்துச் சென்று மக்களின் வீட்டு வாசலிலேயே விநியோகிப்பார்கள்," என்கிறார்.*

*கோவிட் காலத்தில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த இந்த மையம், வள்ளல் மகாராஜ் பற்றி மட்டுமல்லாமல், அவரது ரோட்டரி சங்கம் பற்றியும் சமூகத்தில் மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் புகழ் தியோலாலியைத் தாண்டி பரவியுள்ளது. எனவே இந்த சங்க உறுப்பினர்களைத் தவிர, நாசிக் நகரத்தைச் சேர்ந்த வசதியானவர்கள் கூட தங்கள் மறைந்த அன்புக்குரியவர்களின் நினைவாகவோ அல்லது பிறந்த நாளிலோ ஏழைகளுக்கு பூரி-பாஜி பாக்கெட்டுகளை தானம் செய்கிறார்கள்.*

*அத்தகைய நாட்களில், அனைவருக்கும் கூடுதல் இனிப்புகள் அல்லது வாழைப்பழங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த மையம் தினமும் பசுக்கள் மற்றும் தெரு நாய்களுக்கும் உணவளிக்கிறது. மிகக் குறைந்த வருமானம் கொண்ட அல்லது வருமானமே இல்லாத 100 பேருக்கு மாதம் ரூ.750 மற்றும் ரூ.1,000 மதிப்புள்ள ரேஷன் பொருட்களை வழங்குவதன் மூலம் மகாராஜ் பிர்மானி அவர்களைப் பராமரித்து வருகிறார். கடந்த 15 ஆண்டுகளாக அவர் இதைச் செய்து வருகிறார்.*

*இதோடு சேர்த்து, அவர் ஒரு பல்நோக்கு மருத்துவ மையத்தையும் நடத்தி வருகிறார். அங்கு அலோபதி, ஹோமியோபதி, ரெய்கி, அக்குபஞ்சர் போன்ற கிட்டத்தட்ட அனைத்து மருத்துவ முறைகளும் நடைமுறையில் உள்ளன. மேலும் பிசியோதெரபியும் வழங்கப்படுகிறது. மருந்துகள் உட்பட அனைத்தும் இலவசம். ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமையும் இந்த மருத்துவ மையத்தில் கண்புரை அறுவை சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப்படுகின்றன.*






*மகாராஜ் பிர்மானி மையத்தில் நடைபெறும் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.*

சம்பந்தப்பட்ட உறுப்பினர் இந்த மையத்திலிருந்து இரண்டாயிரம் பூரி-பாஜி பாக்கெட்டுகளை வாங்கி சமூகத்தில் உள்ள ஏழைகளுக்கு விநியோகிப்பதன் மூலம் கொண்டாடப்படுகின்றன. இந்த மையத்தில் எட்டு பெண்களும் இரண்டு இளைஞர்களும் பணிபுரிகின்றனர். பெண்கள் பூரி தேய்த்து பொரிக்கிறார்கள் மற்றும் பாஜி தயார் செய்கிறார்கள். ஆண்கள் தேவைப்படும்போது வீடுகளுக்குச் சென்று விநியோகிப்பது உட்பட மற்ற வேலைகளைச் செய்கிறார்கள். உணவு காலை நேரத்தில் தயாரிக்கப்படுகிறது, மேலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மூன்று மணி நேர வேலைக்காக சுமார் 6,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்த மையத்தில் தினமும் காலையில் ஏறக்குறைய 1,000 பாக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. 300 பாக்கெட்டுகள் இலவசமாக வழங்கப்படும் நிலையில், 700 பாக்கெட்டுகள் 10 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. பல கட்டுமானத் தொழிலாளர்கள் இரண்டு பாக்கெட்டுகளை வாங்குகிறார்கள் - ஒன்று காலை உணவிற்கும் இரண்டாவது மதிய உணவிற்கும்!

1986-ம் ஆண்டு முதல் ரோட்டேரியராக இருக்கும் மகாராஜுக்கு இப்போது 79 வயதாகிறது மற்றும் அவர் டயாலிசிஸ் சிகிச்சையில் உள்ளார். ஆனாலும் அவர் தினமும் மையத்திற்கு வருகிறார். அவரது

மனைவி ரோமா வாரத்திற்கு மூன்று முறை வந்து அவரே பூரிகளைத் தயாரிக்கிறார். மையத்தின் நிர்வாகத்திற்கும் அவரே பொறுப்பேற்றுள்ளார் என்று சுந்தரராமன் கூறுகிறார். “அவர் (மகாராஜ்) இங்கே அமர்ந்து, மிகவும் ஏழ்மையான மக்களுக்கு 20 ரூபாய் கொடுக்கிறார்.”

உணவை பேக் செய்யவும், அனைத்தும் சீராக நடப்பதை உறுதி செய்யவும் சுந்தரராமனே தினமும் மையத்திற்குச் செல்கிறார்... இந்தத் திட்டத்துடனான அவரது ஈடுபாடு அதிகம் இருப்பதற்குக் காரணம், “ஆரம்பத்தில் நான் சங்கத் தலைவராக இருந்தபோதுதான் இது உருவானது” என்று அவர் பெருமையுடன் கூறுகிறார்.

அவரைத் தவிர மற்ற சங்க உறுப்பினரும் செயல்பாடுகளைக் கண்காணிக்க தவறாமல் வருகிறார். மேலும் சங்கத்தின் ரோட்டரி ஆன்ஸ் பலரும் பூரி தேய்க்கத் தாமாக முன்வந்து தங்கள் நேரத்தைச் செலவிடுகிறார்கள்!

இதற்கிடையில், மகாராஜின் வியாபாரம் தொடர்ந்து செழித்து வருகிறது; “அவருக்கு கோவா மற்றும் ஹைதராபாத்திலும் தொழிற்சாலைகள் உள்ளன; நாசிக் மாவட்டத்தில் அதிக வரி செலுத்துபவர்களில் அவரும் ஒருவர். மேலும் அவர் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 2 முதல் 3 கோடி ரூபாய் வரை தர்ம காரியங்களுக்காகச் செலவிடுகிறார்” என்று சுந்தரராமன் கூறுகிறார்.



தொழிலாளர்கள் மற்றும் பிற ஏழை மக்களின் கடினமான வாழ்க்கையில் சிறிது நிவாரணம் அளிக்க ரோட்டரி சங்கங்கள் எவ்வாறு நீண்டகால மற்றும் நிலையான திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதற்கு ரோட்டரி ஸ்ரம பரிஹார் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தியோலாலியில் யாரும் பசியுடன் தூங்கக்கூடாது என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு மகாராஜின் மந்திரமாக இருந்தது. அவர் 28 நீண்ட ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை நடத்தி வருகிறார் என்பது அவரது ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் கவனத்திற்கு ஒரு சான்றாகும். செப்டம்பர் 24, 2025 வரை, இது 1.2 கோடி பூரி-பாஜி பாக்கெட்டு களைத் தயாரித்து விநியோகித்துள்ளது. பசி ஒழிப்புக்காக ரோட்டரி இன்டர்நேஷனல் விருதையும் இத்திட்டம் பெற்றுள்ளது.

உணர்ச்சிவசப்பட்ட சுந்தரராமன் கூறுகிறார், “ஒரு ரோட்டேரியராக இந்தத் திட்டம் தொடங்கிய முதல் நாளிலிருந்து இன்றுவரை நான் சாட்சியாக இருக்கிறேன். என்னை நம்புங்கள், இங்கு தயாரிக்கப்படும் உணவை நம்பியிருக்கும் மக்களுக்கு சேவை செய்ய மையத்தில் சிறப்புத் திறன்கள், அர்ப்பணிப்புள்ள கைகள், பொறுமை மற்றும் கருணை உள்ளங்கள் தேவை.”

பலரைப் போலவே, அவரும் தனது பிறந்தநாள், திருமண நாள் போன்றவற்றைப் பூரி-பாஜி பாக்கெட்டுகளுக்குப் பணம் நன்கொடையாக அளித்து கொண்டாடுகிறார், “ஏனென்றால் அந்தப் பணம் எங்கு செல்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். மகாராஜ் மற்றும் ரோமாவின் சுயநலமற்ற சேவையும் சமூகத்திற்கான அர்ப்பணிப்பும் உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது, அவர்களின் முயற்சிகள் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.”

RC மெட்ராஸ் உறுப்பினரான சத்யன் பட், தனது மனைவி பருலுடன் சமீபத்தில் அந்த மையத்திற்குச் சென்றபோது, மகாராஜ் மற்றும் அவரது ரோட்டரி குழுவினரால் வழங்கப்படும் சேவையைக் கண்டு தான் பெரிதும் நெகிழ்ந்து போனதாகக் கூறினார். “இது மற்ற ரோட்டரி சங்கங்களாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒரு முன்மாதிரி” என்றும் அவர் மேலும் கூறினார்.■

# TEJAS WINGS OF CHANGE தடைகளைத் தாண்டித் துணிச்சலான சேவை

V முத்துகுமரன்

தில்லியில் தேஜஸ் சந்திப்பில் கலந்துகொண்டவர்கள், தடைகளைத் தாண்டி உறுதியுடன் முன்னேறித் தங்கள் சமூகங்களில் சமூகச் சேவையைத் தொடர்ந்த மூன்று சாதனையாளர்களுடைய உண்மையான போராட்டக் கதைகளைக் கேட்டு ஊக்கம் பெற்றார்கள். PRID மகேஷ் கொட்பாகி வழிநடத்திய ஒரு நிகழ்வில் இவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

**புஷ்பா ப்ரியா:** IT பணியாளரான இவர் பார்வைக்குறைபாடுள்ளவர்களுக்கு எழுதிக் கொடுத்து உதவுகிறார். இன்றுவரை இவர் கன்னடம், இந்தி, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மொழிகளில் 1,500 தேர்வுகளை இலவசமாக எழுதிக்கொடுத்துள்ளார்.

**டாக்டர் அபர்ணா தேஷ்முக்:** அறுவைச் சிகிச்சை வல்லுனரான அபர்ணா புணேவில் "அபல்மயா" என்ற முதியோர் இல்லம், மருத்துவப் பராமரிப்பு அமைப்பை நடத்துகிறார். "சுற்றிலும் ஈக்கள், உடல் முழுக்கப் படுக்கைப் புண்களுடன் ஒரு மூதாட்டி சாலையோரத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்த போது, ஒரு முதியோர் இல்லத்தைத் தொடங்கத் தீர்மானித்தார்.

அவர் திருமணம் செய்துகொள்வதில்லை என்றும், கைவிடப்பட்ட முதியோர்கள், ஆதரவற்றவர்களைக் கவனித்துக்கொள்வதற்காகத் தன் வாழ்க்கையை ஒப்படைத்துவிடுவது என்றும் தீர்மானித்தார். முந்தைய 15 ஆண்டுகளில், 70 படுக்கைகளைக் கொண்ட இந்தச் சிறப்பு இல்லம் பிள்ளைகளால் கைவிடப்பட்ட 300க்கும் மேற்பட்ட முதியோருக்கு இலவச உணவு, தங்குமிடம், சிகிச்சை, மருத்துவ வசதிகளை வழங்கியுள்ளது.

**ருத்ர பிரசாத் மொகாபாத்ரா:** IAF-ல் இளநிலை வாரன்ட் அலுவலராகப் பணியாற்றிய இவர் ஓய்வு பெற்ற பிறகு இரத்த தான முகாம்கள் நடத்துவது, செயற்கைக் கை, கால் வழங்குவது, பசுமைப் பணி, புபனேஸ்வர் பகுதியில் மொட்டைமாடித் தோட்டங்கள் அமைப்பது போன்ற சேவைப் பணிகளில் ஈடுபட்டுவருகிறார்.

RID 3262-ன் முன்னாள் போர் வீரர்கள் குடும்பப் பிரிவு மாவட்டத் தலைவரான "மொகாபாத்ரா இரக்கமான ரோட்டரியன். இவர் IAF-ல் இருபதாண்டுகள் சேவை புரிந்துள்ளார், 40,000 அடிக்குமேல் பறந்துள்ளார், இப்போது தன் சொந்த ஊரில் ரோட்டரித் திட்டங்களை விரும்பிச் செயல்படுத்துகிறார்" என்றார் PRID கோட்பாகி.■

*RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் துணைத் தலைவர் அலைன் வான் டி போயல் ஆகியோர் ரோட்டரி சேஞ்ச் மேக்கர் விருதை ருத்ர பிரசாத் மொஹபத்ராவுக்கு வழங்கினர். (இடமிருந்து) இன்ஸ்டிடியூட் தலைவர் ஷரத் ஜெயின், TRF அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல், இன்ஸ்டிடியூட் செயலர் மஞ்சூ பாட்கே, டாக்டர் அபர்ணா தேஷ்முக், RI இயக்குநர் K P நாகேஷ், புஷ்பா ப்ரீயா, உமா நாகேஷ் மற்றும் PRID மகேஷ் கோட்பாகி ஆகியோரும் காணப்படுகின்றனர்.*



# ஒரு தனித்துவமான தலைமைப்பயணம்

ரஷீதா பகத்




இமய மலையில் உள்ள சியாச்சின் பனிப்பாறையின் கடுமையான நிலப்பரப்பு வழியாக, இந்திய இராணுவத்தின் கேப்டன் ரகு ராமன், தேஜஸ் மண்டல நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துச் சென்று, உலகின் மிகவும் கடினமான நிலப்பரப்புகளில் ஒன்றில் தலைமைத்துவத்தை வெளிப்படுத்த என்ன தேவை என்பதன் நுணுக்கங்களை விவரித்த போது அரங்கில் அமைதி நிலவியது. அவர் 26000 அடி உயரத்தில் தலைமைத்துவம் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

சமதளப் பரப்பில் தாக்குபவர் மற்றும் பாதுகாப்பவரின் விகிதம் தோராயமாக 1:3 ஆக இருக்கும்போது, சியாச்சின் போன்ற இடத்தில் அது 1:9 ஆக மாறுகிறது; மேலும் 100 பேர் தாக்குதல் நடத்தினால், “தாக்குதலின் முடிவில், 30–40 பேருக்கு குறைவாகவே உயிருடன் இருப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். மற்றவர்கள் இறந்துவிடுவார்கள், அல்லது வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாகிவிடுவார்கள்.”

இதுபோன்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தும்போது, வீரர்கள் ஏன் சண்டையிடுகிறார்கள் என்று அவர் பார்வையாளர்களிடம் கேட்டபோது, தேசபக்தி, நாட்டிற்கான அன்பு, ஒழுக்கம், சீருடை போன்ற பதில்கள் கிடைத்தன. இதற்கான எளிய பதில் என்னவென்றால், துருப்புக்கள் ஒரு பெரிய காரணத்திற்காக சண்டையிடவில்லை, மாறாக தங்களை வழிநடத்தும் தலைவருக்காக சண்டையிடுகிறார்கள் என்று அவர் கூறினார்.

சியாச்சினில் இருக்கும் வீரர்களின் குழுவைப் பற்றி விளக்கிய கேப்டன் ராமன், “புவியியலை விட, இது யதார்த்தத்தைப் பற்றிய ஒரு பாடம். கேரளாவில் இருந்து வரும் ஒரு பையனுக்கு பனி எப்படி இருக்கும் என்று தெரியாது. காஷ்மீரைச் சேர்ந்த ஒரு பையனுக்கு பாலைவனங்கள் எப்படி இருக்கும் என்று தெரியாது. எங்கள் துருப்புக்கள் சிறிய கிராமங்களில் இருந்து வருகிறார்கள்,



மேலும் நாட்டின் மூலோபாயம் பற்றி அவர்களுக்கு எந்தப் பார்வையும் இல்லை. அவர்களின் பார்வை, அகழியில் அவர்களுடன் இருக்கும் தோழர்கள் மற்றும் அவர்களை வழிநடத்தும் லெப்டினன்ட் அல்லது கேப்டனுடன் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இது படைப்பிரிவின் இஸ்ஸத் (மரியாதை), அதாவது பட்டாலியன் கௌரவத்துடன் வரையறுக்கப்பட்டுள்ளது. ராணுவத் தலைவர்களிடம் பணியாளர்களை உற்சாகப்படுத்த ESOPS, சம்பள உயர்வு, மாத சிறந்த ஊழியர், போனஸ் போன்றவை எதுவும் இல்லை!" என்று கூறினார்.

ஒரு குறுகிய மற்றும் மங்கலான காணொளி மூலம், சியாச்சின் பனிப்பாறை எப்படி இருக்கும் என்பதை அவர் பார்வையாளர்களுக்குக் காட்டினார். அங்கு ஹெலிகாப்டர்கள் ஒவ்வொரு பொருளையும் மிகவும் சவாலான சூழ்நிலைகளில் கொண்டு செல்ல வேண்டியிருந்தது... உதாரணமாக, ஹெலிபேட் "தோராயமாக இந்த இரண்டு மேசைகளை ஒன்றாக வைத்தால் இருக்கும் அளவுக்கு" இருக்கும். அங்கு பணியமர்த்தப்பட்ட வீரர்களுக்கு, குளித்தல், சவரம் செய்தல், தனிப்பட்ட சுகாதாரம் எதுவும் இல்லை. ஒரு துணியை குளிர்ந்த நீரில் போட்டு அதை வைத்து உங்களைத் துடைத்துக் கொள்வார்கள். இதுதான் 18,000 அடி மற்றும் அதற்கு மேற்பட்ட உயரத்தில் உள்ள வாழ்க்கை."

21,000 அடிக்கு மேல் உள்ள வாழ்க்கையைப் பற்றி திகைத்துப்போன பார்வையாளர்களுக்கு கேப்டன் ராமன் ஒரு தெளிவான காட்சியை அளித்தார், அங்கு வெப்பநிலை மைனஸ் 20 அல்லது 25 டிகிரி செல்சியஸ் வரை குறையலாம், மேலும் காற்றின் குளிர்ச்சி அதை இன்னும் கீழே கொண்டு செல்லும். மற்றொரு காணொளி, 15–20 கிலோ எடையுள்ள பைகளையும், ஒரு துப்பாக்கியையும் சுமந்து செல்லும் ரோந்து வீரர்களைக் காட்டியது! சாதாரண சூழ்நிலைகளில் டெல்லியிலிருந்து துவாரகா வரையிலான ஒரு ரோந்துக்கு 3–4 மணி நேரம் ஆகும், ஆனால் ஒரு பனிப்பாறையில் அதற்கு 4 நாட்கள் ஆகலாம், ஏனென்றால் நீங்கள் பனியில் உங்கள் காலை வைக்கும்போது, "அது உங்கள் கணுக்கால் அல்லது முழங்கால் வரை செல்லாமல், உங்கள் தொடை வரை கீழே செல்கிறது!"

தலைமைத்துவம் இத்தகைய சாத்தியமற்ற நிலப்பரப்பில் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார், அங்கு ஒரு கோப்பை காலை தேநீர் பெறுவதற்கு, ஒரு சிப்பாய் ஒரு கோடாரியைப் பயன்படுத்தி "காங்கிரீட் போன்ற திடமான பனியை உடைத்து, ஒரு பாத்திரத்தில் ஒன்றரை மணி நேரம் சூடாக்க வேண்டும்." அந்த வீரரின் ஆடைகள் கறுப்பாக இருந்தன, அதற்கு பனிப்பாறையின் திரவத் தங்கமான மண்ணெண்ணெய்யை ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டதுதான் காரணம். "உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் நீங்கள் பல வாரங்கள் வாழலாம், ஆனால் மண்ணெண்ணெய் இல்லாமல், ஒரு இரவு கூட நீங்கள் உயிர்வாழ முடியாது, ஏனென்றால் உங்கள் அறைக்குள் இருக்கும் ஹீட்டர் இரவில் அணைந்துவிட்டால், காலையில், நீங்கள் ஒரு பனிக்கட்டி தட்டு போல விழிப்பீர்கள். பனிப்பாறையில் செலவழித்த சில நாட்களுக்குள், நீங்கள் இருமும்போதும், உங்கள் கண்கள், மூக்கு மற்றும் சளியில் கருமையான புகைக்கரி இருக்கும், ஏனெனில் நீங்கள் தொடர்ந்து மண்ணெண்ணெய் புகையை சுவாசிக்கிறீர்கள்."

பங்கரின் அளவு அவர் நின்ற

மேடையின் அளவே இருந்தது, அதில் 14–16 பேர் வசித்தனர்! நுழைவாயில் ஒரு சுரங்கப்பாதை போன்றது, அது செதுக்கப்பட்டுள்ளது, எனவே உங்களுக்கு இருட்டுப் பயம் இருந்தால் கடவுளே உங்களுக்கு உதவ வேண்டும். உள்ளே, சுவர்கள் இடிந்து விழாமல் தடுக்க ஸ்டீல் மூலம் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. “எனவே, ஒரு புதியவர் தவறுதலாகத் தனது கையுறையைக் கழற்றி, மைனஸ் 40 டிகிரியில் உள்ள அந்த ஸ்டீல் சட்டத்தின் மீது தன் கையை வைத்தால், என்ன நடக்கும் என்று நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்.”

“இப்போது, ஒரு 5 நிமிட காணொளி மூலம், சியாச்சினில் 12 மாதங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை நான் உங்களுக்குக் காட்ட முயற்சிக்கிறேன். கழுவப்படாத மனித உடல்கள், மண்ணெண்ணெய், வெடிமருந்து, வாந்தி, அழுகிய உணவு கலந்த வாசனையுடன் இருக்கும் ஒரு பங்கருக்குள் வாழ்வது உண்மையில் எப்படி இருக்கும் என்பதை ஒரு காணொளியால் காட்ட முடியாது. அதை நீங்கள் ஊகித்து கற்பனை செய்து பார்க்க வேண்டும்.” என அந்த இராணுவ அதிகாரி கூறினார்:

போர்க்காலத் தலைமைத்துவத்திற்கு ஓர் உதாரணம் கொடுத்த கேப்டன் ராமன், அடுத்து ஒரு குளிர்கால துண்டிப்பு நிலையை விளக்கினார், அங்கு துருப்புக்கள் ஆறு மாதங்களுக்கு நியமிக்கப்பட்டால், அவர்களை மீண்டும் வெளியேற்ற முடியாது. இதற்குக் காரணம், மலையின் செங்குத்தான சரிவில் ஒவ்வொரு மணி நேரமும் டன் கணக்கில் பனி விழுவதும், மிகச் சிறிய அதிர்வு கூட பனிச்சரிவைத் தொடங்கக்கூடும் என்பதும்தான். 20 வயது லெப்டினன்ட் ஒருவர், 20 ஆட்களை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்ற கதையை அவர் சொன்னார். இரண்டு நாட்களுக்குள், ஒரு சிப்பாய் பெருமூளை வீக்கத்தால் இறந்துபோனார். “அவர்கள் அந்த சிப்பாயின் உடலைப் பாராசூட் துணியில் சுற்றி, நிலையத்திற்கு அருகில் வைத்திருந்தனர். உடலை தூக்கி எறிய முடியாது, அது உங்கள் சொந்த சிப்பாய்களில் ஒருவர், மேலும் மைனஸ் 40 டிகிரியில் உடலுக்கு எதுவும் ஆகாது. அடுத்த 5 ½ மாதங்களுக்கு 18 ஆட்களை வழிநடத்த வேண்டியிருந்த அந்த 20 வயது இளைஞனுக்குத் தேவையான மன உறுதியை கற்பனை செய்து பாருங்கள். வேலையில் ஏதாவது தவறு நடக்கும்போது, அல்லது யாராவது நம் கார் பார்க்கிங்கை திருடும்போது, அல்லது யாராவது நம்மிடம் இல்லை என்று சொல்லும்போது நாம் அடையும் மனமுடைவுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள்.”

இந்த வீரர்கள் சிறப்புப் படைகள் அல்ல அல்லது பல்வேறு துறைகளில் உயர் செயல்திறன் கொண்ட குழுக்களின் உறுப்பினர்கள் அல்ல



*கேப்டன் ரகுராமன் பிரதிநிதிகளிடையே உரையாற்றுகிறார்.*

என்று கேப்டன் கூறினார். “அவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள்; அவர்கள் ஒன்றாகச் செய்வது அசாதாரணமானதாகிறது, ஏனெனில் அவர்கள் அசாதாரண வழிகளில் வழிநடத்தப்படுகிறார்கள், அசாதாரண வழிகளில் ஒழுங்கமைக்கப் படுகிறார்கள். போர்க்கால தலைமைத் துவத்தின் இரண்டாவது விதி, நீங்கள் இரண்டு வாரங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட ஒரு லெப்டினன்ட்டாக இருந்தாலும் பரவாயில்லை; இப்போது உங்களுக்கு அதிகாரம் இருப்பதால், நீங்கள் தான் பொறுப்பாவீர்கள், எந்தவிதமான சாக்கும் சொல்லமுடியாது.”

‘கணுக்கட்டு’ என்று அழைக்கப் படும் ஒன்றை அணிந்திருக்கும் வீரர்களின் படத்தைக் காட்டினார், அது பனி உள்ளே செல்வதைத் தடுக்க அவர்களின் காலணிகளை மூடும் ஒரு உபகரணம், ஒரு சிப்பாயின்



## ரோந்துப் பணியின் துயரங்கள்

*பனிப்பாறையில் உள்ள மொத்த நடவடிக்கைகளில் சுமார் 80 முதல் 90 சதவீதம் ரோந்துப் பணிதான். ரோந்து செல்லும் வீரர்கள் ஒரு கயிற்றால் ஒருவருக்கொருவர் பிணைக்கப்பட்டிருப்பர், மேலும் ஒரு குழு முழுவதையும் விழுங்கக்கூடிய, ஆனால் பனியால் மூடப்பட்டு அதனால் தெரியாத, மிகப் பெரிய பனிப் பிளவுகளிலிருந்து பாதுகாக்க, முதல் சிப்பாய் நிலப்பரப்பின் உறுதியை சோதிக்க தனக்கு முன்னால் உள்ள பாதையை ஒரு குச்சியால் குத்துவார்.*

*ரோந்துப் பணியில் உள்ள ஒவ்வொரு வீரரும் அடுத்தவருடன் முன்னால் ஒரு குச்சியால் கட்டப்பட்டுள்ளனர், மேலும் முன்னோடிச் சிப்பாய், பனிப்பாறைக்குள் உள்ள பனிப் பிளவுகள் அல்லது ஆழமான பள்ளங்களைத் தேட முன்னால் தரையை குத்துகிறார்... சில சமயங்களில் அவை மிகவும் ஆழமாக இருக்கும், நீங்கள் ஒரு பாறையின் சில்லுகளை எடுத்து உள்ளே வீசினால், அது கடக், கடக் என்று செல்வதைக் கேட்பீர்கள், ஆனால் அது அடிப்பகுதியைத் தாக்குவதைக் கேட்க மாட்டீர்கள்!” அதிக பனிப்பொழிவு காரணமாக, பனிப் பிளவுகள் ஒரு பனிப் பாலத்தால் மூடப்பட்டிருக்கும், இது சில சமயங்களில் டஜன் கணக்கான ஆட்களின் எடையைத் தாங்கும், ஆனால் மற்ற நேரங்களில் விழுந்துவிடும். “ஒரு சிப்பாய் கீழே விழுந்தால், மீதமுள்ள வீரர்கள் உடனடியாக கிராம்பன்களை அடித்து, பனி கோடாரிகளைப் பயன்படுத்தி அவரது வீழ்ச்சியை நிறுத்தி, அவரை வெளியே இழுக்க வேண்டும் என்பதே பயிற்சி. ஆனால் இந்தப் பயிற்சி, பெரும்பாலான பயிற்சிகளைப் போலவே கோட்பாட்டில் மட்டுமே செயல்படுகிறது. நடைமுறையில், ஒவ்வொரு சிப்பாயும் நம்ப முடியாத அளவுக்கு சோர்வடைந்து, மிகக் குறைந்த சக்தியுடன் இருப்பார்கள். அந்த சோர்வுற்ற நிலையில், ஒரு கனமான சுமை கீழே சென்றால், அது அனைவரையும் இழுத்து, அவர்கள் அந்த தூள் போன்ற பனியில் பிடியைப் பெறுவதற்கு முன்பு, பனிப் பிளவுக்குள் இழுக்கப்படத் தொடங்குகிறார்கள்.”*

*அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேப்டன் பார்வையாளர்களிடம் கேட்டார், அதற்கு கயிற்றை வெட்டுங்கள் என்று பதில் கிடைத்தது.*

*கேப்டன் ராமன் அடுத்து சொன்னது அரங்கில் பலரை அழ வைத்தது. “இந்த ஏசி அறைக்குள் உட்கார்ந்து, கயிற்றை வெட்டுங்கள் என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் கயிற்றின் மறுமுனையில் தொங்கிக் கொண்டிருக்கும் சிப்பாய் தான், நீங்கள் ரோந்துப் பணியில் இருந்தபோது உணவை சூடாகவும், வெப்பமாகவும் வைத்தவர். அவர் தான் நீங்கள் 105 டிகிரி காய்ச்சலுடன் இருந்தபோது உங்களைக் கவனித்து குணப்படுத்தியவர். உங்கள் சகோதரிக்குத் திருமணம் செய்ய வேண்டியிருந்தபோது உங்களுக்குப் பணம் கொடுத்தவர். மேலும் அந்த வருடம் உங்களுக்கு விடுப்பு கிடைக்காதபோது, உங்கள் வயதான பெற்றோரைச் சென்று சந்தித்தவர். அந்தக் கயிற்றை வெட்டும்படி உத்தரவிட நிறைய தைரியம் தேவை.”*

*ஆனால் போர்க்கால தலைமைத்துவத்தின் முதல் விதி என்னவென்றால், பணிதான் முதலில். “கயிற்றின் மறுமுனையில் தொங்குவது உங்கள் சொந்த சகோதரராக இருந்தாலும், நீங்கள் பணிக்குக் கட்டுப்பட்டவர். பணிதான் முதலில், எப்போதும்.”*

காலணிக்குள் பனி இருந்தால், "அவர்கள் எவ்வளவு சோர்வாக இருந்தாலும், அந்த குழு நிற்க முடியாது, ஏனென்றால் அவர்கள் நின்றால், உடல் வெப்பம் காரணமாக பனி நீராக மாறி, உடனடியாக மீண்டும் உறைந்துவிடும்."

லே-விற்க்குச் சென்றவர்கள் நீண்ட நடைப்பயணங்களுக்கு இடையில் ஓய்வு எடுக்க எச்சரிக்கப்படுவார்கள் என்பதை அறிவார்கள், இல்லையெனில் நுரையீரல் அல்லது பெருமூளை வீக்கம் ஏற்படும் ஆபத்து 800 சதவீதம் அதிகரிக்கிறது! "இங்கே, ஒரு மனிதனின் அலட்சியம், ஒரு மனிதனின் கெட்ட கர்மவினை, மற்றும் முழு ரோந்துப் படையின் உயிருக்கும் ஆபத்து உள்ளது. போர்க்கால தலைமைத்துவத்தின் மூன்றாவது விதி, நல்ல குழுக்கள் இடுப்பில் கட்டப்பட்டவை போன்றது. ஒட்டுமொத்த அணியும் வெற்றி பெறுகிறது அல்லது ஒட்டுமொத்த அணியும் இழக்கிறது. இங்கு ஒரு தனிப்பட்ட போர்வீரருக்கு இடமில்லை."

"அந்த மனநிலையில்தான் தலைமைத்துவம் தேவைப்படுகிறது. பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் போதும், வணிகம் நன்றாக இருக்கும் போதும், சூழல் நன்றாக இருக்கும் போதும், நிதி வரும்போதும் யாராலும் தலைமை தாங்க முடியும். உண்மையான தலைமைத்துவம் கடினமான காலங்களில்தான் தேவைப்படுகிறது."

அடுத்து, ஒரு கொத்து கடிதங்களைக் காட்டி, அவர் கூறினார், "இதுதான் ஒரு சிப்பாயின் முகத்தில் புன்னகையைக் கொண்டுவரும் ஒரே விஷயம்.... வீட்டிலிருந்து வரும் கடிதங்கள். ஆனால் வீரர்கள் எந்த மோசமான செய்திகளையும் பெறக்கூடாது அதனால் இவை தணிக்கை செய்யப்படுகின்றன. எனவே, ஒரு சிப்பாயின் மகள் டெங்குவால் இறந்தால், அவருக்குத் தெரிவிக்கப்படாது, ஆனால் நீங்கள், அவரது கட்டளை அதிகாரியாக, அதை அறிவீர்கள். உங்கள் கீழ் அதிகாரியின் மகள் இறந்துவிட்டாள் என்பதைத் தெரிந்தும், அவரிடம் சொல்ல முடியாமல் போகும் அந்தச் சுமையை நீங்கள் தாங்க வேண்டியிருக்கும்."

நல்ல அல்லது கெட்ட வீரர்கள் என்று யாரும் இல்லை, நல்ல அல்லது கெட்ட தலைவர்கள்



மட்டுமே உள்ளனர் என்று கூறி, கேப்டன் ராமன் சியாச்சின் போர் பள்ளியில் பயிற்றுவிப்பாளராகப் பணியமர்த்தப்பட்ட நேரத்தைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான கதையைத் தொடர்புபடுத்தினார். தற்செயலாக, சியாச்சின் பனிப்பாறையின் இரண்டு வெவ்வேறு பிரிவுகளில் பணியாற்றி வந்த ஒரே ரெஜிமெண்டைச் சேர்ந்த இரண்டு பட்டாலியன்கள் அங்கே இருந்தன. ஒன்றில் வீரர்கள் 7 அடி உயரம் கொண்டவர்களாகத் தோன்றினர்... “அவர்கள் தங்களைக் கொண்டு சென்ற விதம், அவர்களின் சல்யூட்டின் வேகம், அவர்களின் கண்களில் இருந்த வீரியம், நான் ஒரு வீரரைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்று நினைத்தேன், அதுதான் அவர்களிடம் இருந்த வீரியம்.”



ஆனால் மற்ற பிரிவில், ஆட்கள் கூன் விழுந்து, அவர்களின் கன்னங்கள் உள்வாங்கி, கண்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. அது அதே இராணுவம், அதே பயிற்சி, அதே உபகரணங்கள், அதே குறியீடுகள், எல்லாம் சரியாக ஒரே மாதிரியாக இருந்தன, ஆனால் அவர்களின் தலைவர்கள் வித்தியாசமாக இருந்தனர், அதுதான் அனைத்து வித்தியாசத்தையும் உருவாக்கியது! ஒன்று வெற்றிகரமாக இருந்தது, மற்றொன்று சீட்டுக் கட்டுகளைப் போல சரிந்து கொண்டிருந்தது.”

மற்றொரு காட்சி மூலம், கேப்டன் ராமன் ஒரு மனிதரைக் காட்டினார், அவர் மைனஸ் 23 டிகிரியில் அந்தப் பகுதிக்கு வருகை தந்திருந்தார், எந்த சிறப்பு ஆடைகளையும் அணியவில்லை. “இது தாங்க முடியாத வேதனையானது மட்டுமல்ல, அப்பட்டமான தற்கொலைக்கு சமம். அப்படியானால், அவர் ஏன் இதைச் செய்கிறார்? பனிப்பாறைக்கு வரும் விஐபிகள், எஸ்கிமோக்களைச் சந்திக்கச் செல்வது போல் மேலிருந்து கீழாக மூடப்பட்டிருப்பார்கள்! நிச்சயமாக, அவர்கள் அந்த ஆடைகளை அணிய வேண்டும், ஆனால் அவர்கள் பெரும்பாலும் புகைப்பட வாய்ப்புகளுக்காக வருகிறார்கள்... மேலும் அவர்கள் எனது விளக்கத்தைக் கேட்பதில்லை, அவர்களைத் திரும்ப அழைத்துச் செல்லும் ஹெலிகாப்டரின் சத்தத்திற்காகவே காத்திருக்கிறார்கள்! ஆனால் இந்த மனிதன் எனது நிலையத்திற்கு வரும்போது, அவர் எனக்கு ஒரு செய்தியை அனுப்புகிறார்... ‘மகனே, நான் ஒரு பிரிகேட் தளபதி; நான் உன்னுடன் முழு 12 மாதங்களும் இருக்க முடியாது. ஆனால் நான் இங்கே இருக்கும் 10 நிமிடங்களுக்கு, நீங்கள் பன்னிரண்டு மாதங்கள் உணரும் வலிக்கு என்னை நான் வெளிப்படுத்துகிறேன், அதனால் உங்கள் வலி என்னவென்று எனக்குத் தெரியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதுதான் தலைமைத்துவம், இதுவே சொல்வதைச் செய்வது.”

இக்கதையின் மூலம், “துருப்புக்கள் தங்கள் பிரச்சனைகளை நீங்கள் தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை, நீங்கள் அதை புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்” என்றார்.■

## பிரஷர் குக்கர் கோவில்

*ஆந்திரப் பிரதேசத்தில், சில்கூர் பாலாஜி கோயில் என்ற ஒரு கோயில் விசா கோயில் என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பித்த பிறகு இங்கு வந்து, கோயிலை 10 முறை சுற்றி வருகிறார்கள். விசா வந்தவுடன் மேலும் 110 முறை சுற்றுகிறார்கள். “அது ஏன் வேலை செய்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, ஒருவேளை அது ஒரு கிளை அலுவலகமாக இருக்கலாம், ஆனால் அது வேலை செய்கிறது!”*

*அதேபோல், சியாச்சின் பனிப்பாறையின் மத்திய பிரிவில், பிரஷர் குக்கர் பாபா மந்திர் என்று ஒரு கோயில் உள்ளது. “அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேப்டன் ரகு ராமன் கேட்டார். பாகிஸ்தான் முகட்டில் இருந்து ஒருமுறை வெப்பத்தைத் தேடும் ஏவுகணை சுடப்பட்டபோது, அது நிலையத்தின் வெப்பமான பகுதிக்கு வந்தது - அது அடுப்பின் மேல் இருந்த ஒரு பிரஷர் குக்கர். அது வெடித்து சிதறி அருகில் இருந்த முகாம்களில் உறங்கிக் கொண்டிருந்த 28 பேரைக் காப்பாற்றியது என்று ஒரு கதை கூறுகிறது. “அன்றிலிருந்து, அந்த பிரஷர் குக்கரின் துண்டுகள் ஒரு சன்னதியில் வைக்கப்பட்டுள்ளன, மேலும் அதற்கு பூசை ஒரு நாளைக்கு இரண்டு முறை செய்யப்படுகிறது... காலை மாலை ஆரத்தி நடக்கிறது.” என்றார்.*

TRF-க்கு தாராள மனப்பான்மையுடன் நிதியளித்ததை அங்கீரிக்கும் விதமாக 20 ரோட்டேரியன்கள் மதிப்புமிக்க ஆர்ச் க்ளம்ப் சொசைட்டியில் (AKS) சேர்க்கப்பட்டனர். பெரு நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவித்த PRIP K R ரவீந்திரன், வெற்றியை பணத்தால் அல்ல, சேவையின் மூலம் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றத்தால் ரோட்டரி அளவிடுகிறது என்று கூறினார்.

“அவர்கள் ஆடம்பரத்திற்கு பதிலாக மரபைத் தேர்ந்தெடுத்தவர்கள். வசதிக்கு எதிராக கருணையை தேர்ந்தெடுத்தவர்கள்” என்று பாராட்டினார். தொலைநோக்குப் பார்வையாளரான ஆர்ச் க்ளம்பின் உணர்வை அவர் வெளிப்படுத்தினார். அவரது கனவு ரோட்டரி அறக்கட்டளையாக உருவானது.

அறக்கட்டளையின் தொடக்கம் எளிதில் கவனிக்கப்படாத ஒன்று என்று அவர் குறிப்பிட்டார். 1917-ம் ஆண்டு, அட்லாண்டாவில் நடந்த மாநாட்டில் க்ளம்ப் உலகிற்கு நன்மை செய்வதற்காக அறக்கட்டளை உருவாக்க வேண்டும் என்னும் யோசனையை முன்மொழிந்தார். தலைப்புச் செய்திகளும் இல்லை, இடி முழக்கத்துடன்கூடிய கைதட்டல்களும்

# AKS உறுப்பினர்களுக்கு கௌரவம்

ஜெய்ஸ்ரீ




*PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷாவை (வலமிருந்து) RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, RI இயக்குநர் K P நாகேஷ், PRIP K R ரவீந்திரன், DGE ரவிசங்கர் டகோஜு மற்றும் PRID A S வெங்கடேஷ் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.*

*B S N ஹரி மற்றும் சுனந்தா ஆகியோர் AKS-க்கு ஆற்றிய பங்களிப்பிற்காகத் தலைவர் அரேஸோ மற்றும் DGE டகோஜு ஆகியோரால் கௌரவிக்கப்படுகின்றனர்; (இடமிருந்து) RID நாகேஷ், PRID வெங்கடேஷ், PRIP ரவீந்திரன் மற்றும் RID முருகானந்தம் ஆகியோரும் உடனிருக்கின்றனர்.*



இல்லை. ஆனாலும், மென்மையான அந்த பேச்சு ஒருநாள் உலகத்தை மாற்றும்.

அறக்கட்டளை அதன் பெயரையும், அறங்காவலர்களையும் பெறுவதற்கு 11 ஆண்டுகள் ஆனது. மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பு அதன் முதல் அறக்கட்டளை மானியமாக $500 தேசிய ஊனமுற்றோர் சங்கத்துக்கு (அமெரிக்காவில் இன்றைய ஈஸ்டர்சீல்ஸ்) வழங்கப்பட்டது. அந்த $500 கூட அறக்கட்டளையிடமிருந்து வரவில்லை. அது பால் ஹாரிஸிட மிருந்து பெயர் குறிப்பிடாமல் அறக் கட்டளை மூலம் அனுப்பப்பட்டது.

கான்சாஸ் சிட்டி ரோட்டரி சங்கத்திலிருந்து முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட $26.5 பங்களிப்பிலிருந்து அறக்கட்டளை "உலகளாவிய மனித சக்தியாக வளர்ந்துள்ளது". இது குடிநீர், சுகாதாரம், எழுத்தறிவு மற்றும் அமைதி நடவடிக்கைகள் மூலம் லட்சக்கணக்கானவர்கள் வாழ்க்கையை மாற்றியுள்ளது.

சான்டியாகோவில் நடந்த மில்லியன் டாலர் இரவு விருந்தை அவர் நினைவுகூர்ந்தார். உறுதி மொழிகள் திரையில் தோன்றியபோது அவர் ஆச்சர்யத்துடன் பார்த்தார். "அது மில்லியன் டாலரை எட்டி, 16.2 மில்லியன் டாலராக ஆக அதிகரித்தது". அவர் மேடையிலிருந்து இறங்கிய போது ஒரு நன்கொடையாளர் அவரை அமைதியாக அணுகி,



முழுத்தொகையையும் இரட்டிப்பாக விரும்புவதாகக் கூறினார். ஆனால், பெயர் குறிப்பிடவிரும்பவில்லை. "ஒரே இரவில் 34 மில்லியன் டாலர் நிதி திரட்டப்பட்டது. உண்மையான நன்கொடை எப்போதும் கவனத்தை ஈர்க்கவேண்டிய அவசியமில்லை. அதற்கு மனப்பூர்வமான நல்ல இதயம் இருந்தால் மட்டும் போதுமானது" என்று அவர் கூறினார்.

ஒரு பெருநன்கொடையாளராக மாறுவதற்கான தனது எதிர்பாராத பயணம் பற்றியும் அவர் பேசினார். PRIP ராஜேந்திர சாபூவுடன் விமானத்தில் பயணம் செய்த போது, சாபூ அவரை பெரு நன்கொடை யாளராகுமாறு கேட்டுக் கொண்டார். அது ஒரு சிறியதொகை என நினைத்து அவர் சாதாரணமாக ஒப்புக்கொண்டார். சாபூ அவர் கையைப்பிடித்துக்கொண்டு $25,000 கேட்டபோது மனைவியுடன் கலந்து ஆலோசிப்பதாக கூறி முடிவை தாமதப்படுத்த முயன்றார்.

ஆனால், சில நாட்களுக்குப் பிறகு, ஒரு விபத்திலிருந்து தப்பியதைப்பற்றி கூறி "எங்களுக்கு ஏதாவது நடந்திருந்தால் அதற்காக ஒரு தொகையை நாங்கள் செல எளவிட்டிருப்போம்." என்றார். அந்த தருணத்தில் அவரது மனம் மாறியது. "தாராளமனப்பான்மை என்பது மிஞ்சியிருப்பதிலிருந்து அல்ல, நன்றியுடன் தொடங்குகிறது" என்று அவர் கூறினார்.

ரோட்டரியின் நன்கொடை என்பது மனப்பூர்வமாக கொடுப்பதால் மட்டுமல்ல, நேர்மையானது என்பதால் சக்திவாய்ந்தது, என்றார். AKS உறுப் பினர்களிடம் அவர் கூறுகையில், உங்கள் நன்கொடை, உங்களுக்குப் பிறகும் நிலைத்திருக்கும். உங்கள் வரலாறு செல்வத்தில் அல்ல, உங்கள் மனதை தொட்டவர்களின் வாழ்க்கையிலும், நம்பிக்கையை மீட்டெடுப்பதிலும் நீங்கள் மாற்றியமைத்த எதிர் காலத்திலும் எழுதப்படும்," என்றார்.

உலகம் முழுவதும் 1,796 AKS உறுப்பினர்கள் இருப்பதாக ரவீந்திரன் குறிப்பிட்டார். தெற்காசிய பிராந்தியத்தில் தற்போது 251 AKS உறுப்பினர்கள் உள்ளனர். உலக அளவில் RID 3141-ல் தான் அதிகபட்ச AKS உறுப்பினர்கள் உள்ளனர். ■

## Arch Klumph Society honorees

**PRIP Rajendra Saboo and Usha.**
RC Chandigarh, RID 3080

**Sushena and Roshini Ranatunga**
RC Colombo Fort, RID 3220

**Malla Venkateswara Rao and Padma Kumari**
RC Vizianagaram, RID 3020

**Mukesh and Priti Sahu**
RCs Sagar Phoenix and Sagar Grande, RID 3040

**Indrani and D R Patnaik**
RC Rourkela Midtown, RID 3261

**Navdeep and Amita Chawla**
RC Faridabad Central, RID 3011

**Dharmaprakash and Anjali Tripathi**
RC Hiranandani Ivan, RID 3142

**Rajesh and Seema Gupta**
RC Delhi Rajdhani, RID 3011

**Vijaykumar and Gauri Jatia**
RC Bombay, RID 3141

**Ramamurthy and Krishnaveni**
RC Madras Mount, RID 3233

**Saroj and Sunil Siraslewala**
RC Bombay Worli, RID 3141

**Maheswaran and Revathi**
RC Sivakasi, RID 3212

**Sachiin and Himadri Nanavati**
RC Bombay Airport, RID 3141

**Bhanendra and Amita Bagda**
RC Jaipur Mid Town, RID 3056

**Sundeep and Sarnali De**
RC Ukhra, RID 3240

**Hari B S N and Sunanda**
RC Bangalore Orchards, RID 3191

**Mahinder and Sarita Jain**
RC Madras, RID 3234

**Bhagwan Das Agarwal**
RC Belur, RID 3291

**Mohan and Sangita Gupta**
RC Delhi Premier, RID 3011

**Paresh and Beena Dattani**
RC Bombay Pier, RID 3141

# “டாகோஜு தன்யவாத்” தலைப்பின் பின்னணி

ரஷீதா பகத்

டெல்லியில் நடைபெற்ற தேஜஸ் மண்டல அமைப்பின் “பசுமை” அமர்வில், “தன்யவாத் - அன்னை பூமிக்கு நன்றி - பாதுகாப்போம், பராமரிப்போம், செழிப்போம்” என்ற தலைப்பில் ஒரு நிகழ்வு நடைபெற்றது. அதில், ரோட்டரியின் விருப்பத்திற்குரிய கொடையாளரும், RID 3192-ன் DGE ரவிசங்கர் டாகோஜு, இந்தியா முழுவதும் முன்னெடுத்த பெரும் மர நடும் மற்றும் சுற்றுச்சூழல் முயற்சிக்காக “டாகோஜு தன்யவாத்” என்ற தலைப்பை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதை விளக்கினார்.

பெரும்பாலான ரோட்டேரியர் களைப் போலவே தானும் “ஒரு உணர்வுப்பூர்வமான மற்றும் உணர்ச்சி



வசப்படக்கூடிய நபர். கோவிட் காலத்தில், எந்த ஒரு குறிப்பிட்ட காரணமும் இன்றி, நான் தாழ்வாகவும், குற்ற உணர்ச்சியுடனும், பதட்டம் மற்றும் வேதனையுடனும் இருந்தேன்" என்றார். அதை சரிசெய்ய மது அருந்துதல், பல மத தலங்களில் பிரார்த்தனை, நிம்ஹான்ஸ் நிபுணரின் ஆலோசனை மற்றும் மருந்துகள் ஆகிய அனைத்தையும் முயன்றாலும், எதுவும் பலன் அளிக்கவில்லை. "எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கோவிட் காரணமாக, நாங்கள் எங்கும் செல்லவில்லை. நான் லால் பாக் பூங்காவில் நடைப்பயிற்சி செய்யத் தொடங்கினேன். நான் ஏன் வேதனை, பதட்டம் மற்றும் மனச்சோர்வை உணர்கிறேன் என்பதைக் கண்டறிய விரும்பினேன். பின்னர் என் இரண்டு மகள்களான ஏக்தா மற்றும் சம்தாவுக்குத் திருமணம் நடந்தது, அதன் பிறகு நான் சரியாகிவிடுவேன் என்று நினைத்தேன்," என்று அவர் கூறினார்.

ஆனால் எதுவும் மாறவில்லை. தன் மனைவி பௌலாவை கவலைப்படுத்த விரும்பாததால், அவரிடம் கூட தன் மனநிலையை அவரால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. 250 ஏக்கர் பரப்பளவிலுள்ள அந்தப் பெரிய பூங்காவில் நடக்கும்போது, உயரமான மரங்களையும் சிறுகுன்றுகளையும் கவனமாக நோக்கத் தொடங்கினார். தனது துன்பத்திற்கான விடையைத் தேடி இயற்கையின் பக்கம் திரும்பினார். "ஆன்மீகத் தலைவர்கள் அல்லது மருத்துவ ஆலோசகர்களுக்குப் பதிலாக, நான் மரங்களிடமும் மலைகளிடமும் பதிலைத் தேடினேன்."

மாதக்கணக்கில் இயற்கையை உற்று நோக்கியபின், இறுதியாக ஒரு விடை கிடைத்தது... மரங்களும் மலைகளும் முக்கோண/கூம்பு வடிவத்தில், நமஸ்தே போல் தோன்றியது; நமஸ்தே என்பது நன்றியுணர்வு (தன்யவாத்) என்பதைக் குறிக்கிறது." இயற்கையின் மடியில் நீண்ட நடைப்பயிற்சியின் மூலம் அவர் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், யாரையும் குறை கூறுவதற்குப் பதிலாக, அவர் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் மற்றும் தனது நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்பதே.

சிறிது சிந்தனைக்குப் பிறகு, டாகோஜு கூறினார், "நான் மறைந்த பிறகும், பல தசாப்தங்களுக்குத் தொடர்ந்து தன்யவாத் (நன்றி) சொல்லும் ஒன்றை நட வேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால் இந்த மரங்களை நானும் என் குடும்பத்தாரும் பயன்பெறும் வகையில் என் நகரத்திலோ அல்லது என் அருகாமையிலோ நடாமல், என்னோடு சற்றும் தொடர்பில்லாத தொலைதூர இடங்களில் நட வேண்டும் என்று நினைத்தேன்."

அவர் மகாராஷ்டிராவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சஹாயத்ரி மலைத்தொடருக்குச் சென்று அங்கு மரங்களை நட விரும்பினார். ஆனால் இதைத் தனியாகச் செய்ய முடியாது என்பதை உணர்ந்தார். ரோட்டரியில் உள்ள தனது நண்பரும் சக சுற்றுச்சூழல் ஆர்வலருமான நீல் ஜோசப் என்பவருடன் கலந்தாலோசித்த பிறகு, அவர்கள் ஒரு குழுவை அமைக்க முடிவு செய்தனர். இதில் RC கூடல் அமைப்பின் முன்னாள் தலைவர் கஜனன் கண்டல்காவோங்கரும் இணைக்கப்பட்டார். "நாங்கள் காடுகள், சுடுகாடுகள், பள்ளிகள், வீடுகளின் கொல்லைப்புறங்கள், ஏரி மற்றும்

*இடமிருந்து வலம்: ரோட்டரி இயக்குநர் K P நாகேஷ்; DGE ரவிசங்கர் டகோஜு; PRIP K R ரவீந்திரன்; ரியான் குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி ரியான் பின்டோ; ரோட்டரி சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் இணை அறங்காவலர் நீல் மைக்கேல் ஜோசப், பொருளாளர் விஜய் தடிமல்லா மற்றும் PDG சுரேஷ் ஹரி.*




நதி படுகைகள் போன்ற இடங்களில் மரங்களை நடத் தொடங்கினோம்."

இரண்டு ஆண்டுகளில், அவரது குழு 48,000 மரக்கன்றுகளை நட்டிருந்தது. ஆனால் அது அவரது இலக்கான 1,00,000-ல் பாதிக்கும் குறைவே. இக்கால கட்டத்தில், அவர் தனது மாவட்டத்தில் ஒரு தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். DGN-ஆக இருந்து DGE-ஆக உயர்ந்தார். சக DGEக்களுடன் பயிற்சியில் இருந்தபோது, தங்களுக்குப் பிறகும் நிலைத்திருக்கக்கூடிய மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றைச் செய்வது பற்றி விவாதித்தார்.

ரோட்டரியின் மெகா போலியோ திட்டம் முடிவடையும் நிலையில் இருந்தது; ஆனால் விவாதத்தின் போது, ரோட்டரி உலகிலிருந்து போலியோவை ஒழித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், "காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் வடிவில் நமது கிரகமே போலியோவால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் ஏன் அதற்காக ஏதேனும் செய்யக்கூடாது? போலியோவிற்கு நம்மிடம் சொட்டு மருந்து உள்ளது. இப்போது நாம் மரங்களை நடுவோம்" என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் குறிக்கோள்கள் தொடர்ந்து வளர்ந்து, இப்போது ஒரு கோடி மரங்கள் என்ற இலக்கை நோக்கி மிகவும் லட்சியமாக மாறியதால்... அதிகமான கூட்டாளர்கள் இணைக்கப்பட்டனர். அவரது பல நண்பர்கள் இதில் இணைந்த நிலையில், "டாகோஜு தன்யவாத்" என்று பெயரிடப்பட்ட இத்திட்டம், ரையன் இன்டர்நேஷனல் கல்வி நிறுவனங்கள் குழுமத்தில் ஒரு முக்கிய கூட்டாளரைக் கண்டது.

அந்த நிகழ்வில், டாகோஜு (ரோட்டரி சுற்றுச்சூழல் அறக்கட்டளை) மற்றும் ரையன் குழுமத்தின் CEO ரையன் பிண்டோ ஆகியோருக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று, ஜூலை 2026-ல் டாகோஜு ஆளுநராகப் பதவியேற்கும் நாளில், இந்தியா முழுவதும் உள்ள ரையன் பள்ளிகளில் ஒரே நாளில் 50,000 மரக்கன்றுகளை நடுவது. இது ஒரு கின்னஸ் உலக சாதனையை படைக்கும் முயற்சியாக





*RID நாகேஷ் மற்றும் TRF அறங்காவலர் ஆன்-பிரிட் ஆசெபோல் ஆகியோர் ரியான் பின்டோவை ஒரு ரோட்டேரியனாகப் பதவியேற்கச் செய்கின்றனர், DGE டகோஜு மற்றும் PRID C பாஸ்கர் ஆகியோரும் உள்ளனர்.*

இருக்கும். ரையன் குழுமம் தனது பள்ளிகளில் ஓராண்டிற்குள் 165 இன்டராக்ட் சங்கங்களை தொடங்கும் என்ற உறுதியளிப்பும் இதில் அடங்கும். மேலும், ரோட்டரியுடன் இணைந்து, நாடு முழுவதும் 10 லட்சம் மரக்கன்றுகளை நடவும் முயற்சிக்கும். இந்தியாவின் 20-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் 165 பள்ளி களைக் கொண்டுள்ளதால், இது சாத்தியமானதே.

கூட்டத்தில் உரையாற்றிய ரையன் குழுமத்தின் CEO ரையன் பிண்டோ, இது தங்கள் குழுமத்திற்கு ஒரு "மகத்தான தருணம்" என்று கூறினார். "நமது கிரகத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதை மையமாகக் கொண்ட இந்தத் திட்டத்தில், டாகோஜு மற்றும் ஒட்டு மொத்த ரோட்டரி குடும்பத்துடனும் இணைவது எங்களுக்குப் பெருமையையும் கௌரவத்தையும் அளிக்கிறது. இது எங்கள் நிறுவனத்தின் மரபணுவிலேயே ஊறிப்போன ஒன்று, மேலும் எங்கள் நிறுவனர் Dr E F பிண்டோ மற்றும் எங்கள் CMD கிரேஸ் பிண்டோ ஆகியோரின் தொலைநோக்குப் பார்வையும் கூட. எங்கள் மாணவர்களிடம் பூமியைப் பாதுகாக்கும் உணர்வை விதைப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவோம்," என்றார்.

தங்கள் பள்ளிகள் தினமும் இரண்டரை லட்சம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதாக பிண்டோ கூறினார். "மதிப்பெண்கள் மற்றும் பட்டங்களுக்காக மட்டும் நாங்கள் அவர்களுக்குக் கல்வி கற்பிக்க வில்லை" என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பது முக்கியம் என்றார். "அவர்கள் இந்தத் தேசத்தின் நல்ல குடிமக்களாகவும், அன்னை பூமியைப் பாதுகாக்கும் தூதுவர்களாகவும், இந்தக் கிரகத்தின் நல்ல பாதுகாவலர்களாகவும் திகழும் வகையில் நல்ல பண்பு களுடன் அவர்களை மேம்படுத்த நாங்கள் விரும்புகிறோம்," என்று கூறினார்.

நிகழ்ச்சியில் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் இவை என்றாலும், பழங்குடியினப் பள்ளிகளை மேம்படுத்துதல் மற்றும் விலங்குகள் மற்றும் பறவைகளுக்குத் தண்ணீர் வழங்குதல் போன்ற டாகோஜுவின் பிற போற்றத்தக்க முயற்சிகளிலும் ரையன் குழுமமும் அவருடன் இணைந்து செயல்படும் என்று




அவர் உறுதியளித்தார். “இந்தத் திட்டங்களிலும் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்” என்றார்.

மிகவும் நெகிழ்ந்துபோன டாகோஜு, “நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை! நாங்கள் அவரிடம் ஒன்று கேட்டோம், அவர் பத்து கொடுத்திருக்கிறார். அவரது எல்லா பள்ளிகளிலும் இன்டராக்ட் சங்கங்களைத் திறக்கவும், மரம் நடுவதில் எங்களுடன் இணையவும் மட்டுமே நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் இப்போது பழங்குடியினர் கல்வி மற்றும் விலங்குகளுக்குத் தண்ணீர் வழங்கும் முயற்சிகளுக்கும் அவர் தாமாக முன்வந்துள்ளார். இதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம்” என கூறினார்.

பார்வையாளர்களாக இருந்த ரோட்டரி தலைவர்களிடம், டாகோஜு ஒரு எளிய கேள்வியைக் கேட்டார்… பிண்டோ ஒரு ரோட்டேரியர் கூட இல்லை, ஆனால் அவர் ரோட்டரியின் சேவைகளை மிகவும் ரசிப்பதால் நம்முடன் இணைய விரும்பினார். அரங்கில் எத்தனை பேர் பள்ளிகள், கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்களை நடத்துகிறார்கள் என்று கைகளை உயர்த்தச் சொன்ன அவர், அவர்களையும் இந்த பசுமை முயற்சியில் இணையுமாறு வலியுறுத்தினார்.

RI இயக்குனர் K P நாகேஷ், “ரோட்டரியுடன் தொடர்புடைய ஒருவர் ரோட்டேரியர் இல்லை என்று கேட்கும் போது, என்னால் அதை ஜீரணிக்க முடியவில்லை.” என கூறி, தனது சொந்த பேட்ஜை கழற்றி, TRF அறங்காவலர் ஆன்-பிரிட் ஆஸ்போலிடம் கொடுத்து, அதைப் பயன்படுத்தி பிண்டோவை ரோட்டரியில் இணைக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் ரோட்டரியுடனான அவரது கூட்டுறவிற்கும், குறிப்பாக அவரது 165 பள்ளிகளிலும் இன்டராக்ட் சங்கங்களைத் தொடங்குவதாக உறுதி யளித்ததற்கும் நன்றி தெரிவித்தார். “பூமியைக் காப்பாற்றுவது நம் அனை வரின் கூட்டுப்பொறுப்பு,” என்றார்.

முன்னதாக, அமர்வில் உரையாற்றிய PRID C பாஸ்கர், அமர்வின் தலைப்பான - பாது காப்போம், பராமரிப்போம், செழிப்போம் - மிகவும் பொருத்தமானது என்று கூறினார். “ஏனெனில் நாம் இந்தக் கிரகத்தின் உரிமையாளர்கள் அல்ல, வெறும் பராமரிப்பாளர்கள் மட்டுமே என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. தலைமுறைகளாக, இயற்கை நமக்கு காற்று, நீர், உணவு, ஆற்றல் மற்றும் அழகு என அனைத்தையும் அளித்து வளர்த்துள்ளது. ஆனால் இப்போது நமது தாக்கம் அதிகரித்த நிலையில், நன்றியுணர்வு பொறுப்பாக மாற வேண்டும். மென்மையான இந்த சுற்றுச்சூழல் அமைப்பை மதித்து, பாதுகாத்து, அரணாக இருக்க வேண்டும்.

வளர்ச்சியை மறுவரையறை செய்து, காடுகள், ஆறுகள், கடல்கள், பல்லுயிர் பெருக்கம் ஆகியவற்றை காக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்-அவை நமது வருங்கால சந்ததியினருக்காக எஞ்சியிருப்பதை உறுதி செய்ய வேண்டும்,” என்று அவர் வலியுறுத்தினார். அதனால் தான் டாகோஜு செய்து வருவது முக்கியமானது என்றும், அது “அவரது சங்கம் அல்லது மாவட்டத்தை மட்டுமல்ல, முழு ரோட்டரி உலகத்தையே பெருமைப் படுத்தியுள்ளது” என்றும் அவர் கூறினார்.

ரோட்டரி சுற்றுச்சூழல் அறக் கட்டளையின் நோக்கங்களை விவரித்த அதன் பொருளாளர் விஜய் தடிமல்லா, 1,500 ஏக்கர் ரோட்டரி காடுகளை உருவாக்குவது நீண்ட கால இலக்கு என்று கூறினார். இந்தியாவின் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில், குறிப்பாக அசாம், கோவா, மேற்கு வங்காளத்தின் சுந்தரவனக் காடுகள், கல்வி நிறுவனங்கள், கோவில் நிலங்கள், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய இடங்களில் மரங்களை நடுவது திட்டமாகும். ரோட்ராக்டர்களை இந்த முயற்சியில் பெரிய அளவில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கமாகும்.

ரோட்டரி, இளைஞர்கள் மற்றும் கூட்டாளர் அமைப்புகள் மூலம் பல லட்ச மரங்களை நடுவது, ஏகல் வித்யாலயா ஆதரவின் மூலம் பழங் குடியினக் கல்விக்கு ஆதரவு அளிப்பது, வாட்டர் ஃபார் வாய்ஸ்லெஸ் என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து பள்ளிகள், சமூகங்கள் மற்றும் வீடுகளில் தண்ணீர் தொட்டிகளை அமைப்பதன் மூலம் விலங்குகளுக்கான கருணைமிக்க ரோட்டரி பிரச்சாரத்தை முன்னெடுப்பது ஆகியவை இறுதி இலக்காகும். இதன் நோக்கம், “மனிதர்கள் மட்டுமல்லாமல், அனைத்து உயிரினங்கள் மீதும் பச்சாதாபத்தை ஏற்படுத்துவதாகும். சுருக்கமாகச் சொன்னால், தன்யவாத் என்பது செயலில் காட்டப்படும் நன்றியுணர்வு. இது விதைக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, நிலைநிறுத்தப்படும் வாக்குறுதியை விட மேலானது. ஒரு நன்றி என்பது ஒரு மரமாக, ஒரு குழந்தையின் கல்வியாக, ஒரு காடாக, ஒரு நிதியாக, ஒரு பாரம்பரியமாக மாறியுள்ளது. அந்த யோசனையைச் செயலாக மாற்றியவர், தனது நேரம், தலைமைத்துவம் மற்றும் செல்வத்தை இந்த கிரகத்திற்காக அர்ப்பணித்த ஒரு ரோட்டேரியர் - DGE டாகோஜு.”

TRF-ன் நிரந்தர வைப்பு நிதிக்கு பணம் கொடுப்பதாக உறுதியளித்த நான்கு மண்டலங்களைச் சேர்ந்த ரோட்டேரியர்கள் மற்றும் சுற்றுச்சூழல் முயற்சிகளில் பங்குதாரர்களாக முன்வந்தவர்கள் இந்த அமர்வில் அங்கீகரிக்கப்பட்டனர்.■

# தேஜஸ் மாநாட்டுத் துளிகள்!

ரஷீதா பகத்

தேஜஸ் மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளுக்கு சிரித்து மகிழும் சில தருணங்களும் இருந்தன. உலகில் போலியோவை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கடைசி கட்ட நடவடிக்கை, சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசர தேவை, தேசத்தின் பாதுகாப்பதற்காக எல்லையில் பணிபுரிந்துவரும் நம் ராணுவ வீரர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், வலிகள் தொடர்பான உரையை கேட்டபிறகு, RI துணைத் தலைவர் ஆலன் வான் டீ போயல் மேடைக்கு வந்து அரங்கில் கூடியிருந்தவர்களிடம் அடுத்த ஐந்து ஆண்டுக்கான நிதித் தேவை குறித்து பேசியபோது, மாநாட்டு பிரதிநிதிகள் பலர் தூக்கத்தில் இருந்தனர்.

ஆனால், டீ போயல், தொடக்க வரிகளிலேயே அனைவரின் கவனத்தில் ஈர்த்தார்: “நான் மாநாட்டுக்கு வந்தபோது வெவ்வேறு தலைப்புகளில் நான் பேச வேண்டும் என்று கேள்விப்பட்டேன். ஆனால், நண்பர் நாகேஷ் என்னிடம் சொல்ல மறந்துவிட்ட ஒரு செய்தி என்னவென்றால், நான் RI-ன் நிதிநிலைமை பற்றி பேச வேண்டும் என்பதுதான். எனவே இது கிறிஸ்துமஸ் நேரம் என்பதால் அவர் எனக்கு ஒரு பரிசு கொடுக்க விரும்புகிறார் என்று நினைத்தேன்!”

அவர் இதைக் கூறியது நகைச்சுவையாகத்தான் என்பது அவர் மேலும் கூறிய ஒரு கணத்தில் தெளிவானது: “உண்மைதான். நான் நீண்டகாலம் ஒரு வங்கியில் பணிபுரிந்தேன். ஆனால், எனக்கு வர்த்தகம் பற்றி ஒன்றும் தெரியாது. நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி வைத்திருக்கிறேன். சாதாரணமாக நான் பேசத் தொடங்கினால், பேச்சை எளிதில் நிறுத்தமாட்டேன். ஆனால், இன்று நான் RI நிதிநிலைமை பற்றி பேச வேண்டியிருப்பதால் எனது உரை சுருக்கமாகவே இருக்கும். ரோட்டரி இன்டர்நேஷனலின் நிதிநிலைமை நன்றாகவே உள்ளது” என்றார்.

இதைக் கேட்ட மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆச்சர்யத்துடன் சிரித்தனர். அவர் தொடர்ந்து பேசுகையில், “ஏதேனும் கேள்விகள் உள்ளனவா? அப்படியிருந்தால் அந்த கேள்விகளை எனக்கு மின்னஞ்சல்

*இடமிருந்து: இன்ஸ்டிடியூட் செயலர் PDGs மஞ்சு பாட்கே, அசோக் காந்தூர், RI இயக்குனர் மற்றும் இன்ஸ்டிடியூட் கன்வீனர் K P நாகேஷ், இன்ஸ்டிடியூட் சேர்மன் ஷரத் ஜெயின், வினய் அகர்வால் மற்றும் ரவி கபூர்.*



மூலம் தெரிவிக்கலாம். நான் அதை பொருளாளருக்கு அனுப்பிவைப்பேன். அவர் எனது நண்பர் மட்டுமல்ல, சக இயக்குநரும்கூட. அவர் உங்களுக்கு பதில் அளிப்பார்" என்றார்.

RI-ன் நிதிநிலைமை நன்றாக இருப்பதற்கான மற்றொரு அறிகுறி, "செலவினங்களுக்கு நாங்கள் இன்னும் பணம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதுவே நல்ல செய்திதான்" என்று அவர் மேலும் கூறினார்.

### பதற்றத்தின் உச்சியில்

தேஜஸ் மாநாட்டுக் குழுவினர், தில்லி மாநாட்டு அமர்வுகளை தொடங்கத் தயாராக இருந்த நிலையில், மாநாட்டை தொடங்கிவைக்க இருந்த குடியரசு துணைத்தலைவர் C P ராதாகிருஷ்ணன் வருகை தாமதமானது பெரும் பரபரப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியது. மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் மேடையில் அங்கும் இங்கும் பரபரப்பாக இயங்கிய போதிலும் வி.ஐ.பி. வருகைக்கான அறிகுறி ஏதும் இல்லை. ஒருவழியாக நிகழ்ச்சி தொடங்கிய பின் RID-யும், தேஜஸ் மாநாட்டு அமைப்பாளருமான K P நாகேஷ், இப்படிக் கூறினார்: "நாங்கள் பதற்றத்தில் இருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாங்கள் தேஜஸ் மாநாட்டை தொடங்கிவைக்க குடியரசு துணைத்தலைவரை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தோம். ஆனால், அவர் மற்றொரு நிகழ்வில் கலந்து கொள்ள விசயநகரம் சென்றிருந்தார். அவர் திரும்பி வருவது தாமதமாகிக் கொண்டே இருந்தது. அவர் எப்போது வருவார் என்பது தெரியாமல் இருந்ததால் நாங்கள் அனைவரும் கவலையுடன் இருந்தோம். அவர், விசாகப்பட்டினம் சென்று விட்டு வருவார் என்பதற்காகத்தான் அதற்கு ஏற்றார் போல் மாநாடு தொடங்கும் நேரத்தை மாற்றி அமைத்தோம். ஆனாலும் அவரது வருகை தொடர்ந்து தாமதமாகியது".

ஆனால், எப்படியோ நாங்கள் சமாளித்தோம். குடியரசு துணைத்தலைவர் தாமதமானாலும் நிகழ்ச்சிக்கு வந்ததால் எல்லாம் சரியாகி விட்டது. ஆனால், இதற்கிடையே ஏற்பட்ட பதற்றத்தை சமாளிக்க நாங்கள் ஒரு நடன நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்தோம்".

நடனநிகழ்ச்சி நன்றாக இருந்தது. ஆனால், மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரன், நடன நிகழ்ச்சியை, Cirque du Soleil (இசை, நடனம் மற்றும் உடல் அசைவு ஆகியவற்றின் கலவை) நிகழ்ச்சியின் தரத்துக்கு இணையாக ஒப்பிட்டுப் பேசினார்.

மாநாட்டின் இதர சிறப்பு அம்சங்களில் PDG அசோக் கன்டூர் ஏற்பாடு செய்த ரோட்டரி கோல்ஃப் போட்டியும் அடங்கும். இந்த போட்டி மிக அழகாவும், நேர்த்தியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டியின் மூலம் போலியோவுக்கு $2,50,000 நிதி திரட்ட முடிந்தது என்று நாகேஷ் கூறினார். ரோட்டரி வரலாற்றில் இந்தியாவில் கோல்ஃப் நிகழ்ச்சி மூலம் போலியோவுக்கு திரட்டப்பட்ட உயர்ந்தபட்ச தொகை இதுவாகும்.

RID 3011 ஆதரவில் பார்வையற்ற 25 நபர்களுக்கு ஸ்மார்ட் கண்ணாடிகளும், வெள்ளை நிற பிரம்பு கைத்தடியும் நட்புறவு இல்ல திறப்பு விழாவின்போது வழங்கப்பட்டது.■




*RI இயக்குநர் நாகேஷ் மற்றும் RI துணைத்தலைவர் அலைன் வான் டி போயல் ஆகியோர் பார்வையற்ற சிறுமிகளுக்கு ஸ்மார்ட் கண்ணாடிகள் மற்றும் வெள்ளைக் கைத்தடிகளை வழங்குகின்றனர்.*



*RI துணைத் தலைவர் அலைன் வான் டி போயல்*







# சாதனையாளர்களைக் கொண்டாடுவோம்

ஜெய்ஸ்ரீ

TEJAS
WINGS OF CHANGE

அர்ப்பணிப்பு உணர்வுடன் குறிப்பிடத்தக்க வகையில் சேவை செய்த ஐந்து இளைஞர்கள் ரோட்டரி இளம் சாதனையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். 29 ரோட்டரி மாவட்டங்களிலிருந்து 245 பேர் இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டனர். அவர்களில் மேற்குறிப்பிட்ட ஐந்து பேர் தேர்வு செய்யப்பட்டனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி முனீஷ் பண்டாரி, ராஜஸ்தான் மாநில முன்னாள் அமைச்சர் பினா கக், விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜோவிடோ லோபஸ் உள்ளிட்டோர் அடங்கிய நடுவர்கள் குழு விருதுபெற்ற ஐந்து பேரையும் தெரிவு செய்தது. அவர்களுக்கு கோப்பை, பாராட்டுப் பத்திரம் மற்றும் ரூ.1 லட்சம் பரிசுத் தொகை ஆகியவை வழங்கப்பட்டதாக விருதுக்குழுவின் இணை தலைவர் PDG அனில் அகர்வால் தெரிவித்தார்.

ஹைதராபாதில் உள்ள ஏழைக் குழந்தைகள் புத்தகங்களை எளிதில் அணுகும் வகையில் 24 நூலகங்களை நிறுவியுள்ள "தி ஓபன் லைப்ரரீஸ்" நிறுவனர் ஆகர்ஷண சதீஷ் (14) வெற்றியாளர்களில் ஒருவர். ரோட்டரி மீதான நன்மதிப்பை பிரதிபலிக்கும் விதமாக, இந்தியா முழுவதும் மேலும் 100 நூலகங்களை நிறுவ உதவுவதற்காக அவர், தனது பரிசுத்தொகையை திரும்ப ரோட்டரிக்கு நன்கொடையாக வழங்கினார்.

புதுதில்லியைச் சேர்ந்த மாவட்ட இன்டராக்ட் சங்கத்தைச் சேர்ந்தவரும் பால் ஹாரிஸ் ஃபெல்லோவுமான அனீஷா நரைன், 7,000 ஏழைக் குழந்தைகளுக்கு புதிய ஸ்வெட்டர்களை வழங்கிய OGAAN திட்டம் உள்ளிட்ட அவரது மனிதாபிமான முயற்சிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டார்.

விருது பெற்ற மற்றொருவர் சண்டிகரைச் சேர்ந்த இன்டராக்டரும் தொழில்முனைவோருமான நிதி ராணா, ஸ்டெப்டர்ன், டெட்ராகாப்ஸ் மற்றும் எக்கோ ப்ளோ இனிஷியேடிவ்












**1.** *RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் RI இயக்குனர் K P நாகேஷ் ஆகியோர் குழந்தை தொழில்முனைவோர் ரால் ஜான் அஜுவுக்கு நினைவு பரிசு வழங்கினர். PDG ஷரத் ஜெயினும் காணப்படுகிறார்.* **2.** *RID நாகேஷ் மற்றும் உமா, PRID அனிருதா ராய்சௌத்ரி மற்றும் P T பிரபாகர் மற்றும் DGE ரவிசங்கர் டகோஜு. IFMR குழுவுடன்;* **3.** *இடமிருந்து: RID நாகேஷ், TRF அறங்காவலர் ஆன்-பிரிட் அசெபோல், அன்னா மற்றும் தலைவர் அரேஸ்ஸோ, PRID ராஜு சுப்பிரமணியன், உமா நாகேஷ், RID M முருகானந்தம் மற்றும் சுமதி ஆகியோர் 'இளம் சாதனை யாளர்களுடன்';* **4.** *PDG மஞ்சு பாட்கே தேசிய CSR விருதுகள் நிகழ்வில் கார்ப்பரேட் விருது பெற்ற ஒருவரைப் பாராட்டுகிறார். PRIP சேகர் மேத்தா மற்றும் இயக்குனர் நாகேஷ் ஆகியோரும் காணப்படுகின்றனர்;* **5.** *பத்மா விருது பெற்ற குர்விந்தர் சிங், அவரது உதவியாளர் C S வைத்தியநாதன் மற்றும் டாக்டர் நீரஜா பட்லா ஆகியோருடன்.*

ஆகியவற்றின் இணை நிறுவனர் ஆவார்.

எழுத்தாளர் பாவினி பார்கவாவும் விருதுபெற்றுள்ளார். இவரது கவிதை தொகுப்புகள் புத்தகமாக வெளிவந்து சர்வதேச அளவில் விற்பனையானது. ரோட்டக்கைச் சேர்ந்த உலக ஜூனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் சுஹானா சைனியும் விருதுபெற்ற இளம் சாதனையாளர்கலில் ஒருவர்.

குழந்தையிலேயே அறிவுஜீவியான ரவுல் ஜான் அஜு, செயற்கை நுண்ணறிவு குறித்து அனைவரையும் ஈர்க்கும் வகையில் உரை நிகழ்த்தினார். அதன் நிஜ உலக பயன்பாட்டை விளக்கினார். இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகள், திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் படைப்பாற்றலில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பத்மஸ்ரீ விருது பெற்ற மூவர் ரோட்டரி தலைவர்களால் பாராட்டப் பட்டனர். உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர் C S வைத்தியநாதன், 1978-ல் GSE திட்டத்தின் மூலம் ரோட்டரியுடன் தமக்கு இருந்த தொடர்பை நினைவுகூர்ந்தார். அப்போது அவர் அமெரிக்காவில் மிஸ்ஸிஸிப்பியில், ஒரு திட்டத்திற்காக RID 320 (Madras)-ல் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முன்னாள் தலைவரும், தில்லி சாணக்கியபுரி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் உறுப்பினருமான டாக்டர் நீரஜா பட்லா, கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மேலாண்மையில் அவரது சிறப்பான பணிக்காக கௌரவிக்கப்பட்டார்.

ஹரியாணாவில், சிர்சாவில் உள்ள பாய் கன்ஹையா மானவ் சேவா டிரஸ்டின் நிறுவனர் குருவிந்தர் சிங், சுகாதாரம், கல்வி மற்றும் மனிதாபிமான சேவையில் சிறப்பான பணிக்காக பாராட்டப்பட்டார். சாலை விபத்தில் முதுகுத்தண்டு வடத்தில் காயம் அடைந்ததைத் தொடர்ந்து முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு ஏற்பட அனுபவங்கள் பொது நலனுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க தூண்டின.

J K சிமெண்ட், பாட்டா, டாக்டர் ரெட்டீஸ் லாபோரெட்டரீஸ், சன் ஃபார்மா, ஜிண்டால் ஸ்டீல் உள்பட 30 கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு CSR விருதுகள் வழங்கப்பட்டன. 2018–19-ம் ஆண்டில் மாவட்ட முன்முயற்சியாக PDG மஞ்சு பாட்கே அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த திட்டம், பின்னர் ஒரு தேசிய நிகழ்வாக வளர்ந்துள்ளது.

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீருக்கு மோட்டார் சைக்கிளில் பேரணியாகச் சென்றுள்ள இன்டர்நேஷனல் பெல்லோஷிப் ஆஃப் மோட்டார் சைக்கிளிங் ரோட்டேரியன்ஸ் (IFMR) 39 பேர் கொண்ட குழுவினரை PRIDs P T பிரபாகர் மற்றும் அனிருதா ராய்சௌத்ரி இருவரும் பாராட்டினர்.■




# மகிழ்ச்சி நிறைந்த யோகா அமர்வு

ரஷீதா பகத்

தேஜஸ் மாநாட்டில் அனைத்து உடற்பயிற்சி ஆர்வலர்களும் ஆவலுடன் எதிர்பார்த்த ஒரு அமர்வை ஐ.ஐ.டி. பொறியாளராக இருந்து யோகா ஆசிரியராக மாறிய இளமையான, துணிச்சலான சௌரவ் போத்ரா உரையாற்றினார். இந்த ஐ.ஐ.டி. பட்டதாரி எவ்வாறு நவீன கால உடற்பயிற்சியாளராக மாறினார் என்பதை அறிமுக விடியோ நமக்குக் கூறியது. உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான மக்களை தினமும் தனது ஆன்லைன் யோகா வகுப்புகளில் சேரத் தூண்டி அவர் ஊக்குவித்தார்.

கரோனா தொற்றுக்காலத்தில், அவர் மாணவர்களுக்கு இலவசமாக யோகா வகுப்புகளை ஆன்லைன் மூலம் நடத்தினார். அதன் மூலம் ஒரு ரூபாய்கூட சம்பாதிக்கவில்லை. குறைந்தபட்சம் யாரிடமும் நிதிசார்ந்து இருக்காத வகையில் சம்பாதிக்குமாறு அவரது பெற்றோர் வலியுறுத்தினர். அதன் பிறகு ஒருவருக்கு மாதம் ரூ.100 பெற்று வகுப்புகள் நடத்தி வந்தார். ஆனால், பெரிய அளவில் சம்பாதிக்கவில்லை. ஆனால், இரண்டாவது தொற்று எல்லாவற்றையும் மாற்றியது. அவருக்கு சவால் விடுத்த ஐ.ஐ.டி. நண்பர் அன்ஷுல் உள்ளிட்ட பலரும் யோகா வகுப்பில் இணைந்தனர்.

அவர், ஹாபில்டு (Habuild) என்னும் நிறுவனத்தை தொடங்கினார். இன்று 169 நாடுகளைச் சேர்ந்த 12.6 மில்லியன் மக்கள் அந்த தளத்தை பயன்படுத்துகின்றனர். போத்ராவின் இந்த முன்முயற்சி உலகின் மிகப்பெரிய நல்வாழ்வு இயக்கமாக மாறியுள்ளது. அதாவது சராசரியாக தினமும் 7.5 லட்சம் பேர் அவரது ஆன்லைன் யோகா வகுப்பில் சேர்ந்து வருகின்றனர்.

இந்த அமர்வில் உரையாற்றிய போத்ரா, வந்திருந்த பிரதிநிதிகளுக்கு சில எளிய உடற்பயிற்சிகளை கற்றுத்தந்தார். "தினசரி சிறிய அளவில் யோகா பயிற்சிகளைச் செய்வதன் மூலம் அசாத்தியமான மாற்றத்தை உருவாக்கலாம்" என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்கிறார் அவர்.

தினசரி உடற்பயிற்சி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டி அவர், "நாம் எல்லோரு தினமும் காலையில் பல்துலக்குகிறோம். இது மிகவும் எளிதானது. மேலும் இது நமக்கு பழக்கமாகிவிட்டது. பல் துலக்குவதற்கு நமக்கு எந்த தூண்டுதலும் தேவையில்லை. ஆனால், தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்றால், மக்கள் அதை தவிர்க்க ஏதாவது சாக்கு போக்கு சொல்கிறார்கள். "நான் ஒரு சோம்பேறி, எனக்கு நேரமில்லை அல்லது என்னை யாரும் ஊக்குவிக்கவில்லை" என்கிறார்கள்.

எந்தவிதமான உடற்பியிற்சியும் செய்யதாவர்களுக்கு போத்ரா சவால் விடுத்தார். தினமும் ஐந்து நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்யுங்கள் என்று நான் யாரிடமாவது கூறினால், அது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று பதில் கூறுவார்கள். அது உண்மைதான் என்றாலும், "உடற்பயிற்சியை உங்கள் அன்றாட வாழ்க்கையின் ஒருபகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அது ஒரு பழக்கமாக மாறும் வரை ஒரு நாளைக்கு குறைந்தது 5 நிமிடங்களாவது உடற்பசி செய்யலாம். நிலைத்தன்மைதான் முக்கியம்.

ஒரு நாளைக்கு 30 முதல் 45 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி செய்வது போன்ற இலக்கை நிர்ணயிப்பதில் உள்ள சிக்கல் என்னவென்றால், அந்த அளவு நேரம் இல்லை என்றால், என்னால் அதைச் செய்ய முடியாது என்னும்



மனநிலையை நாம் உருவாக்கிக் கொள்கிறோம். எனவேதான் ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே உடற்பயிற்சி செய்வது என்ற எளிய கொள்கையை வகுத்துக் கொண்டால் அது மந்திரம்போல வேலை செய்யும். ஏனெனில் உங்களால் நிச்சயம் தினமும் ஐந்து நிமிடங்கள் ஒதுக்க முடியும். இதன் மூலம் நீங்கள் நேரமில்லை என்னும் வலையில் விழத் தேவையில்லை.


ஆனால், பரபரப்பான நாளில் ஐந்து நிமிட உடற்பயிற்சிகூட வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார். “முக்கியமானது என்னவெனில் நீங்கள் ஐந்து நிமிடத்தில் செய்வது மனமுவந்து செய்யும் முயற்சியாக இருக்க வேண்டும். உதாரணமாக, “பெண்களில் பலர், நாங்கள் தான் வீட்டுவேலை செய்கிறோமே. அதுவே உடற்பயிற்சி போன்றதுதானே என்பார்கள். ஆனால், அது உண்மையல்ல. அதை கணக்கில் கொள்ள முடியாது. நீங்கள் முழுமனதுடன் அதில் ஈடுபட்டாலொழிய அதை உடற்பயிற்சியாக ஏற்க முடியாது. அதை கணக்கிலும் எடுத்துக்கொள்ள முடியாது”.

வேடிக்கைகள் நிறைந்த ஒரு அமர்வின் மூலம் பங்கேற்பாளர்களை கொட்டாவி விடவோ அல்லது சிறிய தூக்கத்துக்கோ அனுமதிக்காமல் போத்ரா, அவர்களை எழுந்து நிற்கவும், கைகளை நீட்டி, அசைக்கவும், மற்றும் சிரிப்பு யோகா பயிற்சிகள் மூலம் வழிநடத்தி மகிழ்வித்தார்.■




*ஐஐடி பொறியாளராக இருந்து யோகா ஆசிரியராக மாறிய சௌரப் போத்ரா. இடதுபுறம்: போத்ரா வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றும் ரோட்டரி தலைவர்கள்.*

*கீழே: RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் RI இயக்குநர் K P நாகேஷ் ஆகியோர் போத்ராவுக்கு ஒரு நினைவுப் பரிசை வழங்குகின்றனர்.*



# உணர்ச்சிகளை அடக்கிவைக்க வேண்டாம்!

**வித்யா சுப்ரமணியன்**

இன்றைய உலகில் பலர் உணர்ச்சியால் ஏற்படும் வலியை அமைதியாக சகித்துக் கொள்கிறார்கள், தேவைகளை அடக்கிக் கொள்கிறார்கள், நச்சு உறவுகளை சகித்துக் கொள்கிறார்கள் அல்லது குடும்ப அழுத்தங்களை உள்வாங்குகிறார்கள். மனநலம் இனி விருப்பத்துக்குரியது அல்ல; அது முக்கியமானது. ஆனால், ஆரோக்கியம் மற்றும் சரிசெய்தலுக்கும், சுயதீங்குக்கும் இடையிலான எல்லைகளை வரையறுப்பதும், முன்னுரிமை அளிப்பதும் முக்கியம். மேலும் தவறான உறவுகளை சீரமைத்தல் மற்றும் ஆளுமைச் சிதைவுள்ளவர்களின் நடத்தைகளை புரிந்து கொள்வதும் அவசியமானது.

மக்கள் பெரும்பாலும் அமைதியாக இருக்கவும், சகித்துக் கொள்ளவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள். மேலும் மனதளவில் வலுவாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆனால், உணர்ச்சிகளை நீண்டகாலம் அடக்கிவைப்பது பின் விளைவுகளை ஏற்படுத்தும்:

- ❖ பதற்றம், மனச் சோர்வு மற்றும் உணர்ச்சி கரைப்பு.
- ❖ தூக்கமின்மை, சோர்வு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற அறிகுறிகள்.
- ❖ குணம், செயல்பாடுகளில் மாற்றம் மற்றும் பின்வாங்கல்.
- ❖ உறவுகளை முறித்துக் கொள்வது.
- ❖ சுயமரியாதை மற்றும் சுயமதிப்பு குறைதல்.

உணர்ச்சிகளை அடக்கிவைப்பதால் பிரச்னைகள் தீராது, மாறாக அவை அதிகரிக்கத்தான் செய்யும். மனநலம் என்பது நோய் இல்லாத நிலை என்பது மட்டுமல்ல, அது சமநிலையை உணரும் திறன், தெளிவான சிந்தனை. எல்லைகளை வரையறுத்தல், மன அழுத்தத்தை கையாளுதல், நம்பிக்கையை பேணுதல் மற்றும் பயமின்றி உதவி தேடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

RI மாவட்டம் 3141-ன் மனநல விழிப்புணர்வுக் குழு, மனநலம் மற்றும் நல்வாழ்வுக்காக நம்மை சுற்றியுள்ள அனைத்துப் பிரச்னைகளையும் உடைப்பதற்காக ஒரு துணிச்சலான நடவடிக்கையாக ரோட்டேரியன்களின் நிஜவாழ்க்கை உணர்ச்சிப் போராட்டங்களை வெளிப்படுத்தும் Podcasts என்னும் தொடர் நிகழ்வைத் தொடங்கியுள்ளது.

இவை எழுதப்பட்ட கதைகள் அல்ல. அவை யதார்த்தமான, உண்மையான மற்றும் நம்பிக்கை துரோகத்தால் ஆன திருமண உறவு, மன அதிர்ச்சி. உடைந்துபோன நம்பிக்கை, தனிமை மற்றும் சுயமரியாதைக்கான போராட்டம் போன்றவற்றின் அனுபவங்கள். அறிவார்ந்த ரோட்டேரியன்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் பற்றி பேசும்போது, ஒரு சக்திவாய்ந்த செய்தியைச் சொல்கிறார்கள். "என்னால் பேச முடியும் என்றால் உங்களாலும் அது முடியும்" என்பதுதான் அது.



மன நலம் வளர்க்கப்படும்போது தனிநபர்களின் உறவுகள் பலப் படுகின்றன. வேலை, தொழில், தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுகிறது. அனுசரித்துச் செல்வது வாழ்க்கையின் ஒரு பகுதி. ஆனால், அதீதமாக பொறுமை காட்டுவது நம்மை பாதிக்கும். எனவே நாம் சமநிலையை ஏற்படுத்த ஆரோக்கியமான அனுசரித்தலை பேண வேண்டும். மரியாதை, தொடர்பு, பகிரப்பட்ட முயற்சி மற்றும் உணர்ச்சிகள் பாதுகாப்பு ஆகியவை இதில் அடங்கும்.

அதே நேரத்தில், ஆரோக்கியம் அல்லாத அட்ஜஸ்மென்டுகள் அடக்குமுறை, சுய - குற்றம், குழப்பம், குற்ற உணர்வு மற்றும் உணர்ச்சியின்மைக்கு வழிவகுக்கிறது. ஒவ்வொருவரும் தமக்குள் உள்வரம்பை நிர்ணயிக்க வேண்டும். "நாம் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறோம்?" மற்றும் எப்போது அட்ஜெஸ்ட்மென்ட் பாதிப்பை ஏற்படுத்துகிறது?"

குடும்ப அழுத்தங்களைச் சமாளிப்பது தொடர்பான பொதுவான கேள்விகள் மற்றும் சந்தேகங் களுக்கு இது நம்மை அழைத்துச் செல்கிறது. ஏனெனில் குடும்ப எதிர்பார்ப்புகள் அதிகமாகவும், நம்மை திணறவைப்பதாகவும் இருக்கலாம். தோற்றத்தை பராமரித்தல், மகிழ்ச்சியற்ற நிலையில் அல்லது விருப்பம் இல்லாத திருமண வாழ்க்கையை தொடருதல், கலாசார பாத்திரங்களை நிறைவேற்றுதல் மற்றும் அமைதியைக் கருதி பழிகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும்.

தெளிவான தொடர்பு, உறுதியான எல்லைகளை அமைத்தல், சிகிச்சையை நாடுதல், சுயமாக கவனித்தல், சூழ்ச்சியான செய்கைகளை

நிராகரித்தல் ஆகியவை ஆரோக்கிய மான உத்திகளில் அடங்கும். இந்த மந்திரத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்: “மற்றவர்களை திருப்தி செய்வதற்காக ஒருபோதும் உங்கள் நல்வாழ்வை தியாகம் செய்யக்கூடாது”.

ஒரு திருமணம் துரோகமாக மாறும் போது, பெரும்பாலும் துஷ்பிரயோகம், உடல்ரீதியாக, உணர்ச்சி ரீதியாக, வாக்குவாதம், நிதிப்பிரச்னை அல்லது உளவியல் ரீதியானதாக இருக்கும். அதற்கான அறிகுறிகளை கண்டறிய கற்றுக்கொள்ளுங்கள். இவற்றில் விமர்சனம், அவமானப்படுத்துதல், செயல்பாடுகள் மீதான கட்டுப்பாடு, பணம் அல்லது நட்புறவு, பேசாம லிருத்தல், அச்சுறுத்தல் அல்லது தொடர் குற்றச்சாட்டுகள் அடங்கும். இதுபோன்ற சூழ்நிலையில் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், எதிர்ப்புக்கிடையே திருமண வாழ்க்கையா  அல்லது அதை கைவிட வேண்டுமா என்பதுதான். ஆம் என்றால் பிரிந்து செல்வது ஒரு தேர்வாக இருக்காது. ஆனால், தேவையாக மாறும்.

மாவட்டத்தின் முன்முயற்சியின் முதல் தாக்கம் நம்பகத்தன்மை. ஏனெனில் சமூகம் ரோட்டேரியன்களை நம்புகிறது. எனவே அவர்களின் கதைகளுக்கு வலு இருக்கிறது. மற்றொரு பெரிய தாக்கம் என்னவென்றால், மனநலப் பிரச்னைகளை சுற்றியுள்ள மௌனம் உடைக்கப்பட்டபின் அது சாதாரண மக்கள் தங்கள் வலியை ஒப்புக்கொள்வதை ஊக்குவிக்கிறது. மேலும் மனநல உரையாடல்களை நீங்கள் இயல்பாக்கும்போது உணர்ச்சிப் போராட்டங்கள் ஒரு பலவீனம் அல்ல என்பதை மக்கள் உணர்கிறார்கள்.

இந்த பாட்காஸ்ட் (வலையொலித் தொடர்) தொடரில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய கதைகளில் ஒன்று போதைப் பொருள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான தனது நீண்டகால போராட்டத்தை ரோட்டேரியன் ஒருவர் தைரியமாக வெளிப்படுத்தியதுதான். பதற்றம், தனிமை மற்றும் அதிகப்படியான உணர்ச்சி அழுத்தத்துக்கு நிவாரணம் தேடி இளைஞராக இருந்த நிலையில் போதைக்கு அடிமையானார். இதற்கு காரணம் எளிதில்  பிரச்னைகளிலிருந்து விடுபடலாம் என்பதுதான். 30 ஆண்டுகள் அவர் அதன் விளைவுகளை சந்தித்தார். உணர்ச்சி யற்ற தன்மை, குற்ற உணர்வு, ரகசிய செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான நம்பிக்கையின்மை அவரை சூழ்ந்திருந்தது.



வெளித் தோற்றத்தில் தனது தொழில், குடும்பம் உள்ளிட்ட பொறுப்புகளை அவர் சாதாரணமாக கவனித்து வந்தாலும், அவருக்குள்ளே இருக்கும் மனப் பேயை எதிர்த்து தனித்து போராடி வந்தார். தாம் செல்லும் வழி மூலம் தப்பித்துவிடலாம் என்று நினைத்த அவர், மெல்ல மெல்ல தனது அடையாளத்தையும் உறவுகளையும், எதிர் காலத்தையும் இழந்து வருகிறோம் என்று உணர்ந்த போதுதான் திருப்புமுனை ஏற்பட்டது. தனது தவறான செயல்களை ஒப்புக்கொண்டு உதவியை நாடினார். மெல்ல மெல்ல வாழ்க்கையை கட்டியெழுப்பினார்.

அவரது கதை முக்கியமானது. ஏனெனில் மன வலி பெரும்பாலும் சாதாரண வாழ்க்கையின் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பதை காட்டுகிறது. மீண்டு வருவது சாத்தியம் என்பதை  நிரூபிக்கிறது. ஆனால், ஒருவர் உணர்ச்சிகளை அடக்கிவைப்பதை நிறுத்தும்போது மட்டுமே இது சாத்தியம். தனது கதையை பொதுவெளியில் பகிர்ந்து கொள்வதில் அவர் காட்டிய துணிச்சல், பலரை தாங்கள் வெளியில் சொல்லாத போராட்டங்களைப் பற்றி சிந்திக்கத் தூண்டியுள்ளது.

தனிப்பட்ட குணப்படுத்துதலுக் கான முக்கிய நடவடிக்கைகளை இப்போது பார்ப்போம். குணப் படுத்துதல் நேர்மை மற்றும் ஏற்றுக் கொள்ளலுடன் தொடங்குகிறது. உங்களுக்கு உணர்ச்சி முக்கியம் என்பதை மறந்து விடாதீர்கள். ஆனால், அதைவிட முக்கியம் மன அமைதி. எனவே பிரச்னையை ஒப்புக்கொள்ளுங்கள். தீர்வுக்கு வழிகாணுங்கள். இவை அனைத்துடனும் ஆதரவாளர்களுடன் இணைந்திருங்கள், எல்லைகளை பலப் படுத்துங்கள் மற்றும் மன மீட்சிக்கு முன்னுரிமை கொடுங்கள்.

“குணப்படுத்துதல் என்பது உடனடியாக நடக்கக்கூடியது அல்ல, ஆனால், நிச்சயம் சாத்தியமானது”. இந்த மந்திரத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

பல்வேறு வகையான ரோட்டேரியன்கள் தங்கள் போராட்டங்களைப் பற்றி பேசுவதற்கு எங்கள் மாவட்டம் தளம் அமைத்து கொடுத்தபோது “உணர்ச்சிகளை அடக்கி வைப்பதை நிறுத்துங்கள்” என்பது ஒரு செய்தியைவிட மேலானது என்பதைக் கண்டறிந்தோம். எங்கள் மாவட்டத்தின் மனநல விழிப்புணர்வுக் குழு, மக்கள் தங்கள் மனத்தில் உள்ளதை வெளிப்படையாகப் பேசுவதற்கு ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்குவதன் மூலம் அசாதாரண தலைமைத்துவத்தைக் காட்டியுள்ளது.

தவறான உறவுகள், நச்சு உறவுகள், மன அதிர்ச்சி மற்றும் போதைக்கு அடிமையாதல் உள்ள பழக்க வழக்கங்களுடனான நீண்டகால போராட்டம் பற்றிய இந்த கதைகள் முடிவில் மன நலத்துக்குதான் முதலிடம் என்பதை நிரூபிக்கின்றன.

எழுத்தாளர் RC தேவநார் மற்றும் RID 3141-ன் மன நல விழிப்புணர்வு குழுவின் உறுப்பினர்.




Rotary Club of VIRUDHUNAGAR

UNITE FOR GOOD






# RYLA

## BE AN ENTREPRENUR

A CSR initiative of V.V.V. & Sons Edible Oils Ltd.



A COMPREHENSIVE

## ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP

in 3500 MINUTES

**ROTRACTORS | 3rd / 4th** YEAR **UG STUDENTS | 1st / 2nd** YEAR **PG STUDENTS**

Course completed **GRADUATES & POST GRADUATES** between the age of 18 to 28

- **Develop your business in 12 easy steps**
- **Procure your investments in 12 different sources**
- **Create visibility to your biz using 20 marketing tools**
- **Close sales deals in 6 easy steps**
- **Fine tune your most important 5 skills**
- **Scientifically identifying your individuality in 4 easy steps**
- **List of 400 Industrial ideas handbook**




Top 2 from Every batch

## FLY TO SINGAPORE

Free of cost.



ADVT.

# STOP WORRYING ABOUT JOB(S); **START PRODUCING JOB(S)**



| | | | | |
|---|---|---|---|---|
| **53** Batches Completed | **1676** Participants Trained | **102** FLY to SINGAPORE Qualified | **9** Batches FLY to SINGAPORE Visit Completed | **309** STARTERS |

ENROLL RYLA

## UPCOMING BATCH DATES

**55.0: 16th, 17th & 18th JAN 2026**

56.0: 20h, 21st & 22nd FEB 2026

57.0: 20th, 21st & 22nd MAR 2026

58.0: 17th, 18th & 19th APR 2026



IDHAYAM
SAY IDHAYAM • SPELL HEALTH

PG

Srinidhi
Building Sustainable Relationship

K.V. Ramaswamy
MEMORIAL TRUST

PER BATCH
**32**
Participants Only

**INVESTMENT**
Rs.3500
Including Accommodation, Food, T-Shirt, Certification, E-Book, CREA Programs.

**VENUE**
Hari's Hotel
NH 44, Near Tirumangalam Toll Plaza, Kappalur, Thirumangalam, Madurai

**CONTACT**
94431 66650
94433 67248

LEKHA ads/Jan 26/Rotary



# கிழக்கு மகாராஷ்டிராவின் பழங்குடியின மக்களுக்காக நலத்திட்டங்கள்

ரஷீதா பகத்

*பழங்குடியின கிராமத்தில் மருத்துவப் பரிசோதனைக்காக வரிசையில் நிற்கும் குழந்தைகள்.*




கிழக்கு மகாராஷ்டிராவில் உள்ள நவேகான் வனப்பகுதியில் (இது நவேகான் நாக்ஸிரா புலிகள் காப்பகத்திற்குப் புகழ்பெற்றது), நக்சல் ஆதிக்கம் நிறைந்த பகுதிக்குள் சென்று, நாக்பூர் ஹரைசன் ரோட்டரி சங்கத்தின் (RI மாவட்டம் 3030) உறுப்பினர்கள், அப்பகுதியில் உள்ள கோக்ரா, சிலம்டோலா மற்றும் தும்டி ஆகிய மூன்று தொலைதூரக் குடியிருப்புகளில் உள்ள 60 குடும்பங்களுக்கு சோலார் விளக்குகளை வழங்கினர்.

வண்ணமயமான இந்த விளக்குகள் ஒவ்வொன்றும் சுமார் 2,000 மணிநேரம் எரியக்கூடியவை மற்றும் இதன் விலை சுமார் ரூ.240 ஆகும். மின்சாரம் இல்லாத இப்பகுதியில் வசிக்கும் ஆதிவாசி குடும்பங்கள் வறுமையில் வாழ்வதாகவும், உணவிற்காகக் கூட அவர்கள் வனப் பொருட்களையே நம்பியிருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் சுதிர் மங்ருல்கர் தெரிவித்தார். "எங்கள் மருத்துவ இயக்குனரை அணுகிய வனத்துறையினர், சூரியன் மறைந்த பிறகு இருளில் வாழும் இந்த குடும்பங்களுக்கு சோலார் விளக்குகள் வழங்கி உதவுமாறு ரோட்டரி சங்கத்தைக் கேட்டுக்கொண்டதால் நாங்கள் இந்தத் திட்டத்தைத் தேர்ந் தெடுத்தோம். இது நக்சல் பாதிப்புள்ள பகுதி என்பதால், மகர்தோ கிராமத்தில் முகாமிட்டிருந்த துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் எங்கள் ரோட்டரி குழுவினர் அங்கு சென்று விளக்குகளை வழங்கினர்," என்றார்.

நாக்பூரிலிருந்து சுமார் 300 கி.மீ தொலைவில் உள்ள அந்த கிராமத்திற்கு அவரால் அன்று செல்ல முடியவில்லை; ரோட்டரி உறுப்பினர்கள் தங்கள் சொந்த கார்களில் சென்றனர். ஆனால் பயணத்தின் கடைசிப் பகுதி மிகவும் கடினமான பாதை என்பதால், அவர்கள் வனத்துறை ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்டனர். மொபைல் போன் சார்ஜர்கள் மூலம் எளிதாக சார்ஜ் செய்யக்கூடிய இந்த விளக்குகளைப் பெற்ற கிராம மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், தங்கள் இருண்ட வீடுகளை இனி ஒளிமயமாக்கப்போகும் இந்தப் பரிசுக்காக அவர்கள் நன்றியுணர்வுடன் இருந்தனர்.

அந்த விளக்குகள் மிகவும் பிரபலமடைந்தன. "காவலர்கள் தங்களுக்கும் அந்த விளக்குகள் வேண்டும் என்று கேட்டதால், அவர்களுக்கும் 50 விளக்குகளை வழங்கினோம். இவை சிறந்த பரிசுகளாக அமைவதால், எங்கள் சங்க உறுப்பினர்களும் இவற்றை விரும்பினர். அதனால் மேலும் 200 விளக்குகளை ஆர்டர் செய்துள்ளோம்," என்று அவர் புன்னகையுடன் கூறினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் விவேக் கார்க், விளக்கை எவ்வாறு முறையாகப் பயன்படுத்துவது மற்றும் சார்ஜ் செய்வது என்பது குறித்து கிராம மக்களுக்கு விளக்கினார். கிராமங்களுக்குச் சென்ற ரோட்டரி குழுவில் PDG பிரபுல் மொகடம், முன்னாள் தலைவர்கள் சுதிர் தோட், ராஜேஷ் பல்லால் மற்றும் IPP தேவயானி ஷிர்கேத்கர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். கிராம மக்கள் பரிசுகளால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர், எவ்வித முன் தயாரிப்பும் இன்றி அங்கிருந்த ஒருவர் தன்னிச்சையாக எழுந்து நன்றியுரை ஆற்றினார்!

போர் புலிகள் காப்பகத்தில் சுற்றியுள்ள கிராம விவசாயிகளுக்காக வனத்துறையுடன் இணைந்து இயற்கை விவசாயம் குறித்த பயிலரங்கம் ஒன்றையும் சங்கம் நடத்தியது. இந்த நிகழ்ச்சியை ரோட்டரி சங்கம் மற்றும் RCC சாலை பேபத் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. "ரோட்டரி உலகில் RCC என்பது ரோட்டரி சமூகப் படை என்று அழைக்கப்படுகிறது. இது சமூக சேவைத் திட்டங்களில் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பணியாற்றும் ரோட்டரி அமைப்பில் இல்லாதவர்களின் குழுவாகும். இவர்கள் எழுத்தறிவின்மை, பசி, சுகாதாரம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை போன்ற உள்ளூர் சவால்களைத் தீர்க்கவும், சேவை மற்றும் தலைமைத்துவத்தின் மூலம் சமூகங்களை மேம்படுத்தவும் உழைக்கிறார்கள்," என்று மங்ருல்கர் கூறினார்.

பயிலரங்கத்தில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பயிர்களின் நன்மைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. விவசாயியான பேச்சாளர் ஒருவர்,




*ஒரு பழங்குடியின கிராமத்தில் வசிப்பவர்களுக்கு சூரிய சக்தி விளக்குகள் விநியோகிக்கப்படுகின்றன.*

அதிக விளைச்சல் பெறுவதற்காக இயற்கை உரம், பூச்சிக்கொல்லிகள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் தயாரிப்பதற்கான இயற்கை நுட்பங்களை விளக்கினார். நீர்ப்பாசனம் மற்றும் வழக்கமான விவசாயப் பணிகளில் ஆட்களின் தேவையை குறைக்கக்கூடிய எளிய, செலவு குறைந்த முறைகளையும் அவர் செய்து காட்டினார். பரஸ்பர நன்மைக்காக பயிரிடக்கூடிய பல்வேறு துணைப் பயிர்கள் குறித்தும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அறுவடை, பேக்கிங் மற்றும் சந்தைப் படுத்து தலுக்கான உத்திகள் விளக்கப் பட்டன. சந்தையில் இடைத்தரகர் களை நம்புவதற்குப் பதிலாக நேரடி விற்பனை முறைகளைக் கையாண்டதன் மூலம், தான் எவ்வாறு தனது வருமானத்தை இரட்டிப் பாக்கினார் என்பதை அவர் எண்களுடன் விவரித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட 40 விவசாயிகளிடம், “இயற்கை விவசாயம் என்பது வெறும் பயிரிடும் முறை மட்டுமல்ல, அது ஒரு முழுமையான வாழ்க்கை முறை,” என்று கூறினார்.

சங்கத்தின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள், போர் புலிகள் காப்பகத்தின் துணை இயக்குனர் மங்கேஷ் தெங்கடி மற்றும் RCC தலைவர் மனோஜ் வாக்மாரே ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

மற்றொரு திட்டத்தில், குழந்தைகளுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்றை சங்கம் ஏற்பாடு செய்தது. இதில் குழந்தைகளுக்கு ரத்த சோகை, ஹீமோகுளோபின் குறைபாடு போன்றவை பரிசோதிக்கப்பட்டன. மருந்து தேவைப்படுபவர்களுக்கு உரிய மருந்துகள் வழங்கப்பட்டன.

குழந்தைகளுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு சிறிய கூடத்தை கட்டித் தருமாறு RCC உறுப்பினர்கள் ரோட்டரி சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், “இதை நிறைவேற்றுவதற்காக நாங்கள் நிதி திரட்டி வருகிறோம்,” என்றும் சங்கத்தலைவர் கூறினார்.■



*போர் புலிகள் காப்பகத்தில் விவசாயிகளுக்காக நடைபெற்ற இயற்கை விவசாயப் பயிலரங்கில், சங்கத் தலைவர் சுதிர் மங்ருல்கர் (இடமிருந்து மூன்றாவது வரிசையில் அமர்ந்திருப்பவர்) மற்றும் முன்னாள் தலைவர் ராஜேஷ் பல்லால் (மங்ருல்கருக்குப் பின்னால் நிற்பவர்) ஆகியோர்.*

Rotary PEOPLE OF ACTION

# குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்தும் விழா

ரோட்டரி செய்திக்குழு




*மாவட்ட சர்வதேச சேவைகள் இயக்குநர் மீனாட்சி பெரியகருப்பன் (இடது), DG D தேவேந்திரன் (இடமிருந்து ஐந்தாவது) மற்றும் ஆட்டிசம் சிறப்பு மையத்தின் துணை தலைமைச் செயல் அதிகாரி ரேமா சந்திரமோகன் (வலது).*

சென்னை தி.நகர் ரோட்டரி சங்கம் RID 3233, நீதா நினைவு அறக்கட்டளையுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழைக் குழந்தைகளுக்கு அவர்களின் திறமையை வெளிப்படுத்தும் விதத்தில் ரோடா திறமை போட்டியை நடத்தியது. இளம் கலைஞர்கள் பாட்டு, நடனம் மற்றும் நாடகம் என உற்சாகமான நிகழ்ச்சிகளுடன் 1,500 குழந்தைகள் மற்றும் 400 பாராமரிப்பாளர்களைக் கொண்ட பார்வையாளர்களை கவர்ந்தனர். தங்களது படைப்பாற்றல் மற்றும் சுய நம்பிக்கை மூலம் அனைவரையும் பரவசப்படுத்தினர்.








மகிழ்ச்சியையும் அக்கறையுள்ள அனுபவத்தையும் உறுதி செய்த ஏற்பாட்டாளர்கள் அவர்களுக்கு உணவு மற்றும் சிற்றுண்டிகளை வழங்கினர். பவுன்சிங் கேஸில் (பிளாஸ்டிக்கால் உருவான கோட்டை போன்ற அமைப்பு), மெஹந்தி மற்றும் டாட்டூ என குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் பல்வேறு செயல்பாடுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். குழந்தைகள் பாப்கார்ன், மிட்டாய் ஆகியவற்றை சுவைத்து மகிழ்ந்தனர். வீட்டிற்கு பரிசுப் பொருள்களை எடுத்துச் சென்றனர்.அவர்களை அழைத்து வந்தவர்களுக்கு டிராவல் பேக் வழங்கப்பட்டது.

இந்த போட்டியை DG தேவேந்திரன் மற்றும் மூளை வளர்ச்சிக் குறைபாடு உள்ளவர்களுக்கான சிறப்பு மையத்தின் துணை தலைமைச் செயல்அதிகாரி ரெமா சந்திரமோகன் தொடங்கிவைத்தனர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த உன்னதமான முயற்சியை மேற்கொண்டு வருவதற்காக சங்கத்திற்கு ரெமா பாராட்டுத் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளி பாடகர்களின் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்ததற்காக சமக்ரதா அறக்கட்டளைக்கு அவர்களின் முயற்சியை அங்கீகரிக்கும் விதமாக ரோட்டா வாய்ஸ் ஆஃப் விக்டரி விருது மற்றும் ரூ.15,000 பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. இன்னர் வீல் சங்கம் சென்னை, குழந்தைகளுக்கான ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல் போட்டிகளை நடத்தியது.

நடிகர் அருண் விஜய், நிகழ்ச்சியில் பங்கேற்று போட்டிகளில் வெற்றிபெற்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பிரிவில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் சிறந்த கலைஞர்களுக்கு பதக்கம் மற்றும் கோப்பைகளை வழங்கினார்.■

Rotary PEOPLE OF ACTION

# அறிவியல் உங்களைத் தேடி வரும்போது

**ஜெய்ஸ்ரீ**

பள்ளிப்பருவ அறிவியல் பாடங்கள் ஆய்வகத்தில் உயிர் பெற்று வந்தால் எப்படி இருந்திருக்கும்? இயற்பியல் கற்பது ஒரு குழி லென்ஸ் வழியாக ஒளிக்கற்றை வளைவதைப் பார்ப்பதாக இருந்தால்... உயிரியல் என்பது மனித இதயம் எப்படித் துடிக்கிறது என்று சோதித்து அறிவதாக இருந்தால்... வேதியியல் என்பது உங்கள் கண் முன்னே பொங்கி வரும் வேதிவினைகளின் உற்சாகத்தை உணர்வதாக இருந்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்திருந்தால், நம்மில் பலர் அறிவியலை வெகு முன்னரே காதலித்திருப்போம்.


இன்று ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்களுக்கு அந்த உற்சாகம் சக்கரங்களில் வருகிறது. நடமாடும் அறிவியல் ஆய்வகமான விஞ்ஞான் ரத் பள்ளி வளாகத்திற்குள் நுழையும்போது, அந்த இடத்தின் சூழலே மாறுகிறது. ஆர்வமுள்ள முகங்கள், துறுதுறுப்பான ஆற்றல், பின்னர் சில நிமிடங்களில் மாணவர்கள் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் சோதனைகளில் மூழ்கும்போது ஏற்படும் ஒரு மாய அமைதி. மூன்று மணி நேரம் கடந்துவிடுவதே அவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்த உற்சாகத்திற்குப் பின்னால் இருப்பவர்கள், பாடப்புத்தகக் கருத்துக்களை மறக்க முடியாத நேரடி செயல்முறைகளாக மாற்றும் அறிவியல் கல்வியாளர்களான நவீன் மற்றும் அறிவரசன் ஆவர். “குழந்தைகள் ஒரு கருத்தைப் பற்றி வெறுமனே படிப்பதை விட, அதை நேரில் பார்க்கும்போது நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். ஒருமுறை பார்த்துவிட்டால், அது வாழ்நாள் முழுவதும் அவர்கள் மனதில் தங்கிவிடும்,” என்கிறார் நவீன்.

‘விஞ்ஞான ரத்’ முயற்சியை 2009-ல் பரிக்ஷன் அறக்கட்டளையின் அறங்காவலரும் உணவு விஞ்ஞானியுமான டாக்டர் பசுபதி வடிவமைத்தார். அடிப்படை வசதிகளும் இல்லாத கிராமப்புற பள்ளிகளுக்கு தரமான அறிவியல் கல்வியை கொண்டு செல்வதே அவரது நோக்கம். “புதிய அறிவியல் பாடப்புத்தகங்களே ஆடம்பரமாகக் கருதப்படும் பல பள்ளிகளில் முழுமையான ஆய்வகத்தை எதிர்பார்ப்பது சாத்தியமல்ல,” என்கிறார் நவீன்.

ஆரம்பத்தில் பொதுமக்களின் நன்கொடைகளால் இயங்கி வந்த இத்திட்டம், 2021-ல் RID 3212 PDG V R முத்து தனது இதயம் நிறுவனம் மூலம் இத்திட்டத்தை தத்தெடுத்தபோது புத்துயிர் பெற்றது. அவரது சொந்த சங்கமான RC விருதுநகர் இதன் செயல்பாடுகளை மேற்பார்வையிடுகிறது.

“இதயம் நிறுவனம் பேருந்தைப் பராமரிப்பதுடன், ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஆய்வக இரசாயனங்களையும் வழங்குகிறது. அந்தந்த ஊர்களில்



*அறிவியல் பயிற்றுவிப்பாளர் நவீன் ஒரு மாணவர் கையில் நெருப்பு பற்றவைக்கும் சோதனையைச் செய்ய உதவுகிறார்.*



யானை பற்பசை பரிசோதனை.












## அறிவியலை உயிர்ப்பிக்கும் பரிசோதனைகள்

*மாணவர்களைக் ஆச்சரியப்படுத்தும் சில சோதனைகளை நவீன் பகிர்கிறார்:*

**யானை பற்பசை பரிசோதனை**

ஒரு கூம்பு குடுவையில் ஹைட்ரஜன் பெராக்சைடும் பாத்திரம் கழுவும் திரவமும் கலக்கப்பட்டால் பெரிதாக மாற்றம் தெரியாது. வேதிவினையை விரைவாக்க, மற்றொரு குடுவையில் உள்ள பொட்டாசியம் அயோடைடுடன் நீர் சேர்க்கப்படும்போது கலவை குளிர்கிறது - இதன் மூலம் அவர் வெப்பம் கொள் மற்றும் வெப்பம் உமிழ் வினைகளை அறிமுகப்படுத்துகிறார்.

இந்த கலவையை  முதற்குடுவையில் சேர்த்ததும், யானைக்குப் பயன்படுத்தும் பற்பசையைப் போன்ற ஒரு பெரிய நுரைத் தூண் பீய்ச்சி அடிக்கிறது. இந்த சோதனை சிதைவு வினைகள் மற்றும் வினைவேக மாற்றிகளை விளக்க பயன்படுத்துகிறார். ஹைட்ரஜன் பெராக்சைடு நீரும் ஆக்ஸிஜனாகவும் சிதைவடைகிறது; சோப்பு ஆக்ஸிஜன் குமிழ்களைச் சிக்க வைத்து நுரையை உருவாக்குகிறது.

அவர் இதை நிஜ வாழ்க்கையுடனும் தொடர்புபடுத்துகிறார்: “விபத்தின் போது, காரின் காற்றுப்பை சோடியம் அசைடு சம்பந்தப்பட்ட இதேபோன்ற சிதைவு வினையினால் விரிவடைந்து நைட்ரஜனை வெளியிடுகிறது” என்று விளக்குகிறார்.

**கையில் நெருப்பு**

பியூட்டேன் போன்ற எரியக்கூடிய வாயு நிரப்பப்பட்ட குமிழ்களைத் தன் கையில் வைத்து, தனக்குச் சுடாமலேயே நவீன் பற்றவைப்பதைப் பார்த்து மாணவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அவரது கையில் பூசப்பட்டிருக்கும் நீர் வெப்பத்தை உறிஞ்சி, வினையைப் பாதுகாப்பானதாக்குகிறது. “எரிதல் மற்றும் வெப்பப் பரிமாற்றக் கொள்கைகளைக் கற்பிக்க இது ஒரு மறக்க முடியாத வழியாகும்.”

செயல்பாடுகளுக்கு ஏற்ப இதயத் துடிப்பு எவ்வாறு மாறுகிறது என்பதை மாணவர்கள் கேட்க ஸ்டெதாஸ்கோப் உதவுகிறது, அதே நேரத்தில் தொலைநோக்கி  இரவு வானத்தை ஆராய்வதற்கான ஒரு ஜன்னலைத் திறக்கிறது.

உள்ள ரோட்டரி சங்கங்கள் குழுவினருக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குகின்றன" என்று RC விருதுநகரின் திட்ட ஒருங்கிணைப்பாளர் வடிவேல் ராமையா விளக்குகிறார். இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் அடிக்கடி இப்பேருந்தை தங்கள் உள்ளூர் அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அழைக்கின்றன. பள்ளிகளில், 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில், RID 317 இன்னர் வீல் சங்கங்களின் ஆதரவுடன் விஞ்ஞான ரத் கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா பள்ளிகளை சென்றடைந்துள்ளது. அடுத்து கோவா செல்லத் தயாராகி வரும் நிலையில், "அங்குள்ள பள்ளிகளுக்காக 700-1,000 சோதனைகளை தயார் நிலையில் வைத்துள்ளோம்," என்கிறார் நவீன். ஒவ்வொரு அமர்வும் சுமார் 250 மாணவர்களுக்கு மூன்று மணிநேர கற்றல் அனுபவத்தை வழங்குகிறது. இன்னர் வீல் மாவட்டத் தலைவர் உட்கர்ஷா பாட்டீல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷில்பா ஷெட்டி இரு மாநிலங்களிலும் அட்டவணையை ஒருங்கிணைத்து வருகின்றனர்.

செப்டம்பர் மாதத்தில், RC பொள்ளாச்சி, RID 3203-ன் ஆதரவுடன், இந்த நடமாடும் ஆய்வகம் பொள்ளாச்சியில் உள்ள 22 பள்ளிகளுக்குச் சென்று, 2,940க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 100 ஆசிரியர்களைச் சென்றடைந்தது. "இத்திட்டம் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டியதுடன், எதிர்கால வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வையும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தியது," என்கிறார் சங்கத்தலைவர் V சதீஷ் சந்திரன்.

*2021 முதல், விஞ்ஞான ரத் 50,000 கி.மீ பயணம் செய்து பல மாநிலங்களில் மூன்று லட்சம் மாணவர்களையும் 15,000 ஆசிரியர்களையும் சென்றடைந்துள்ளது.*

2021 முதல், விஞ்ஞான ரத் 50,000 கி.மீ பயணம் செய்து பல மாநிலங்களில் மூன்று லட்சம் மாணவர்களையும் 15,000 ஆசிரியர்களையும் சென்றடைந்துள்ளது. "அறிவியல் ஒரு பாடம் மட்டுமல்ல; உலகை ஆராய்ந்து புரிந்துகொள்ளும் வழி. குழந்தைகளில் வாழ்நாள் முழுவதும் கற்கும் ஆர்வத்தை உருவாக்கவும், அறிவியல் விளக்கத்தின் மூலம் மூடநம்பிக் கைகளை நீக்கவும் நாங்கள் விரும்பு கிறோம்," என்கிறார் வடிவேல்.■

# ராய்கரில் மருத்துவ முகாம்



நவம்பரில், ராய்கர் அஷ்ரஃபி தேவி பெண்கள் மருத்துவமனையில், ராய்பூர் சுயஷ் மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவ முகாமை நடத்தியது RC ராய்கர் ராயல், RID 3261. ராய்கர் நகரத் தலைவர் ஜீவர்தன் சௌகான், சத்தீஸ்கரின் கொர்பா நகராட்சிக் கழகத்தின் தலைவர் திக்ரீலால் சாஹூ தொடங்கிவைத்த இந்த முகாமில் 300க்கும் மேற்பட்டோர் மருத்துவ ஆலோசனை, நோய் கண்டறிதல் சேவைகளைப் பெற்றார்கள்.

நரம்பு மருத்துவர்கள், நீரிழிவு மருத்துவர்கள், இதய மருத்துவர்கள், இரைப்பை, குடல் மருத்துவர்கள், கல்லீரல் வல்லுநர்கள், எலும்பு அறுவைச் சிகிச்சை மருத்துவர்களைக் கொண்ட சிறப்புக் குழு மருத்துவப் பராமரிப்பை வழங்கியது. இதயம், சிறுநீரகம், கல்லீரல், வயிற்று நலன் பரிசோதனைகள், இரத்தப் பரிசோதனைகள், இரத்த அழுத்தம், நீரிழிவு, தைராய்ட் பரிசோதனைகள், சோனோகிராஃபி, CT, MRI, X கதிர்கள் உள்ளிட்ட படச் சேவைகள் வழங்கப்பட்டன, 120க்கும் மேற்பட்ட படச் செயல்முறைகள், சுமார் 150 இரத்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. சோனோகிராஃபி, CT ஸ்கான்கள், X கதிர்ப் பரிசோதனை களுக்கான மொத்தச் செலவையும் ராம்தாஸ்-திரௌபதி அறக்கட்டளை ஏற்றுக்கொண்டது.

"சமூகத்தில் அனைவருக்கும் சிறப்பான நலப் பராமரிப்பு கிடைப்பதை நாங்கள் உறுதி செய்ய விரும்பினோம். இதன் வெற்றிக்கு எங்கள் பெண் உறுப்பினர்கள் நன்கு பணியாற்றினார்கள்" என்றார் சங்கத் தலைவர் தயானந்த் அகர்வால்.■

# Your map of Taipei

You'll be in the heart of Taipei for the Rotary International Convention June 13–17. It will be easy to travel between your hotel, the stadium for big-stage sessions, the convention centre, and nearby must-see sites. A bus and train pass for the simple-to-navigate Taipei Metro, known as the MRT, is included in your convention registration.




**1**
**TAIPEI DOME**
Convention general sessions
- Walk to nearby shops and parks

**2**
**TAINEX**
House of Friendship, breakout sessions at the Taipei Nangang Exhibition Center

**3**
**TAIPEI 101**
The skyline's signature tower
- See the city in its mountain basin from the observatory

**4**
**NATIONAL PALACE MUSEUM**
One of the world's premier museums
- Houses about 700,000 Chinese artifacts

நீங்கள்
ரோட்டரி
நியூஸ் பிளஸ்
படித்திருக்கிறீர்களா?
அல்லது அது
உங்கள் ஸ்பேம்
கோப்புறைக்குச்
சென்றுவிடுகிறதா?




ஒவ்வொரு மாதமும் உங்கள் சேவை திட்டங்களை முன்னிலை படுத்தும் வகையில் நாங்கள் **ரோட்டரி நியூஸ் பிளஸ்** என்ற இணைய வழிப்பதிப்பை வெளியிடுகிறோம். இது ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் மின்னஞ்சல் வழியாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

Read Rotary News Plus
on our website
*www.rotarynewsonline.org*

# கலை, சுகாதாரம் மற்றும் நம்பிக்கை

**கிரண் ஜெஹரா**



*ஓவியப் போட்டியில் பங்கேற்கும் குழந்தைகள்.*

திருச்சி ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம், RID 3000, ஒரு எளிய கேள்வியைப் பற்றி சிந்தித்த பிறகு, ஒரு ஓவியப் போட்டியை நடத்தியது. "அமைதி கட்டமைப்பு என்றால் என்ன என்பதை குழந்தைகள் புரிந்துகொள்வார்களா? நாங்கள் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தோம்," என்கிறார் சங்கத்தின் தலைவர் I ஜான்சன். பதிவு செய்த 580 மாணவர்களில் சுமார் 170 பேர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போலியோவை முடிவுக்கு கொண்டு வருதல் போன்ற தலைப்பைவிட அமைதி கட்டமைப்பை தங்கள் கருபொருளாக்கத் தேர்ந்தெடுத்தனர்.

"உலகில் பெரும்பாலும் அமைதியான பகுதியில் நாம் வாழ்கிறோம். மோதல் அல்லது துயரங்கள் பற்றி குழந்தைகள் கேள்விப் பட்டிருக்கலாமே தவிர அவர்களால் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது. பல குழந்தைகள் உணவைப் பகிர்ந்துகொள்ளுதல், அடுத்தவர்களுக்கு உதவி செய்தல், சண்டை சச்சரவு இல்லாமல் விளையாடுதல் போன்ற அன்றாட செய்கைகள் மூலம் அமைதியை வெளிப்படுத்தினர். அவர்கள் கொடுத்த விளக்கங்கள் எளிமையானவை. அமைதி என்பது அவர்களுடன் வளர்ந்துவிட்ட ஒன்று. போர் அல்லது பேரழிவிற்கு இடையே வாழும் குழந்தைகளைப் போல போராட வேண்டிய ஒன்றல்ல".

திருச்சியில், அரசுப்பள்ளியில் 6-ம் வகுப்பு படிக்கும், 11 வயதான ஹரிஷ் என்ற மாணவர், அமைதியை இரண்டு பிங்க் வீடுகளை இணைக்கும் குறுகிய பாதையாக வரைந்திருந்தார். ஒருபுறம் குழந்தைகள் ஒன்றாக விளையாடுவதையும், மறுபுறம்

அண்டைவீட்டார் ஒருவருக்கொருவர் இனிப்புகள் வழங்குவதையும் சித்தரித்திருந்தார். “அது ஒன்றும் பெரிதல்ல என்றாலும் இன்னும் கொஞ்சம் சிந்தித்து பார்த்தால் அமைதியான உலகம் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுவது அவரது வழி என்பதைப் புரிந்துகொள்ளலாம்” என்கிறார் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவரும் சங்க உறுப்பினருமான V வளர்மதி.

வார இறுதி நாட்களில் உள்ளூர் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தும் ஒரு நடவடிக்கையாகத் தொடங்கியது, அமைதி, சுற்றுச்சூழல் மற்றும் போலியோ ஒழிப்பு விழிப்புணர்வை உருவாக்கும் முயற்சியாக வளர்ந்தது. ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம், அதன் இன்டராக்ட் சங்கம், அரவிந்த் போலீஸ் அகாதெமி மற்றும் மங்களம் மருத்துவமனையுடன் இணைந்து ஓவியப் போட்டியை நடத்தியது. அத்துடன் குழந்தைகளுடன் வந்த பெற்றோர்கள் 500 பேருக்கு மருத்துவ முகாமுக்கும் ஏற்பாடு செய்திருந்தது.

மாணவர்கள் பதிவுக்காக நின்றதாலும், பெற்றோர்கள் மருத்துவ முகாமுக்குச் சென்றதாலும் அந்த வளாகமே கலகலப்பாக இருந்தது. “போட்டி நடைபெற்ற அரங்கினுள் குழந்தைகள் வெற்றுத்தாள்களில் ஆறுகள், அமைதியான தெருக்கள் மற்றும் பசுமையான நிலப்பரப்புகளை வரைந்துகொண்டிருந்தனர். இரண்டு முன்று வகுப்பறைகள் தாண்டி பெற்றோர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக தயாராகிக் கொண்டிருந்தனர், சிலர் இரத்தம் எடுக்கும் போது கண்களை மூடிக் கொண்டிருந்தனர். ஒரே இடத்தில் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் ஓவியப் போட்டியும், பெற்றோருக்கு மருத்துவ பரிசோதனையும் நடந்ததை பார்க்க முடிந்தது” என்றார் ஜான்சன்.



மங்களம் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் அடிப்படை மருத்துவப் பரிசோதனைகளைச் செய்தனர். “பல தாய்மார்களுக்கு இது முதல் மருத்துவப் பரிசோதனையாகக் கூட இருந்திருக்கலாம். இல்லத் தரசிகளில் பலர் பெரும்பாலும் தங்கள் உடல் நலத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வீட்டில் எல்லாம் சரியாக நடப்பதால், அவர்கள் நன்றாக இருப்பதாக நினைக்கிறார்கள். ஒரு சிலருக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தது. ஆனாலும் அவர்கள் எல்லாம் சரியாக இருப்பதுபோல் தோற்றமளித்தனர்” என்கிறார் அவர். பெற்றோர் குழந்தைகளை ஓவியப் போட்டிக்கு அழைத்து வந்திருந்தாலும், மருத்துவ முகாமில் பங்கேற்று தங்களுக்கு என்ன பிரச்னை என்பதைத் தெரிந்துகொண்டார்கள். இதுவும் அவர்கள் நல்வாழ்வுதானே!

போலியோ நோய்த்தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த வாய்ப்பை சங்கம் பயன்படுத்திக் கொண்டது. தொண்டர்கள் பெற்றோருடன் தனிப்பட்ட முறையில் பேசினர், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். அவர்களின் சந்தேகங்களுக்கு பதிலளித்தனர். நோய்த்தடுப்புக்கு இன்னும் நிலையான சமூக ஈடுபாடு தேவை என்பதை இது நினைவுபடுத்தியது.

ஓவியப் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும் வெற்றிபெற்றவர்களுக்கு கோப்பைகளும் வழங்கப்பட்டன. DG J கார்த்திக் நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், “இது படைப்பாற்றல், பொது மற்றும் மற்றும் சுகாதார பொறுப்புணர்வு ஆகியவை இணைந்த ஒரு அரிய நிகழ்வு” என்று குறிப்பிட்டார்.■



*மருத்துவ முகாமில் ஒரு தாய்.*





# பொன் விழா கொண்டாடும் RC சோன்கட்ச்

ரோட்டரி செய்திக்குழு

“இந்தியாவில் சிறப்பாகச் செயல்படும் சங்கங்கள் பலவற்றை பார்த்திருக்கிறேன். ஆனால், RI மாவட்டம் 3040-க்கு உட்பட்ட சோன்கட்ச் ரோட்டரி சங்கம், தனது சிறப்பான சமூக சேவைகள் மூலம் உலகளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது” என்று RI இயக்குநர் K P நாகேஷ், டிசம்பர் மாதம், அதன் பொன்விழா கொண்டாட்டத்தை தொடங்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

அடிப்படைக் கல்வி, சுகாதாரம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக வளர்ச்சி போன்ற ரோட்டரி முக்கிய கவனம் செலுத்தும், துறைகளில் 35-க்கும் மேலான சர்வதேச மானிய சேவைத் திட்டங்கள் மற்றும் நிதி திரட்டும் நடவடிக்கைகளை சங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதை ஒரு சிறந்த முன்மாதிரியான சங்கம் என்று கூறிய அவர்: “உலகில் சிறந்த 10 ரோட்டரி சங்கங்களில் ஒன்றாக சோன்கட்ச் ரோட்டரி சங்கம் இடம்பெற்றுள்ளது” என்றார். முன்னதாக நகரில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஊர்வலத்தை குறிப்பிட்டு பேசிய அவர், உள்ளூர் சமூகத்தினருக்கு பல்வேறு சேவைத் திட்டங்களை நிறைவேற்றியதற்கு சங்க உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சமூக மக்கள் உற்சாகத்துடன் பேரணியை வரவேற்றுள்ளனர். இதை ஆவணப்படமாக எடுத்தால், அதை இதர RI இயக்குநர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவதாகவும் கூறினார்.

வரும் 50 ஆண்டுகளில் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, இளைஞர்களின் பங்களிப்பு உலகில் முக்கியமானதாக இருக்கும் என்றும் இதில் ரோட்ராக்ட், இன்டராக்ட் மற்றும் RCC-க்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். எதிர்கால திட்டங்களுக்கு மாவட்ட மற்றும் CSR நிதி உதவிகள் அதிகரிக்கப்படும் என்று அவர் உறுதி யளித்தார். சோன்கட்ச் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை அவர் வெகுவாக பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக அரங்கேற்றியதற்காக சங்கத்தின் நிறுவன உறுப்பினர் மற்றும் PDG சத்யநாராயண லாதி, PDG ஜமீன் ஹுசைன், தலைவர் தினேஷ் ரத்தோர், செயலாளர் மகேஷ் ரத்தோர், உதவி ஆளுநர் தினேஷ் கார்பென்டர், முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், மாவட்ட தலைமை மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

முன்னதாக வரலாற்று நிகழ்வை குறிக்கும் வகையில் சங்கம் மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தது. ரோட்டரியின் சேவை உணர்வு, சமூக நல்லிணக்கம் மற்றும் மக்கள் பங்கேற்பின் முன்மாதிரியாக வைத்து வண்ணமயமான சேவை விழாவையும் நடத்தியது. இந்த நிகழ்வில் RI இயக்குநர் தவிர DG சுஷில் மல்ஹோத்ரா, அவரது மனைவி ரூபி, DGE சன்ஸ்கர் கோத்தாரி, RID 3070 PDG துஷ்யந்த் சௌதுரி மற்றும் பல PDG-க்கள் பங்கேற்றனர்.

*RI இயக்குநர் K P நாகேஷ் (மையத்தில்) DG சுஷில் மல்ஹோத்ரா மற்றும் ரூபி ஆகியோருடன் ஒரு தேரில் அழைத்துச் செல்லப்படுகிறார். PDG-க்கள் தீரன் தத்தா மற்றும் சத்யநாராயண் லாத்தி, மற்றும் சங்க தலைவர் தினேஷ் ரத்தோர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.*




*RID நாகேஷ், DG மல்ஹோத்ரா மற்றும் சங்க தலைவர் ரத்தோர் ஆகியோர் PDG லாத்தியை கௌரவிக்கின்றனர். இடமிருந்து இரண்டாவதாக PDG ஜமீன் ஹுசைன் காணப்படுகிறார்.*

அனைத்து மதங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், சமூக மற்றும் மத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், உள்ளூர் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள், பொதுமக்கள் ரோட்டேரியன்களை வழியில் மலர்கொத்துகளை கொடுத்தும் மலர்களைத் தூவியும் உற்சாகமாக வரவேற்றது, சமூக நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்துவது போல் இருந்தது.

**தாக்கத்தை ஏற்படுத்தும் சேவைத் திட்டங்கள் தொடக்கம்**

RI இயக்குநர் சம்பிரதாய முறைப்படி ரோட்டரியின் சக்கர சின்னத்தை வெளியிட்டதும், குழுவினர் தலோத் கிராமத்துக்குச் சென்று பெங்களூரு ரோட்டரி டிரஸ்ட் ஆதரவுடன் ரூ.2 லட்சம் மதிப்புள்ள இரண்டு டிஜிட்டல் பலகைகளை அரசுப் பள்ளிக்கு நன்கொடையாக வழங்கினர். அடுத்து போபால் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஹர்ஷ் மிட்டல் ஆதரவுடன் 10 மாணவர்களுக்கு இலவச சைக்கிள் மற்றும் பர்னிச்சர்கள் விநியோகிக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.




*தலோத் கிராமத்தில் உள்ள ஒரு அரசுப்பள்ளியில் டிஜிட்டல் பலகைகள் திறப்பு விழாவில், RID நாகேஷ், DG மல்ஹோத்ரா, முன்னாள் மாவட்ட ஆளுநர்களான ஹுசைன் மற்றும் லாத்தி ஆகியோருடன் சங்கத் தலைவர் ரத்தோர் கலந்துகொண்டார்.*

சங்கத்தின் ஐம்பது ஆண்டுக்கால பயணத்துக்கும், சமூகத்திற்கு செய்து வரும் சேவைகளையும் பாராட்டி RI தலைவர் பிரான்சிஸ்கோ அரெஸ்ஸோ அனுப்பிய வாழ்த்துச் செய்தியை PDG ஜமீன் ஹுசைன் வாசித்தார். கல்வித்திட்டம் ஒன்றிற்காக அந்தச் சங்கம் தற்போது 69,000 டாலர் மதிப்புள்ள மற்றொரு மானியத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். PDG தீரன் தத்தா, ரோட்டேரியன்கள் ஷாலினி ரடோன்ரியா மற்றும் ஆஷிஷ் அகோடியா ஆகியோர் சார்பில் நடைபெற்ற நிகழ்வில் நினைவுத் தபால் தலையும் வெளியிடப்பட்டது. சங்கத்தின் தலைவர் தினேஷ் ரத்தோர் மற்றும் செயலாளர் மகேஷ் ரத்தோர் ஆகியோரும் பேசினர்.■

**ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்**

ரோட்டரி செய்திக்குழு

### ஸூஃபி இசை இரவு

RC ஜோத்பூர், RID 3053, இந்த நகரின் 11 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து மார்வார் பன்னாட்டு மையத்தில் ஸூஃபி இரவை நடத்தியது. ஸூஃபி, கலவை நிகழ்த்துகலைக் குழுவான 'ஹம்சஃபி' கலைஞர்கள் தங்கள் இசைப் பன்முகத்தன்மை, பாணியைக் காட்சிப்படுத்தினார்கள். இந்த நிகழ்ச்சி ஜோத்பூரில் உள்ள உமைத் மருத்துவமனையில் ஒரு பிரிவைப் புதுப்பிக்க உதவியது.



*நிகழ்ச்சியில் ரோட்டரியன்கள்.*

### கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்தல்

RC-கள் பதிண்டா, பதிண்டா கன்டோன்மன்ட், RID 3090, பதிண்டா நகர மருத்துவமனை, RC பாம்பே பயர், RID 3141, உடன் இணைந்து நடத்திய கருப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு, HPV தடுப்பு மருந்து முகாமில 50 இளம் பெண்களுக்கு HPV தடுப்பு மருந்துகள், ஊட்டச் சத்துள்ள உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.



*கருப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி முகாமில் DG பூபேஷ் மேத்தா (இடமிருந்து இரண்டாவதாக).*

### 55 இன்டராக்ட் சங்கங்கள்

நவம்பர் 5 அன்று உலக இன்டராக்ட் நாளை முன்னிட்டு RC சன்டௌசி லக்ஷ்யா, RID 3100, 55 புதிய இன்டராக்ட் சங்கங்களை நிறுவியது. "இது இந்த மாவட்டத்தின் மிகப் பெரிய ஒரே நாள் இளைஞர் விரிவாக்கம்" என்றார் சங்கத் தலைவர் அங்கித் வர்ஷ்னெ.




*DG நிதின் குமார் அகர்வால் (வலமிருந்து நான்காவது) மற்றும் ரோட்டரி மற்றும் இன்டராக்ட் சங்க உறுப்பினர்கள்.*

### டயாலிசிஸ் அலகு கொடையளிக்கப்பட்டது

ஆப்டஸ் வால்யூ ஹவுசிங் ஃபினான்ஸ் இந்தியா நிறுவனத்துடனான CSR முன்னெடுப்பின்கீழ், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனைக்குத தொடர் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை (CRRT) டயாலிசிஸ் அலகை (ரூ.20 லட்சம்) வழங்கியது RC அண்ணாநகர் மெட்ராஸ், RID 3234. இது ICU-ல் உள்ள, தீவிர நோய் கொண்ட நோயாளிகளுக்குச் (ஆண்டுக்கு 1,000க்கும் மேற்பட்டோருக்கு) சிறுநீரக ஆதரவை வழங்கும்.



*புதிய டயாலிசிஸ் பிரிவு திறப்பு விழாவில் DG வினோத் சரோகி (வலமிருந்து மூன்றாவது).*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா

## ரோட்ராக்டர்கள்தான் ரோட்டரியின் இளைஞர் சக்தி

அசுதோஷ் அகர்வாலுக்கு, "ரோட்டரி ஒருபோதும் எட்டமுடியாத இடமாக இருந்ததில்லை. ரோட்டரி குடும்பத்தில் வளர்ந்தவர் அவர். தந்தை N H அகர்வால், 1985 முதல் ரோட்டேரியனாக இருக்கிறார். எனவே சேவை என்பது அவரது அன்றாட வாழ்க்கையில் பின்னிப்பிணைந்தது".

DRR மஹி பன் ஆதரவுடன், மாவட்டம், ரோட்ராக்டில் 180 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. ஒரு சங்கம் இப்போது 17 சங்கங்களாக விரிவடைந்து 1,350 ரோட்ராக்ட் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மாவட்டம் முழுவதும் 100-க்கும் மேலான இன்டராக்ட் சங்கங்கள் துடிப்புடன் செயல்பட்டு வருகின்றன. "ரோட்ராக்டர்கள்தான் ரோட்டரியின் இளைஞர் சக்தி" என்கிறார் அகர்வால். நிதியை சரியாக கையாள்வதன் மூலம் நிலைத்தன்மையை பெற முடியும் என்பதை அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். அதேபோல கட்டண பாக்கிகளைச் செலுத்தவும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ரோட்டரி உலகம் முழுவதும் ஒப்பிடமுடியாத தொடர்புக்கான வாய்ப்புகளை உங்களுக்கு வழங்குகிறது. இது உங்கள் உலகம் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள், என்கிறார்.

"மீண்டும் திரும்புதல்" (Ghar Wapsi) திட்டத்தின் கீழ் சங்கத்தின் தலைவர்கள் முன்னாள் உறுப்பினர்களை நேரில் சந்தித்து அவர்களது கவலைகளைப் புரிந்து கொண்டு அவர்களை மீண்டும் ரோட்டரியுடன் இணைக்கின்றனர்.

வாராணசியில் உள்ள RJ சங்கரா மருத்துவமனையுடன் இணைந்து 40-க்கும் மேற்பட்ட சங்கங்கள் கடந்த 6 மாதங்களில் வாராந்திர அடிப்படையில் கண் பரிசோதனை முகாம்களை நடத்தியுள்ளன. இதன் மூலம் 600 கண் நோயாளிகள் பலன் பெற்றனர். 200-பேருக்கு கண்புரை அறுவைச்சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. மூன்று அறக்கட்டளைகள், ஐந்து உலகளாவிய மானியங்கள் உள்பட மொத்தம் $3.2 லட்சம் நிதிப்பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.



**அசுதோஷ் அகர்வால்**
எலும்பியல் அறுவைச்சிகிச்சை நிபுணர்
RC வாராணசி எலைட்
RID 3120

## சேவை செய்வதே வாழ்க்கை



**D தேவேந்திரன்**
சர்வதேச பொருள் போக்குவரத்து
RC அண்ணாநகர் ஆதித்யா,
RID 3233

D தேவேந்திரன், 2001-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். மூத்த ரோட்டேரியன்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பால் ஈர்க்கப்பட்டார். "கடந்த பல ஆண்டுகளில் ரோட்டரி எனது மதிப்பு, தலைமைத்துவ அணுகுமுறை, நோக்கத்தை பண்படுத்தியுள்ளது. என்னைப் பொருத்தவரை சேவைதான் வாழ்க்கை" என்கிறார் அவர்.

நேர்மை, சமூக பொறுப்புணர்வு மற்றும் சேவை மனப்பான்மை உள்ளவர்களை ரோட்டரிக்கு அழைக்குமாறு சங்கத் தலைவர்களை அவர் வலியுறுத்துகிறார். ஆரம்பத்திலிருந்தே ரோட்டரி பற்றிய சிறந்த அறிவும், அர்த்தமுள்ள அர்ப்பணிப்பும் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

இந்த ஆண்டின் முக்கிய முயற்சிகளில் 1,500-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடையும் வகையில் மாவட்ட ஒலிம்பியாட் 2025 நடத்தப்பட்டது. மேலும் புற்றுநோய் விழிப்புணர்வு நடைப்பயணம், பரிசோதனை முகாம்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மகளிர்க்கு பொருளாதார சுதந்திரம் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு அவர்களுக்கு திறன் வளர்ப்பு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டுக்கான TRF இலக்கு $1,00,000. மேலும் வருடாந்திர நிதி, போலியோ மற்றும் அறக்கட்டளை பங்களிப்பிலும் கவனம் செலுத்தப்படும். சவால்கள் இருந்தபோதிலும் "வெளிப்படையான தொடர்பு மற்றும் TRF-ன் தாக்கத்தை வெளிப்படுத்துவதன் மூலம் நன்கொடைகளை ஈர்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார். சுகாதாரம், கல்வி, குடிநீர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் கல்வி அறிவு ஆகியவற்றில் CSR கூட்டாண்மைகளை மாவட்டம் வலுப்படுத்தி வருகிறது" என்று அவர் கூறுகிறார். மாவட்டம் சார்பில் இரண்டு புதிய ரோட்ராக்ட் சங்கம் மற்றும் 11 இன்டராக்ட் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

# அர்த்தமுள்ள உறுப்பினர்கள், எண்ணிக்கை அல்ல

B R ஸ்ரீதரின் ரோட்டரி பயணம் 2000-ம் ஆண்டில், அவரது வாடிக்கையாளர் ஒருவர் விடுத்த அழைப்பின் சந்திப்புக் கூட்டத்தில் தொடங்கியது. அந்த அனுபவம் கூட்டுச் சேவையின் மகத்துவத்தை அவருக்கு அறிமுகப் படுத்தியது. “வலுவான சங்கங்கள் அர்த்தமுள்ள ஈடுபாட்டின் மூலம் கட்டமைக்கபடுகின்றனவே தவிர, எண்ணிக்கையினால் அல்ல” என்று அவர் நம்புகிறார். செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தவும், உறுப்பினர்களின் அனுபவங்களை தலைமைத்துவம் கூட்டங்களில் வெளிப்படுத்துவதன் மூலமும் சங்கத்தை வலுப்படுத்த முடியும் என்பது அவரது ஆழமான நம்பிக்கை. தனிப்பட்ட தொடர்புகள் உறுப்பினர்கள் வளர்ச்சிக்கு சிறந்த வழி என்கிறார் அவர்.

பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், இளைஞர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளை ஈடுபடுத்தவும், பிரதிநிதித்துவம் குறைந்த துறைகளில் இருந்து நிபுணர்களை ஈர்க்கவும் மாவட்டம் செயல்பட்டு வருகிறது. DEI, PETS, SETS மற்றும் பிறமாவட்டத் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களுக்கும் ஒரே மாதிரியான ஆதரவு வழங்கப்படுகிறது.

சுகாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட சேவை திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடுதல், முதல் வகை நீரிழிவு நோய் தடுப்புக்கு ஆதரவு, மருத்துவ முகாம்கள், அரசு மற்று பொது சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவது ஆகியவை சுகாதார முன்முயற்சிகளில் அடங்கும். கிராமப்புற குடும்பங்களுக்கு கறவை மாடுகள் வழங்குதல் உள்ளிட்டவை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கும். சுற்றுச்சூழலை பாதுகாக்க மரம் நடுதல், பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றன.

TRF-க்கு $3.6 மில்லியன் நன்கொடை அளிக்க மாவட்டம் இலக்கு நிர்ணயித்துள்ளது. உலகளாவிய மற்றும் மாவட்ட மானியங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு சங்கமும் அதன் பலனை அனுபவிக்கவும், மாவட்டத்தில் ஒட்டுமொத்த நன்கொடை கலாசாரத்தை வலுப்படுத்துவதை உறுதிசெய்ய ஸ்ரீதர் விரும்புகிறார்.



**B R ஸ்ரீதர்**
கட்டிடக் கலைஞர்
RC பெங்களூரு சவுத்
RID 3191



**காமேஸ்வர் சிங் எலாங்பாம்**
முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்
RC ஷில்லாங், RID 3240

# சிறிய நன்கொடைகள், பெரிய தாக்கம்

காமேஸ்வர் எலாங்பாம், ரோட்டரியில் சேர்ந்த கால கட்டத்தில், தொழில்முறையிலான பொறுப்புகள் அவரது பங்கேற்பை மட்டுப்படுத்தின. ஒரு மூத்த ரோட்டேரியன் கடமைப் பொறுப்புகள் இருந்தபோதிலும் அவர் ரோட்டரி சந்திப்பு கூட்டத்தையோ அல்லது சேவைத் திட்டங்களையோ தவறவிட்டதில்லை. அவரின் அர்ப்பணிப்பு உணர்வால் ஈர்க்கப்பட்டு நானும் எனது செயல்பாடுகளை மாற்றிக்கொண்டேன் என்கிறார் டாக்டர் காமேஸ்வர்.

TRF-க்கு சிறிய பங்களிப்பின் சக்தியை அவர் உறுதியாக நம்புகிறார். “20 டாலர் அல்லது 30 டாலர்கள் பங்களிப்புகூட கண்டங்கள் முழுவதும் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். 2021-22 இல் மாவட்ட TRF செயலாளராக அவர் இருந்தபோது, ஒவ்வொரு பங்களிப்பாளரும் எவ்வளவு நன்கொடை கொடுத்திருந்தாலும் அதை கணக்கில் கொள்ளாமல் அவர்களை அங்கீகரித்து பாராட்டும் முறையை அறிமுகப்படுத்தினார். தற்போது மாவட்டத்தின் TRF-ற்க்கான இலக்கு $1 மில்லியன் ஆகும்.

CSR படிவம் 1 மற்றும் செல்லுபடியாகும் 12A படிவம் மற்றும் 80 G பதிவு ஆகியவை கட்டாயம் என்பதன் காரணமாக CSR பங்களிப்புகள் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து CSR திட்டங்களைச் செயல்படுத்துவதை உறுதிசெய்ய மாவட்டம் இதர சங்கங்களின் ஆதரவைப் பெற்றது. மாவட்டத்தில் 150 புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். ஐந்து புதிய ரோட்டரி சங்கங்கள், 10 ரோட்ராக்ட் மற்றும் 11 இன்டராக்ட் சங்கங்கள் பட்டயப்படுத்தப்பட்டுள்ளன.

CSR நிதியுதவி மூலம் சில்சார் புற்றுநோய் மருத்துவ மனைக்கு கட்டடம் கட்டியது, உக்ராவில் மின்சார தகன மையம் அமைத்தது உள்ளிட்டவை மாவட்டத்தின் சில திட்டங்களாகும்.

# RC ஈரோடு நெக்சஸின் பலதரப்பட்ட சேவைகள்

ரோட்டரி செய்திக்குழு

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, ஹெல்ப்பிங் ஹார்ட் டிரஸ்ட்-ஐச் சேர்ந்த 50 குழந்தைகளுக்கு, RC ஈரோடு நெக்சஸ் (RID 3203) பிரத்யேகத் திரையிடல் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தது. இது அவர்களுக்கு ஒரு மறக்க முடியாத நாளாக அமைந்தது.

ரூ.50,000 செலவில், தலைவரின் மனைவி ஜெனிபர் கிளாடியஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்முயற்சி, பின்தங்கிய குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவர்கள் தங்கியிருந்த இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டு, முக மலர வைக்கும் சாக்லேட் பூங்கொத்துகளுடன் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வரவேற்கப்பட்டனர். கேக் வெட்டி கொண்டாட்டம் தொடங்கப்பட்டது, அதைத் தொடர்ந்து குழந்தைகளுக்கான திரைப்படம் திரையிடப்பட்டது. விறுவிறுப்பான DJ இசை அமர்வில், சிரிப்பும், நடனமும், மகிழ்ச்சியும் நிறைந்திருந்தது. அறுசுவை இரவு விருந்துக்குப் பிறகு குழந்தைகள் இல்லம் திரும்பினர். ஈரோடு பாரன்டிங் ஹப் இந்நிகழ்ச்சியின் இணைப் பங்காளராகச் செயல்பட்டது.

உலக குள்ளத்தன்மை தினத்தை (அக் 25) முன்னிட்டு, ரூ.70,000 மதிப்பிலான திட்டத்தின் கீழ், விழிப்புணர்வுப் பேரணியும் அதைத் தொடர்ந்து மருத்துவ முகாமும் சங்கத்தால் நடத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் குள்ளமானவர்கள் கலந்து கொண்ட இந்தத் தனித்துவமான ஊர்வலம், இசைக்குழுக்கள் மற்றும் மேள தாளங்களுடன் ஈரோடு அரசு மருத்துவமனையில் தொடங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. இது வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

பேரணிக்குப் பிறகு, CEEMA மாநாட்டு மையத்தில் நடைபெற்ற மருத்துவமுகாமில் 160-க்கும் மேற்பட்டோர் நீண்டகால நோய்களுக்காகப் பரிசோதிக்கப்பட்டனர். “உடல்நலப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டவர்கள், தொடர் சிகிச்சையை உறுதி செய்வதற்காக குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்,” என்று RC ஈரோடு நெக்சஸின் தலைவர் S பரணிதர் தெரிவித்தார். இந்த மருத்துவ முகாமை சங்கச் செயலாளர் R மதுமதி மற்றும் ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத் தலைவர் துரைராஜ் ஆகியோரும் இணைந்து ஒருங்கிணைத்தனர்.

மாற்றுத்திறனாளிகள் குழுவினரால் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளால் முகாம் நடைபெறும் இடம் களைகட்டியது. மேலும், மதிய உணவு மற்றும் சிற்றுண்டியுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ முகாம் லோட்டஸ் மருத்துவமனை, அரசன் கண் மருத்துவமனை மற்றும் சுமதி பல் மருத்துவமனை ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெற்றது.

ரோட்டரி ஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத்துடன்

*உலக குள்ளத்தன்மை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேரணியில், RC ஈரோடு நெக்சஸ் தலைவர் S பரணிதர் (வலமிருந்து இரண்டாவது) மற்றும் செயலாளர் R மதுமதி ஆகியோர் பங்கேற்பாளர்களுடன்.*



இணைந்து ரூ.40,000 மதிப்பிலான மளிகைப் பொருட்கள் மற்றும் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்கள் 25 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

அரசு தொடக்கப்பள்ளி மாணவர்கள் காலை மற்றும் மதிய உணவை அருந்தும்போது பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலை ஏற்படுத்தும் வகையில், அப்பள்ளியின் உணவுக் கூடத்திற்கு ரூ.1.25 லட்சம் செலவில் மேற்கூரையை சங்கம் அமைத்துக் கொடுத்தது. 350 மாணவர்கள் பயன் பெறும் வகையில் புதுப்பிக்கப்பட்ட இந்தச் சத்துணவு மையத்தை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் K பிரகாஷ் திறந்து வைத்தார்.

தீபாவளியை முன்னிட்டு, ஈரோடு மாவட்டத் தீயணைப்பு அலுவலகத்தின் ஆதரவுடன், குமாலன்குட்டை அரசு



மேல்நிலைப் பள்ளியில் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு செயல் விளக்கத்தை சங்கம் நடத்தியது. தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், "விபத்துக்களைத் தடுக்க பட்டாசுகளைப் பாதுகாப்பாகக் கையாள்வது" குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

ஈரோட்டிலிருந்து 22 கி.மீ தொலைவில் உள்ள கோபிச் செட்டிப்பாளையத்தில், பல தலைமுறை மாணவர்களை உருவாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ லக்ஷ்மண ஐயர் விடுதியின் புதுப்பிக்கப்பட்ட கட்டிடத்தை, பத்ம பூஷன் விருது பெற்ற 100 வயது சுதந்திரப் போராட்ட வீரர் கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதன் திறந்து வைத்தார். சங்க உறுப்பினர் குணசுந்தரி தங்கவேலு மற்றும் அவரது குடும்பத்தினர் இந்தச் சீரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி அளித்தனர். இந்த விடுதி மேம்பாட்டுத்திட்டம் 150 மாணவர்களுக்குப் பயனளிக்கும்.■

---

# டிட்வா புயல் நிவாரண நிதி

அழிவுகரமான புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்க, ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள் டிசம்பர் 2025-ல் புதிய 'டிட்வா புயல் நிவாரண நிதியை நிறுவினர். இந்தப் புதிய நிதி, பேரிடர் நிவாரண மானியங்கள் மூலம் வளங்களை வழங்கும்.

**டிட்வா புயல் நிவாரண நிதியானது:**

❖ மார்ச் 31, 2026 வரை பங்களிப்புகளை ஏற்றுக்கொள்ளும்.
❖ டிசம்பர் 3, 2026 வரை மானியங்கள் மூலம் மாவட்டங்களுக்கு நிதியை கிடைக்கச் செய்யும்.
❖ டிசம்பர் 4, 2026-க்குள் செலவிடப்படாத நிதியை, உலகெங்கிலும் உள்ள பேரிடர்களுக்குப் பயன்படுத்து வதற்காக, பேரிடர் நிவாரண நிதிக்கு மாற்றும்.

நீங்கள் ஆன்லைன் மூலமாகவோ, காசோலை மூலமாகவோ அல்லது DDF பரிமாற்றம் செய்வதன் மூலமாகவோ பங்களிக்கலாம்:

ஆன்லைனில் பங்களிக்க, https://my.rotary.org/en/disaster-response-fund என்ற இணையதளத்தைப் பயன் படுத்தவும்.

காசோலை மூலம் வழங்க: TRF அல்லது இணை அறக் கட்டளையின் பெயரில் காசோலையை எடுக்கவும்; பூர்த்தி செய்யப்பட்ட பங்களிப்புப் படிவத்தை இணைக்கவும்; படிவத்தின் (Purpose) பிரிவில், Other என்பதைத் தேர்ந்தெடுத்து, நிதியின் பெயரை (Cyclone Ditwah Response Fund) என்று எழுதவும்.

DDF-ஐ ஒதுக்கீடு செய்ய, மாவட்டத் தலைவர்கள் DDF பங்களிப்புப் படிவத்தைப் பயன்படுத்தலாம்.

'Raise for Rotary தளத்தில் டிட்வா புயல் நிவாரண நிதிக்காக யார் வேண்டுமானாலும் நிதி திரட்டலைத் தொடங்கலாம்.

'Raise for Rotary தற்போது 12 நாணயங்களை மட்டுமே ஏற்றுக்கொள்கிறது மற்றும் இது ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது.

'Raise for Rotary தளத்தில் டிட்வா புயல் நிவாரண நிதிக்காகச் செய்யப்படும் நன்கொடைகள், கீழே விவரிக்கப் பட்டுள்ளபடி வரவு வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும்:


Facebook அல்லது GoFundMe போன்ற மூன்றாம் தரப்பு தளங்களில் நடைபெறும் எந்தவொரு நிதி திரட்டலும் இந்தக் குறிப்பிட்ட நிதி விருப்பங்களை வழங்காது, மேலும் அவை அறக்கட்டளையின் வரவு மற்றும் அங்கீகாரத்திற்குத் தகுதியற்றவை.


**டிட்வா புயல் நிவாரண நிதிக்கான நன்கொடைகள்:**

❍ நன்கொடையாளரின் மொத்தத் திரள் பங்களிப்பில் கணக்கிடப்படும்.
❍ பால் ஹாரிஸ் ஃபெலோ, பால் ஹாரிஸ் சொசைட்டி, மேஜர் டோனர் மற்றும் ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி அங்கீகாரங்களில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
❍ நன்கொடையாளரின் சங்கம் 100% அறக்கட்டளை பங்களிப்பு பதாகையை அடைய உதவும்.
❍ சங்கத்தின் வருடாந்திர நிதிப் பங்களிப்பு, தனிநபர் பங்களிப்பு அல்லது SHARE கணக்கீடுகள் அல்லது DDF உருவாக்குதல் ஆகியவற்றில் வரவு வைக்கப்படாது.

டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்க RID 3220-க்கு பேரிடர் நிவாரண மானியங்கள் கிடைக்கின்றன. இந்த மாவட்டத்தின் DG மற்றும் DRFC ஆகியோர் பேரிடர் நிவாரண மானிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டும், இது மானிய மையத்தின் முகப்புப் பக்கத்தில் உள்ளது. அதிகபட்ச மானியத் தொகை நிதியின் இருப்பைப் பொறுத்து $50,000 ஆகும், மேலும் ஒரு மாவட்டம் ஒரே நேரத்தில் இரண்டு செயல்பாட்டில் உள்ள மானியங்களைக் கொண்டிருக்கலாம்.

# Membership & TRF contribution summary






*Membership figures as on December 1, 2025.
*TRF contribution figures as on November 30, 2025.

## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs | 36,653 | Rotary members | 1,166,380 |
| Rotaract clubs | 9,275 | Rotaract members | 137,075 |
| Interact clubs | 18,768 | Interact members | 431,802 |
| RCCs | 14,272 | | |

As on December 19, 2025

Go Green

# பசுஞ்சலவையால் ஏமாறாதீர்கள்

ப்ரீத் மேஹரா


“நீங்கள் சிலரை எப்போதும் ஏமாற்றலாம், எல்லாரையும் சில நேரம் ஏமாற்றலாம், ஆனால், எல்லாரையும் எல்லா நேரமும் ஏமாற்றமுடியாது” என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால், சிலர் எல்லாரையும் எல்லா நேரமும் ஏமாற்ற முயல்கிறார்கள், இவர்கள் முதன்மையாகக் குறி வைப்பது யாரை என்று பார்த்தால், பூமியின் நிலையை அறிந்தவர்கள், தாங்கள் அணிகிற, சாப்பிடுகிற, வாங்குகிற பொருட்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து வாழ்கிறவர்களைத்தான். இவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ விரும்புகிறார்கள், பூமிக்குத் தீங்கு விளைவிக்காத, சூழலுக்கு இதமான பொருட்களை நாடுகிறார்கள்.

இவர்களுக்கு எதிராகப் பரவி வருகிற, 2026-ல் நாம் கவனமாகப் பார்க்கவேண்டிய போக்கு: பசுஞ்சலவை. நலத்தை முன்னிறுத்துகிற, பூமிக்குத் தீங்கு செய்யாத, சுற்றுச்சூழலுக்கு இதமான பொருட்களைத்தான் நாம் வாங்குகிறோம் என்று வாடிக்கையாளர்களை நம்பவைக்கிற, தவறாக வழிநடத்துகிற பழக்கத்தைத்தான் பசுஞ்சலவை என்கிறார்கள்.

இதற்குச் சில எடுத்துக்காட்டுகள், இதோ.

பொருட்களில் காணப்படும் மிகப் பொதுவான, தவறாக வழிநடத்தும் முழக்கங்களில் ஒன்று “100 சதவிகிதம் இயற்கையானது”. ஆனால், இதைச் சொல்லும் பொருளில் செயற்கை உட்பொருட்கள் இருக்கும். இந்தியா முழுவதும் சலவைத் தூள், உணவு, ஆயுர்வேதப் பொருட்கள், உடைகள் உள்ளிட்ட பல பிராண்டுகளில் இதைப் பார்க்கலாம். இந்த முழக்கத்தைச் சற்று முயற்சி செய்து அலசினால், இது அப்பட்டமான பொய் என்பதை நீங்கள் உணரலாம்.

கடந்த சில ஆண்டுகளில், இப்படிப்பட்ட பல பொருட்களை ஆராய்ச்சி, நுகர்வோர் அமைப்புகள் அடையாளம் கண்டுள்ளன. ஆனாலும் நிறுவனங்கள் இதுபோன்ற மிகைப்படுத்தல்களைத் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள்: “தூய்மையானது மற்றும் இயற்கையானது”, “நச்சுகள் அற்றது”, “சூழலுக்கு இதமானது”, “மறுசுழற்சி செய்யப்பட்டது”, “100% பெருங்கடல் பிளாஸ்டிக்” (கடற்கரைப் பகுதிகள், நீர்வழிகளில் பெறப்பட்ட பிளாஸ்டிக் குப்பை பெருங்கடலுக்குச் செல்லாதபடி தடுப்பதற்காக அதைக் கொண்டு செய்யப்பட்ட பொருட்கள்). இந்த முழக்கங்களில் பெரும் பாலானவை உண்மையில்லை,



அல்லது, பாதி உண்மைகள்தான்.

ஒரு தனிப்பட்ட எடுத்துக்காட்டின் மூலம் இதை விளக்குகிறேன். சமீபத்தில், நான் என் உறவினருக்குப் படுக்கை விரிப்புகள் வாங்கச் சென்றேன். அவர் பருத்திப் படுக்கை விரிப்புகளை மட்டும் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தார். உண்மையில், அவர் இயற்கை முறைப் பருத்தியிலிருந்து செய்த, சுற்றுச்சூழலுக்கு இதமான படுக்கை விரிப்புகளைத்தான் விரும்பினார். நான் அவருக்காகப் பல கடைகளுக்குச் சென்றேன், வெவ்வேறு பொருட்களால் செய்த பல வகைப்படுக்கை விரிப்புகளைக் கண்டேன், நான் சரியானதைத்தான் வாங்குகிறேனா என்று உறுதி செய்வதற்காக அவற்றின் அடையாளச் சீட்டுகளைப் படித்தேன். பல படுக்கை விரிப்புப் பிராண்டுகளில் “பருத்தியைப்போல் மென்மையானது” என்ற விற்பனைச் சொல்லைத் திரும்பத் திரும்பப் பார்த்தேன். “இது உண்மையில் பருத்திதான்” என்று கடைக்காரர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், அது பருத்தியுடன் குறிப்பிட்ட அளவு செயற்கை இழையைச் சேர்த்தது. அது தூய பருத்தி இல்லை.

மூன்று கடைகளைப் பார்த்தபிறகு, நான் 100% பருத்தியில் செய்த படுக்கை விரிப்புகளைக் கண்டேன். அவற்றின் விலை கூடுதலாக இருந்ததுதான். ஆனால், அவை உண்மையானவை, இயற்கை முறைப் பருத்திச் சின்னத்தைக் கொண்டவை. அது கடினமான தேடல்தான். நான் சொல்ல விரும்புவது, சில சொற்களைத் திருப்பிப் போட்டு, நல்ல விற்பனையாள் ஒருவரை வேலைக்குச் சேர்த்தால் ஒரு நுகர்வோரை அவருக்கே தெரியாமல் “பசுஞ்சலவை” செய்துவிடலாம்.

பசுஞ்சலவை என்றால் என்ன? இதற்குச் சொல்லப்படும் ஒரு வரையறை: “ஒரு நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பழக்கவழக்கங்கள் அல்லது ஒரு பொருள் அல்லது சேவையின் சுற்றுச்சூழல் நன்மைகளைப் பற்றிய தவறான தகவல்களை நுகர்வோருக்குப் பரப்பும் செயல்”. இந்திய விளம்பரப்படுத்தல் தரநிலைகள் அவை (ASCI) நடத்திய ஓர் ஆய்வின்படி, நிறுவனங்களின் பசுமை அறிவிப்புகளில் 79% மிகைப்படுத்தப்பட்டவை அல்லது தவறாக வழிநடத்துகிறவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

பசுஞ்சலவையால் பொதுவாகப் பாதிக்கப்படும் பொருள் வகைகள்: அழகுப் பொருட்கள், பொதியாக்கப்பட்ட உணவு, துணிகள், காலணிகள். ஆக, நிறுவனங்கள் தங்கள் “சூழலுக்கு இதமான” பொருட்களை முன்னிறுத்தும் போது, அவர்கள் தங்கள் மொத்தப் பொருட்களில் ஒரு சிறு பிரிவைப் பற்றிதான் பேசுகிறார்கள். எடுத்துக் காட்டாக, ஒரு நிறுவனம் தன் “வளங்குன்றா”க் காலணிகளைச் சந்தைப்படுத்துகிறது. ஆனால், அவர்கள் “சுற்றுச்சூழலுக்கு இதமான” செயல்முறையைப் பயன்படுத்திச் செய்த சில காலணிகளை மட்டும் அது குறிக்கலாம். அதே நேரம், அவர்களுடைய பொருட்களில் பெரும்பாலானவை இந்தியாவின் சிறு நகரங்களில் தொழிற்சாலைகளைப்போன்ற காற்று, நீர் மாசு அல்லது தன் பணியாளர்களுடைய வேலை நிலைகளைப்பற்றிக் கவலைப்படாத ஒரு வழங்கல் சங்கிலியின் வழியாக உருவாக்கப்படலாம்.

உணவுத் தயாரிப்பாளர்கள் வேண்டுமென்றே “இயற்கை முறை”, “தூய்மையானது”, “முழுமையானது”, “பூமிக்கு நல்லது” போன்ற பல சொற்களைப் பயன்படுத்தித் தங்கள் நற்பெயரைக் கட்டமைக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, தேனைப்பற்றிப் பேசுவோம். இந்தப் பொருளை விற்கும் பல பிராண்டுகள் அதை “இயற்கையானது” அல்லது “தூய்மையானது” என்றும், தேன் கூட்டிலிருந்து நேராக வருவது என்றும் அழைக்கிறார்கள். ஆனால், பல நேரங்களில் இது உண்மையாக இருப்பதில்லை. சில ஆண்டுகளுக்குமுன்னால், நன்கு அறியப்பட்ட ஓர் உற்பத்திப் பிரிவில் இருந்த பொருட்களைப் பரிசோதித்தபோது, அவர்கள் சந்தைப்படுத்துகிற தேனில் சர்க்கரை சேர்க்கப்படுவது கண்டறியப்பட்டது. அவர்கள் தலை குனிந்து நின்றார்கள்.

### நாம் பசுஞ்சலவையிலிருந்து தப்புவது எப்படி?

- ❖ “பசுமை” போன்ற சொற்களையோ, இயற்கைப் படங்களையோ கொண்ட, “மட்கக்கூடியவை” (அவை 200 ஆண்டுகளுக்குப்பின் மட்கலாம்!) என்று அறிவிக்கிற பொருட்களை நம்பாதீர்கள்
- ❖ “நலமானது” என்றோ “இயற்கையானது” என்றோ சொல்கிற உறைகளிலும் உட்பொருட்களைக் கவனமாகப் பாருங்கள். ஏனெனில், சர்க்கரை, பசையம் நிறைந்த பல தின்பண்டங்களும் அப்படிச் சொல்கின்றன
- ❖ சான்றிதழ்களைக் கவனியுங்கள். சான்றளிக்கப்பட்ட இயற்கை முறைப் பொருட்கள் அல்லது நிறுவனங்கள் எப்போதும் அலுவல் பூர்வமான அங்கீகார முத்திரை ஒன்றைக் காட்சிப்படுத்துகின்றன.





எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

# ஆக்ராவில் சிறப்புக் குழந்தைகளுக்கான கும்ப மேளா

ஆக்ராவின் கேல்கான் விளையாட்டு சங்கத்தில் 250 மாற்றுத்திறனாளி குழந்தைகள் விளையாட்டு விழாவன்று ஒன்றுகூடினர். விளாயாட்டு, துணிச்சல், அசைக்கமுடியாத நம்பிக்கையின் கொண்டாட்டமாக விழா அமைந்தது.

ஆக்ரா ராயல் ரோட்டரி சங்கம் (RID 3110), பிரயாஸ் குழந்தைகள் பிஸியோதெரபி மையத்துடன் இணைந்து இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. "இதில் குழந்தைகள் ஓடி, குதித்து, சிரித்து மகிழ்ந்தனர். மேலும் குழந்தைகளின் விளையாட்டை பார்த்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் மகிழ்ச்சித் துள்ளலில் ஆனந்தக் கண்ணீர்வடித்தனர்" என்று அனைத்து பெண் உறுப்பினர்கள் சங்கத்தின் தலைவர் மீரா குப்தா



*HPV தடுப்பூசி முகாம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.*

*மேலே: இடமிருந்து வலம்:* RID 3110 DG *ராஜன் வித்யார்த்தி,* PDG *நீரவ் அகர்வால் மற்றும்* RC *ஆக்ரா ராயல் தலைவி மீரா குப்தா ஆகியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுடன்.*



கூறினார். இளம் குழந்தைகள் தங்கள் வயதை மீறி ஒவ்வொரு விளையாட்டையும் மனஉறுதியுடன் சவாலாக ஏற்றுக்கொண்டனர். “மாற்றுத் திறனாளி குழந்தை களிடையே நம்பிக்கையை அதிகரிக்கவும், அவர்களை பிரதான சமூகத்தினரையே நெருங்கி வரச்செய்யும் நோக்கிலேயே இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது,” என்றார் அவர்.

விளையாட்டு விழாவின் தொடக்கத்தில் தொழில்கள் துறை துணை ஆணையர் சோனாலி ஜிண்டால், சிறப்புக் குழந்தைகளின் மனநிலையை தனது பேச்சால் ஊக்கப்படுத்தினார். மேலும் உள்ளடக்கம் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதை பார்வையாளர்களுக்கு நினைவுபடுத்தினார். DG ராஜன் வித்யார்த்தி பேசுகையில், இந்த நிகழ்வு சிறப்புக் குழந்தைகளுக்கான கும்பமேளா போல் இருந்ததாக குறிப்பிட்டு பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தினார்.

IPDG நீரவ் அகர்வால், மீரா, பிரயாஸ் அறங்காவலர் சந்தியா குப்தா, கேல்கான் சங்க அறங்காவலர்கள் உமேஷ் குப்தா மற்றும் முகேஷ் குப்தா, மற்றும் இதர சங்கங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் பதக்கம் வழங்கும் நிகழ்வில் வெற்றியாளர்களை கைதட்டி, ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினர்.

“இது ஒரு விளையாட்டுப் போட்டியைவிட மேலானது. சிறப்புக் குழந்தைகளுக்கு யாருடைய அனுதாபமும் தேவையில்லை. அவர்களுக்குத் தேவை வாய்ப்புகள் தான். தங்கள் திறமையை வெளிப் படுத்த அவர்களுக்கு ஒரு மேடைதான் தேவை. வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் அவர்கள் பிரகாசிப்பார்கள்” என்று மீரா மேலும் கூறினார்.

## HPV தடுப்பூசி

நடப்பு ரோட்டரி ஆண்டில் அரசுப் பள்ளி மாணவிகள் 150 பேருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான தடுப்பு விழிப்புணர்வு பிரசாரத்தின் ஒரு பகுதியாக தடுப்பூசிகள் போடப்பட்டன.

இதுபோன்று ராம்வேத் மருத்துவ மனையில் நடைபெற்ற ஒரு முகாமில், கணேஷ்ராம் நகர் சரஸ்வதி பாலிகா வித்யா மந்திரில் படிக்கும் 60 மாணவிகளுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய் தடுப்புக்கான இரண்டாவது மூன்றாவது தவணை HPC தடுப்பூசிகள் போடப்பட்டன. “புற்றுநோய் தடுப்புக்காக தடுப்பூசி போடும் தங்கள் சங்கத்தின் நடவடிக்கை எதிர் காலத்திலும் தொடரும்” என்று மீரா குறிப்பிட்டார்.■

# இராணுவப்பணி வாய்ப்புகள்



*கல்லூரி வளாகத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையின் ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் கண்காட்சி.*

RC பெங்களூரு தரபனஹள்ளி, RID 3192, M S பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான பணிவாழ்க்கை வழிகாட்டல் நிகழ்வு ஒன்றை நடத்தியது. இதில் எல்லைப் பாதுகாப்புப் படை, பிற சீருடைச் சேவைகளில் உள்ள பணி வாய்ப்புகள் விளக்கப்பட்டன.

BSF பொதுக் கண்காணிப்பாளர் தினேஷ் குமார் யாதவ் BSF-ல், UPSC, SSC, CAPF உள்ளிட்ட குடிமையியல் சேவைகளில் இணைவதற்கான ஆட்சேர்ப்புச் செயல்முறைகளை விளக்கினார். அவர் பாதுகாப்புச் சேவைகளுக்கு ஆயத்தமாகும் வியூகம், அங்குள்ள பணிப் பண்பாடு, பணிவாழ்க்கை முன்னேற்றத்தைப்பற்றி மாணவர்களிடம் பேசினார்.

இந்தக் கல்லூரி வளாகத்தில் BSF பயன்படுத்தும் ஆயுதங்கள், கருவிகளின் சிறப்புக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.■



## RID 2981

### RC பாண்டிச்சேரி மெரினா

குழந்தைகளுக்கு எதிரான துஷ்பிரயோகம் மற்றும் அது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இளம் மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த, புதுச்சேரியில், கல்மண்டபம் கிராமத்தில் உள்ள TTSTN அரசு மேனிலைப் பள்ளியில் போக்சோ விழிப்புணர்வு அமர்வு நடைபெற்றது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3000

### RC மதுரை நார்த் வெஸ்ட்

சங்கத்தின் செயலாளர் S S சிவகுமார் தலைமையில் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் நட்புறவு அடிப்படையிலான சந்திப்பில் கரூர், பிரயாக்ராஜ், அயோத்யா, கயா மற்றும் வாராணசி சென்று வந்தனர். RID 3120-க்கு உட்பட்ட நகரங்களில் அங்குள்ள சங்க உறுப்பினர்களுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர்.

## RID 3011

### RC தில்லி சப்தர்ஜங்

அரசுப் பள்ளியில் வாய்வழி சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அங்கு மாணவர்களுக்கு சரியானபடி பல்துலக்கும் முறைகள் சொல்லித்தரப்பட்டது. மாணவர்களுக்கு பற்பசை மற்றும் பல் துலக்கும் பிரஷ் ஆகியவை வழங்கப்பட்டன.





## RID 3020

### RC ஸ்ரீகாகுளம்

சங்கம் ஸ்ரீ சத்யசாய் மந்திரத்துடன் இணைந்து மாணவர்களுக்கு இரண்டு மாத கணினி பயிற்சியை அளித்து வருகிறது. ரோட்டேரியன் பசகடா சூரியநாராயணா அவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களை விளக்கினார்.

## RID 2982

### RC சேலம் ஃபினிக்ஸ்

சேலம் நகராட்சி ஆண்கள் (கோட்டை) உயர்நிலைப் பள்ளியில் ரூ. 1.8 லட்சம் செலவில் நிறுவப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை (RO), DG P சிவசுந்தரம் திறந்துவைத்தார். இதன் மூலம் 550 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும்.



## RID 3080

### RI மாவட்டம்

ரோட்டேரியின்கள் கர்ப்பபை வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகளுக்கு சென்றனர். ஒரு மாதம் நடைபெற்ற இந்த முகாமில் 1,700 பள்ளி மாணவிகளுக்கு HPV தடுப்பூசி போடப்பட்டது. RID 3030 உட்பட, ஹரித்வார், ராணிபூர், கன்கல் மற்றும் டூன் கங்கா சித்தர்வாலா ரோட்டரி சங்கங்கள் இதில் கூட்டாளர்களாகச் செயல்பட்டனர்.



## RID 3053

### RC ஜோத்பூர் மிட்-டவுன்

இந்த ரோட்டரி ஆண்டின் முதல் நாளில் அறிவிக்கப்பட்ட ஸ்ரீமதி சர்லா கார்க் அரசுப் பள்ளியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய கழிப்பறை தொகுதி திறக்கப்பட்டது.

# முக்கியத்துவம் வாய்ந்த எண்கள்

கீதா மத்தாய்

தற்காலத்தில் பலரும் தங்கள் உடல் தோற்றத்தில் திருப்தியின்றி, தங்கள் மருத்துவர்களிடம் தாங்கள் “மிகவும் குண்டாக” இருப்பதாகவும் அல்லது தங்கள் “உடல்வாகு சரியில்லை” என்றும் கூறுகிறார்கள். தொடைகள், இடுப்பு, கைகள் அல்லது வயிறு போன்ற உடலின் குறிப்பிட்ட பாகங்களில் உள்ள எடையை மருத்துவ உதவியுடனோ அல்லது ஏதேனும் அதிசயத்தின் மூலமோ குறைத்துவிடலாம் என்று நம்புகிறார்கள். இதற்கு நேர்மாறாக, அதிக எடையுடன் இருக்கும் சிலர், “நான் நன்றாக இருக்கிறேன்” என்று கூறி, டயட், உடற்பயிற்சி அல்லது வாழ்க்கை முறையை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறார்கள்.

அதேசமயம், மிகச் சிறிய எண்ணிக்கையிலானோர் ஆரோக்கியமான முறையில் எடையை அதிகரிக்க விரும்புகிறார்கள். இதற்கு உணவின் அளவை அதிகரிப்பது மற்றும் அதிக கலோரி கொண்ட சிற்றுண்டிகளைச் சேர்ப்பதன் மூலம் எடை அதிகரிப்பை அடையலாம். அத்துடன், தினமும் சுமார் 20 நிமிடங்கள் ஏரோபிக் பயிற்சியும், அதைத் தொடர்ந்து 20 நிமிடங்கள் பளு தூக்கும் பயிற்சியும் செய்வது தசை எடையைக் கூட்ட உதவும்.

“நன்றாகத் தெரிவது” அல்லது விரும்பத்தக்க உடல் எடையைப் பராமரிப்பது என்பது தனிப்பட்ட கருத்து சார்ந்தது அல்ல. இது அறிவியல் பூர்வமான அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டது, குறிப்பாக, எடை பார்க்கும் இயந்திரம் மற்றும் அளவிடும் நாடாவைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் உடல் நிறை குறியீட்டெண் (Body Mass Index - BMI) ஆகும். உங்கள் எடையை (கிலோகிராமில்) உங்கள் உயரத்தால்(மீட்டரில்) வகுப்பதன் மூலம் BMI பெறப்படுகிறது.

பெரியவர்களுக்கான BMI மதிப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

18.5-க்குக் கீழே - எடை குறைவு
18.5 - 24.9 - இயல்பு / சராசரி
25.0 - 29.9 - அதிக எடை
30.0 மற்றும் அதற்கு மேல் - உடல் பருமன்

BMI பயனுள்ளதாக இருந்தாலும், அதிக தசையமைப்பு கொண்டவர்கள், மிகவும் மெலிந்தவர்கள், கர்ப்பிணிகள் அல்லது மிகவும் உயரம் குறைந்தவர்களை இது துல்லியமாக வகைப்படுத்துவதில்லை. அதிக தசை கொண்டவர்கள் உடலில் குறைந்த கொழுப்பு இருந்தாலும் “அதிக எடை” கொண்டவர்களாகத் தோன்றலாம்; அதே சமயம் சில மெலிந்தவர்கள் போதுமான தசை இல்லாவிட்டாலும் “இயல்பானவர்” போலத் தோன்றலாம்.

இரண்டு முதல் இருபது வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, வயது மற்றும் பாலினம் சார்ந்த சதவீத வரைபடங்களைப் பயன்படுத்தி BMI புரிந்துகொள்ளப்படுகிறது. 95-வது விகிதத்திற்கு மேல் உள்ள எந்தவொரு குழந்தையும் பருமனானவராகக் கருதப்படுகிறார். அதிக எடையுள்ள குழந்தைகள் பெரும்பாலும் வளர்ந்த பிறகு உடல் உழைப்பற்ற, அதிக எடையுள்ள பெரியவர்களாக மாறி, நீண்ட கால உடல்நல அபாயங்களைச் சந்திக்க நேரிடுவதால், குழந்தைப் பருவ உடல் பருமனைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

உடல் கொழுப்பு பரவல் மற்றொரு முக்கியமான காரணியாகும். சிலருக்கு தோலுக்கு அடியில் சீராகக் கொழுப்புச் சேமிக்கப்படுகிறது, ஆனால் வேறு சிலர் வயிற்றைச் சுற்றியே அதிக



கொழுப்பு சேரும். இடுப்பு மற்றும் தொடைகளில் கொழுப்பு சேரும் "பேரிக்காய் வடிவ" உடலை விட, வயிற்றுப் பகுதியில் கொழுப்பு சேரும் "ஆப்பிள் வடிவ" உடல் மிகவும் ஆபத்தானது. ஏனெனில் வயிற்றுக் கொழுப்பு உள்ளுறுப்புகளைச் சுற்றிப் படிகிறது- இது சர்க்கரை நோய், அதிக கொழுப்பு, உயர் ரத்த அழுத்தம், பக்கவாதம் மற்றும் இதய நோய்களுடன் வலுவாகத் தொடர்புடையது.

இந்த அபாயத்தை மதிப்பிட இடுப்பு மற்றும் பிட்டச் சுற்றளவு விகிதம் ஒரு எளிய வழியாகும். பெண்களுக்கு 0.85-க்கு குறைவாகவும், ஆண்களுக்கு 0.90-க்கு குறைவாகவும் இருப்பது ஆரோக்கியமான விகிதமாகும். ஒருவருக்கு அதிக BMI இருந்தாலும், இந்த இடுப்பு-பிட்ட விகிதம் சீராக இருந்தால், அவர் ஆரோக்கியமான வரம்பிற்குள் வரலாம்; இது குறைந்த உள்ளுறுப்பு கொழுப்பைக் குறிக்கிறது.

இடுப்புச் சுற்றளவு மட்டுமே கூட மற்றொரு நம்பகமான குறியீடாகும். பெண்களுக்கு 35 அங்குலத்திற்கு அதிகமாகவும், ஆண்களுக்கு 40 அங்குலத்திற்கு அதிகமாகவும் இருந்தால் அது ஆபத்தானதாகக் கருதப்படுகிறது.

எளிய உடல் செயல்பாடு சோதனைகள் கூட மதிப்புமிக்கத் தகவல்களை வழங்குகின்றன.

**"எழுந்து நிற்கும் சோதனை":** தரையில் அமர்ந்து, கைகள் அல்லது பிற உடல் பாகங்களின் உதவியின்றி எழுந்து நிற்க முயற்சிக்க வேண்டும். ஆரோக்கியமான ஒரு பெரியவர் 8 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெறுவார். 5 அல்லது அதற்குக் குறைவான மதிப்பெண் என்பது மோசமான வலிமை, சமநிலை மற்றும் ஒட்டுமொத்த உடல்நலக் குறைவைக் குறிக்கிறது.

**புல்-அப் சோதனை:** இது வலிமை, சகிப்புத்தன்மை மற்றும் நரம்பு-தசை ஒருங்கிணைப்பை மதிப்பிடுகிறது. உடற்தகுதி உள்ள ஆண்களால் சுமார் 10 புல்-அப்ஸ்களும், பெண்களால் 2 புல்-அப்ஸ் வரை செய்ய முடியும்.

நவீன ஆராய்ச்சியின்படி, BMI, உடல் கொழுப்புப் பரவல், இடுப்புச் சுற்றளவு மற்றும் உடல் செயல்பாடு சோதனைகள் ஆகிய அனைத்து அளவீடுகளையும் ஒன்றாகக் கருத்தில் கொண்டே ஒருவரின் முழுமையான ஆரோக்கியத்தை அறிய வேண்டும். ஒருவர் "ஆரோக்கியமற்றவர்" என்ற வரம்புக்குள் வந்தால், சர்க்கரை நோய், அசாதாரண கொழுப்பு அளவுகள், உயர் ரத்த அழுத்தம், பக்கவாதம் மற்றும் இதய நோய் போன்ற வளர்சிதை மாற்றக் கோளாறுகளின் ஆபத்து கடுமையாக அதிகரிக்கிறது. ஆயுட்காலம் மற்றும் வாழ்க்கைத் தரமும் குறையக்கூடும்.

எடை குறைப்பு இன்று ஒரு மருத்துவ சவாலாகவும், வளர்ந்து வரும் ஒரு வணிகத் துறையாகவும் மாறியுள்ளது. ஏராளமான நாகரிக உணவுக் கட்டுப்பாடுகள் இணையத்திலும் கடைகளிலும் வலம் வருகின்றன. இந்த உணவு முறைகள் பெரும்பாலும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைத் தவிர்க்கின்றன அல்லது வெகுவாகக் குறைக்கின்றன. பல முறைகள் உணவுக்குப் பதிலாக ஷேக்கள் அல்லது பொடிகளைப் பரிந்துரைக்கின்றன, மேலும் சில விளம்பரங்கள் உடற்பயிற்சி தேவையே இல்லை என்று பொய்யாகக் கூறுகின்றன. நம்பமுடியாத முடிவுகளை விளம்பரப்படுத்த "முன்பு மற்றும் பின்பு" புகைப்படங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உணவுக் கட்டுப்பாடு மட்டுமே எடையைக் குறைக்க உதவினாலும், அது உடல் தகுதியை மேம்படுத்தாது. முறையான உடற்பயிற்சி இல்லாவிட்டால், தசைக்கும் கொழுப்புக்கும் உள்ள விகிதம் மாறாமல் இருக்கும், மேலும் உடல் பருமனுடன் தொடர்புடைய உடல்நல அபாயங்கள் தொடரும். மேலும், மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது இயற்கைக்கு மாறான உணவு முறைகளை நீண்ட காலத்திற்குத் தொடர முடியாததால், குறைந்த எடையைத் தக்கவைத்துக்கொள்வது கடினமாகிறது. பல எடை குறைப்புப் பொடிகள் விலை உயர்ந்தவை மட்டுமல்லாமல், எபெட்ரின், தைராய்டு ஹார்மோன்கள், கிரியேட்டின், அமினோ அமிலங்கள், ஹார்மோன்கள் அல்லது ஸ்டெராய்டுகள் போன்ற பொருட்களையும் கொண்டிருக்கலாம்.

வயிற்றின் கொள்ளளவைக் குறைக்கும் அறுவை சிகிச்சை முறைகளும் குறிப்பிடத்தக்க எடை இழப்பை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும், உடற்பயிற்சியும் உடன் இல்லாவிட்டால், இவை தானாகவே உடல் தகுதியையோ அல்லது தசை வலிமையையோ மேம்படுத்தாது.

நீங்கள் ஓரளவு உடற்தகுதியுடன் இருந்தாலும், அதிக உடல் எடையைச் சுமப்பது இதயம், முதுகுத்தண்டு, இடுப்பு மற்றும் முழங்கால் மூட்டுகளுக்குக் கூடுதல் அழுத்தத்தை அளிக்கிறது. உடற்தகுதி மற்றும் எடைக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கையாள்வதே சிறந்தது.

நீண்ட கால ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மிகவும் எளிமையான மற்றும் பயனுள்ள வழிமுறை உடற்பயிற்சியாகும். தினமும் 40 நிமிடங்கள் நடப்பது, ஓடுவது, நீச்சல் அடிப்பது அல்லது சைக்கிள் ஓட்டுவது இதய ஆரோக்கியத்தை அதிகரிக்கும், மன விழிப்புணர்வை மேம்படுத்தும், மேலும் முதுமை வரை தசை எடையைப் பாதுகாக்க உதவும். எடை பார்க்கும் இயந்திரத்தில் ஒரு "சரியான" எடையை அடைவதை விட, சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருப்பது மிகவும் முக்கியமானது.



எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## 700 குழந்தைகளுக்குப் பரிசு அட்டைகள்

RC கல்கத்தா மகாநகர், RID 3291, தொடங்கிய புன்னகைத் தெருத் திட்டத்தின் தொடக்க விழாவில் கொல்கத்தா நகரத் தலைவர் தெபசீஷ் குமார் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். 700 குழந்தைகளுக்குத் தலா ரூ.1,000 மதிப்புள்ள பொருள் வாங்கும் அட்டைகள் வழங்கப்பட்டன. இந்தச் சங்கம் மற்ற 7 ரோட்டரி சங்கங்கள், இன்னர் வீல் மாவட்டம் 3291 உடன் இணைந்து 700 குழந்தைகளுக்கும் உடைகள், சாக்லெட்கள், பள்ளிப் பைகள், பரிசுப் பொருள் பைகள், உணவுப் பொட்டலங்களை வழங்கியது. இந்த நிகழ்ச்சியில் PRIP சேகர் மேத்தா, DG ராமேந்து ஹொம்சௌத்ரி, லயன்ஸ் மாவட்டம் 322B1 ஆளுநர் மஞ்சு சமரியா-வும் பங்கேற்றனர்.■



*புராஜெக்ட் ஸ்மைல் ஸ்ட்ரீட் தொடக்க விழாவில் DG ரமேந்து ஹோம்சௌத்ரி மற்றும் PRIP சேகர் மேத்தா.*

## சதாரா மருத்துவமனைக்குக் கண்புரைக் கருவி

சதாராவில், சவ்கார் தொண்டு மருத்துவமனையின் கண் மருத்துவ OPD மையத்துக்கு RC புணே ஹெரிட்டேஜ், RID 3131, கண் புரை அறுவைச் சிகிச்சைக் கருவி ஒன்றைக் (ரூ.20 லட்சம்) கொடையளித்தது. மிசுகி பவர் ப்ராடக்ட்ஸ் நிதியளித்த இந்தத் திட்டம் ஆண்டுக்கு 1,500 நோயாளிகளுக்குப் பயன்படும்.■



*RC புனே ஹெரிட்டேஜ் உறுப்பினர்களுக்கு அதிநவீன உபகரணங்கள் குறித்து விளக்கமளிக்கப்படுகிறது.*

## மாற்றுத்திறனாளித் தடகள வீரர்கள் பெருமைப்படுத்தப்பட்டனர்

இலங்கையில் பன்னாட்டு த்ரோபால் போட்டியில் பங்கேற்கிற, கர்நாடகத்தைச் சேர்ந்த 3 மாற்றுத் திறனாளித் தடகள வீரர்களை RC தும்கூர், RID 3192 பெருமைப்படுத்தியது. முன்னாள் சங்கத்தலைவர் நாகேஷ் குமார், சங்கத்தின் அறங்காவலர் அனிதா வீட்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. போட்டிச் செலவுகளுக்கென இவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.■




*தும்கூரில் ஒரு பாரா தடகள வீரரை ரோட்டேரியன்கள் பாராட்டினர்.*



RC *டெல்லி மயூரி விஹார் துணைத் தலைவர் உமேஷ் சர்மா ஒரு சிறுமிக்கு மடிக்கணினி மற்றும் கேமராவை வழங்குகிறார்.*

## ஆதரவற்ற பெண்களுக்கு உடைகள், மடிக்கணினிகள்

ஃபரீதாபாதில் உள்ள ஆர்ய கன்யா சதன் என்ற ஆதரவற்ற பெண்கள் இல்லத்தில் வசிக்கும் ஆதரவற்ற பெண்களுக்கு ஆடைகள், மடிக்கணினிகளை வழங்கியது RC டெல்லி மயூர் விகார், RID 3012. ஆடைகளை சங்கத் தலைவர் விமல் அகர்வால், மற்றும் விபா ஆதரித்தனர். முன்னாள் தலைவர் அர்விந்த் ஜெயின், மற்றும் நீலம் கம்பளி மேலங்கிகளை வழங்கினார்கள். ராஜீவ் குப்தா, மற்றும் சசி மடிக்கணினிகளைக் கொடையளித்தனர்.■

# Membership and Public

| Membership Awards | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| **Highest Rotary membership growth** | Chetan Desai (3141) | Mahaveer Bothra (3233) |
| **Highest Rotaract membership growth** | Rajpal Singh (3080) | Mahaveer Bothra (3233) |
| **Highest women membership growth** | Mahesh Trikha (3011) | N S Saravanan (3234) |
| **Highest membership retention** | Rahul Srivastava (3053) | Suresh Babu (3203) |
| **Highest young members inducted** | Mohan Parashar (3055) | Sushena Ranatunga (3220) |




IPDG *துஷார் ஷா மற்றும் அவரது மனைவி நேஹால்* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவால் கௌரவிக்கப்படுகிறார்கள். இடமிருந்து:* RI *இயக்குநர்* M *முருகானந்தம்,* PDG *பிங்கி பட்டேல்,* PRID *ராஜு சுப்ரமணியன்,* RI *துணைத் தலைவர் அலைன் வான் டி போயல் மற்றும்* RI *இயக்குநர்* K P *நாகேஷ் ஆகியோரும் உள்ளனர்.*

## Public Image Champion Awards

| Zone 4 | Zone 5 | Zone 6 | Zone 7 |
|---|---|---|---|
| Tushar Shah (3060) | Santosh Sreedhar (3204) | Yagyansis Mohapatra (3262) | Sharath Choudary (3150) |
| Ravi Prakash (3080) | S Suresh Babu (3203) | Rajendra Man Sherchan (3292) | M Venkateswara Rao (3020) |
| Mohan Parashar (3055) | Meerankhan Saleem (3212) | Paritosh Bajaj (3120) | Suresh Saboo (3132) |
| Mahesh Trikha (3011) | - | - | - |
| Dinesh Mehta (3142) | - | - | - |

# Image Awards - 2024–25

| Membership Awards | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| **Highest Rotary membership growth** | Namrata (3250) | Suresh Saboo (3132) |
| **Highest Rotaract membership growth** | Binod Koirala (3292) | Shital Shah (3131) |
| **Highest women membership growth** | Namrata (3250) | Shital Shah (3131) |
| **Highest membership retention** | Kameswar Elangbam (3240) | Dev Anand (3182) |
| **Highest young members inducted** | - | M Venkateswara Rao (3020) |



*RI தலைவர் அரெஸ்ஸோ IPDG மகேஷ் த்ரிகா மற்றும் அவரது மனைவி சுஜாதா ஆகியோருக்கு விருதை வழங்குகிறார். RID-கள் நாகேஷ், முருகானந்தம் ஆகியோரும் உள்ளனர்.*



*இடமிருந்து: RID நாகேஷ், PRID அனிருதா ராய்சௌத்ரி, பத்மா குமாரி, IPDG M வெங்கடேஸ்வர ராவ், தலைவர் அரேஸோ மற்றும் RID முருகானந்தம்.*




*RI தலைவர் அரெஸ்ஸோ IPDG யக்யான்சிஸ் மற்றும் அருந்ததி மொஹபத்ரா ஆகியோருக்கு விருதை வழங்குகிறார். (இடமிருந்து): RID முருகானந்தம், PRID ராய்சௌத்ரி, PDG ஜெயஸ்ரீ மொஹந்தி, ஆனா, துணைத்தலைவர் டி போயல் மற்றும் RID நாகேஷ் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*

# இராணித் தேனீகளாலும் கடுமையாகக் கொட்டக்கூடும்

*நிஜ வாழ்க்கையிலிருந்து சில பயமுறுத்தும் உருவகங்கள், புத்தகக் கடைகளுக்கு ஒரு வேண்டுகோள் மற்றும் சிறந்த புத்தகங்களுடன் ஒரு புதிய ஆண்டை எதிர்நோக்குதல்.*


எனது அருகிலுள்ள புத்தகக் கடைக்கு (பெரிய நிறுவனத்தின் கிளை) சென்ற எனக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டது. சில வாரங்களுக்கு முன்பு பிரியம்பதா ஜெயகுமார் எழுதிய 'M.S. சுவாமிநாதன்: தி மேன் ஹு ஃபெட் இந்தியா' என்ற புத்தகத்தைத் தேடி அங்கு சென்றிருந்தேன். அவர்களிடம் அந்தப் புத்தகம் இல்லை. எனவே, அதற்கு முன்பதிவு செய்துவிட்டு, ஒடிசாவிற்கு ஒரு வாரம் விடுமுறைக்குச் சென்றேன். இண்டிகோ விமான நிறுவனத்தின் குளறுபடிகளால், திடீர் விமான ரத்துகளுக்குப் பிறகு, புவனேஸ்வரிலிருந்து சென்னைக்கு கடற்கரை ஒட்டிய கடினமான சாலை வழியாக 29 மணி நேரப் பயணத்தை மேற்கொண்டு வீடு திரும்பினோம். வீடு திரும்பியதும், உடல் வலி நீங்கி ஓய்வு எடுத்த பிறகு, மீண்டும் அந்தப் புத்தகக் கடைக்குச் சென்றேன். அப்போதும் அவர்களிடம் அந்தப் புத்தகம் இல்லை! ஆத்திரமடைந்த நான், "M S சுவாமிநாதன் இந்த நகரவாசிகளில் மிகவும் பிரபலமான ஒருவர், அவரைப் பற்றிய புத்தகமே உங்களிடம் இல்லையா? இது வெட்கக்கேடானது!" என அவர்களிடம் கத்தினேன்.

அனைவராலும் புரொபசர் என்று அழைக்கப்படும் அவருடன் எனக்கு ஏற்பட்ட அவ்வப்போதைய குறுகிய சந்திப்புகளில், இந்த புகழ்பெற்ற விஞ்ஞானியின் அன்பான, அடக்கமான, எளிமையான மற்றும் மனிதாபிமானமிக்க



சந்தியா ராவ்


பக்கத்தை நான் கண்டறிந்தேன்; அவரைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பினேன். அந்தப் புத்தகத்தை நான் விமான நிலைய புத்தகக் கடையிலேயே பார்த்தேன், ஆன்லைனிலும் எளிதாக ஆர்டர் செய்திருக்கலாம். ஆனால், உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அருகிலுள்ள கடையிலேயே வாங்க விரும்பினேன். இதற்கிடையில், புத்தகக் கடைகளுக்கு ஒரு சிறிய வேண்டுகோள்: தயவுசெய்து உள்ளூர் எழுத்தாளர்கள், படைப்பாளிகள் மற்றும் உள்ளூர் வாசிகளைப் பற்றிய புத்தகங்களுக்கு இடம் கொடுங்கள், குறிப்பாக பேராசிரியர் M S சுவாமிநாதன் போன்ற மிகச்சிறந்த சாதனையாளர்களைப் பற்றிய புத்தகங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.




காத்திருப்பு நீடிக்கும் வேளையில், நான் விமான நிலையத்தில் வாங்கிய ஒரு புத்தகம் இதோ: பத்திரிகையாளர் மற்றும் குற்றப் பின்னணி எழுத்தாளர் S உசேன் ஜைதி, தனது மனைவி வெல்லி தேவாருடன் இணைந்து எழுதிய 'மாஃபியா குயீன்ஸ் அஃப் இந்தியா'. இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பத்து பெண் கதாபாத்திரங்களும், தங்களின் கெட்ட பெயருக்காக மட்டுமல்லாமல், ஆற்றல் மற்றும் துணிச்சலுக்காகவும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. ஜைதி எழுதிய தாவூத் இப்ராஹிம் பற்றிய புத்தகத்தை (டோங்கிரி டு துபாய்) நான் மிகுந்த ஆர்வத்துடன் படித்திருந்தேன்; அதில் வரதராஜ முதலியார், ஹாஜி மஸ்தான், கரீம் லாலா போன்ற பிற தாதாக்களைப் பற்றி அவர் பேசுகிறார். வலிமையான பெண்களைப் பற்றிய படங்களையும் (காட்மதர், கங்குபாய் கத்தியவாடி) நான் பார்த்திருக்கிறேன், மேலும் கொள்ளைக்காரி பூலான் தேவியின் வாழ்க்கை ஏற்ற இறக்கங்களுடன் நாட்டின் கண்களுக்கு முன்பே முடிவுக்கு வந்ததையும் பார்த்திருக்கிறேன். ஆனால், பெண் மாஃபியாக்கள்... அது மிகவும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது.

இந்தத் தொகுப்பு ஆரம்பம், நடுப்பகுதி மற்றும் இறுதியில் கிளியோபாட்ரா என்று ஜைதியால் அழைக்கப்படும் ஒரு நபரின் குறிப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது (அவர் பெயரை வெளியிட மாட்டேன் என்று வாக்குறுதி அளித்ததாலேயே இப்பெயர்). அவர் வரதராஜ முதலியாரின் நம்பிக்கைக் குரியவராகவும் ஆலோசகராகவும் இருந்ததை அறிந்த ஜைதி, அவரைத் தேடிக் கண்டுபிடிக்கச் சிறிது காலம் ஆனது. இறுதியாக அவர் கேரளாவின் தீர்த்தலாவில் தனது கடைசி காலத்தைக் கழித்துக் கொண்டிருந்ததைக் கண்டறிந்தார். எகிப்திய ராணியுடன் இவரிடம் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவர் இவரை கிளியோபாட்ரா என்று அழைத்தார் – "அவர் மிகவும் புத்திசாலி, ஆண்களை ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு அழகானவர், மேலும் துன்பங்களை வாய்ப்புகளாக மாற்றிய பல சம்பவங்கள் அவர் வாழ்க்கையில் இருந்தன". பூலான் தேவிக்கு நிகரான கொள்ளைக்காரி குசுமா, போதைப்பொருள் கடத்தல்காரர் இக்ரா குரேஷி, மனித கடத்தல்காரர் சோனு பஞ்சாபன், விலைமாதர் விடுதி நடத்தும் சாய்ரா, கஞ்சா ராணி ஜெயா செடா, பயங்கரமான மோசடிப் பேர்வழி சிவகாசி ஜெயலட்சுமி போன்ற பெண்களின் கதைகள் சிறப்புக் கட்டுரைகளாக

எழுதப்பட்டுள்ளன: அவை அவர்களின் வாழ்க்கையை வாசகர் களுக்கு அறிமுகப்படுத்து கின்றன, குறிப்பாக அவர்கள் ஈடுபட்ட சட்டவிரோத வணிகம் மற்றும் அவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதில் கவனம் செலுத்துகின்றன. ஆழமாக ஆராய்ச்சி செய்யப்பட்ட இக்கதைகள் பணம், போதைப்பொருள், பாலியல் தொழில், ஹவாலா, கடத்தல், ஏமாற்றுதல், கொலை எனப் பலவற்றையும் உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு பெண்ணும் தங்களின் கொடூரமான தொழிலில் எப்படி ராணியாகத் திகழ்ந்தார்கள் என்பதையும், விசுவாசமும் ஆதரவும் சரியும் வரை அவர்கள் எப்படி ஒரு சிக்கலான வலையமைப்பை வழிநடத்தினார்கள் என்பதையும் நாம் காண்கிறோம்.




ஒரு நிலையில், இக்கதைகள் பிரமிப்பூட்டுபவையாகவும், மக்கள் ஏமாற்றப்படும் விதம் மிகவும் நுணுக்கமாகவும் எண்ணற்றவை யாகவும் இருக்கின்றன. இருப்பினும், சாதாரண மக்கள் எவ்வளவு எளிதாக இவர்களின் சதித்திட்டங்களில் சிக்கிக் கொள்கிறார்கள் என்பது முதுகெலும்பில் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. இவற்றை நாம் வெறும் ஆர்வம் அல்லது செய்தியாக மட்டும் பார்க்க முடியாது; நாமும், முக்கியமாக நமது குழந்தைகளும் வாழும் இந்தச் சிக்கலான உலகத்தைப் பற்றியும், இத்தகைய கவர்ச்சியான வலைகளில் சிக்காமல் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் இவை நமக்கு உணர்த்த வேண்டும். இது வணிகத்திற்கும் நிழல் உலக நடவடிக்கைகளுக்கும், அரசியலுக்கும் குற்றச் செயல்களுக்கும், மதத்திற்கும் சுரண்டலுக்கும் இடையே உள்ள தொடர்பை அடிக்கோடிட்டுக் காட்டும் பயமுறுத்தும் உண்மை. தற்செயலாக, சஞ்சய் லீலா பன்சாலி இயக்கிய ‘கங்குபாய் கத்தியவாடி’ திரைப்படம், ஜைதி தனது ‘மாஃபியா குயீன்ஸ் அஃப் மும்பை’ புத்தகத்தில் கங்குபாய் கோதேவாலி பற்றி எழுதிய கதையை அடிப்படையாகக் கொண்டது.

கடந்த நவம்பர் மாதம் சென்னையில் உள்ள கோதே இன்ஸ்டிடியூட் (மேக்ஸ் முல்லர் பவன்) நடத்திய ‘லிட்டில் லிட்ஃபெஸ்ட்’ விழாவில் ஒரு சிறந்த வாசகரைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குழந்தைகளுக்கான பதிப்புத் துறை மாற்றங்கள் குறித்த குழு விவாதத்தைத் தொடர்ந்து நடந்த பொது விவாதத்தின் போது, சுமார் 11 அல்லது 12 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் எழுந்து தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டான். அவன் சொன்னதன் சுருக்கம் இது: ‘வீட்டில் பெட்டி பெட்டியாகப் புத்தகங்கள் இருந்தன. என் அம்மா தொழில் தொடங்குவதற்காக சுமார் 1,000 புத்தகங்களை வாங்கியிருந்தார், ஆனால் அந்தத் தொழில் தோல்வி யடைந்தது. எனவே நான் அந்தப் புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினேன். எல்லாவற்றையும் படித்து முடித்து விட்டேன்.’ அவன் மேலும் சொன்னான்: ‘நான் ஆடுஜீவிதம் புத்தகத்தைப் இரண்டே நாட்களில் படித்தேன். எனக்குத் தெரிந்த ஒருவர் அந்தப் புத்தகத்தைப் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதுகிறார். அவர் அதைப் படிக்க மூன்று மாதங்கள் எடுத்துக்கொண்டார்.’ இதைக் கேட்ட பார்வையாளர்கள் திகைத்துப் போனார்கள். ‘ஆடுஜீவிதம்’ (பென்யமின் மலையாளத்தில் எழுதிய நூல்) படித்தவர்களுக்கு இந்தத் திகைப்பிற்கான காரணம் புரியும். சவுதி அரேபியாவில் ஆடு மேய்க்கும் பணியில் ஈடுபட்ட ஒரு மலையாள தொழிலாளியின் உண்மை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது இந்தப் புத்தகம். அந்தக் கதையைப் படிப்பது சோகம், தனிமை, ஏமாற்றம், விரக்தி போன்ற உணர்வு களைத் தூண்டும்... பெரியவர்களுக்கே சவாலான இந்த உணர்வுகளை அந்தச் சிறுவன் படித்து உணர்ந்திருக்கிறான்!

இது ஹச்செட் நிறுவனம் மேற் கொண்ட ஒரு அழகான முயற்சியை எனக்கு நினைவூட்டுகிறது. ராபர்ட் கால்ப்ரைத் எழுதிய 700 பக்கங்களுக்கு மேலான ‘தி ஹால்மார்க்ட் மேன்’ (கார்மோரன் ஸ்டிரைக் துப்பறியும் தொடர்) புத்தகத்தின் இறுதியில் இதைக் கண்டேன். ராபர்ட் கால்ப்ரைத் என்பது JK ரவுலிங் பெரியவர்களுக்காக எழுதப் பயன்படுத்தும் புனைப்பெயர். அந்தப் புத்தகத்தின் இறுதியில், குறிப்பாகக் குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்ளும் ஒரு குறிப்பு ஆசிரியரிடமிருந்து வந்துள்ளது. இது “குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக வாசிப்பை மாற்ற அனைவரையும் ஊக்குவிப்பதற்காக” தொடங்கப்பட்ட ‘ரேய்சிங் ரீடர்ஸ்’ என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும். இந்த வேண்டுகோள் கல்வி, மன ஆரோக்கியம், தகவல் தொடர்புத் திறன் போன்றவற்றில் வாசிப்பு ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தை வலியுறுத்துகிறது. இதைச் செய்வதற்குப் பல இலவச அல்லது செலவில்லாத வழிகள் உள்ளதாக அந்த கடிதம் சுட்டிக்காட்டுகிறது: “...அவர்களுக்குத் தினமும் வாசித்துக் காட்டுவது, புத்தகக் கடைகள் மற்றும் நூலகங்களுக்குத் தவறாமல் அழைத்துச் செல்வது மற்றும் புத்தகங்களைப் பரிசாக அளிப்பது”. செய்தியைச் சென்றடையச் செய்ய இது எவ்வளவு எளிமையான மற்றும் பயனுள்ள வழி!

அந்த உணர்வோடு, நான் படிக்கக் காத்திருக்கும் சில புத்தகங்களின் பெயர்கள் இதோ: சூசன் சோய் எழுதிய ‘ப்ளாஷ்லைட்’ (புக்கர் விருதுப் பட்டியலுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டது); நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்னின் வாழ்க்கை வரலாற்று நூல் ‘அ டிஃப்ரண்ட் கைண்ட் ஆஃப் பவர்’; விருது பெற்ற பத்திரிகையாளர் ஹரிந்தர் பவேஜாவின் ‘தே வில் ஷூட் யூ, மேடம்’; சிர்ஷோ பந்தோபாத்யாய எழுதிய ‘டைகர் வுமன்’ (வங்காள மொழியிலிருந்து அருணவா சின்ஹாவால் மொழி பெயர்க்கப்பட்டது); மற்றும் M K சங்கர் எழுதிய ‘தி கன்வர்ட்’. இந்த புத்தாண்டு மகிழ்ச்சியான வாசிப்பு ஆண்டாக அமையட்டும்: தயவுசெய்து புத்தகங்களை உங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



## RID 3120

### RC வாராணசி விருந்தா

வாராணசியில் உள்ள சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து நடத்திய முகாமில் 220 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களில் 44 கண் நோயாளிகள் அறுவைச்சிகிச்சைக்காக தேர்வு செய்யப்பட்டனர். சிகிச்சைக்கு பின் அவர்கள் மீண்டும் பார்வை பெற்றனர்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






## RID 3160

### RC ஹம்பி பேர்ள்ஸ்

ஹோஸ்பெட்டில் உள்ள ரோட்டரி கண் மருத்துவமனை மற்றும் உள்ளூர் சுகாதாரத்துறை இணைந்து கண் மற்றும் மருத்துவ முகாமை நடத்தியது. 25 பேர் கண்புரை நோய் அறுவைச்சிகிச்சைக்காக அடையாளம் காணப்பட்டனர்.

## RID 3192

### RC பெங்களூரு பிரிகேட்ஸ்

பெங்களூருவில் மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், BTM லே-அவுட்டில் உள்ள மேல்நிலை சுகாதார மையத்திற்கு இரத்தத்தை பகுப்பாய்வு செய்யும் கருவி (Haematology Analyser) நன்கொடையாக வழங்கப்பட்டது. பால் ஃபார்மா நிறுவனத்தின் CSR நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.





## RID 3203

### RC திருப்பூர் மெட்டல் டவுன்

ஜவுளிக்குழு அலுவலகத்தில் நடந்த பொது சுகாதாரம் மற்றும் பல் மருத்துவ பரிசோதனை முகாமில் 60-க்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் பரிசோதிக்கப்பட்டனர். ஸ்ரீ சரண் மருத்துவமனை மற்றும் டாக்டர் கிஷோர் பல் மருத்துவமனை கூட்டாளர்களாக இருந்தன.

## RID 3142

### RC கல்யாண் சிட்டி

அபினவ் வித்யா மந்திரில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில், குப்பை சேகரிப்போர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகளை DG ஹர்ஷ் மகோல் பாராட்டினார். தினசரி வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர்கொண்டாலும் தைரியமாக கல்வியைத் தொடர்ந்ததற்காக அவர்களைப் பாராட்டினார்.



## RID 3234

### RC சென்னை முகப்பேர்

ஸ்ரீ லலிதாம்பிகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 85 பேருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. மருத்துவ ஆலோசனைக்குப் பின் மருந்து, மாத்திரைகளும் பரிந்துரைக்கப்பட்டன.



## RID 3231

### RC வேலூர் நார்த்

RAC தரப்படவேடுவைச் சேர்ந்த ரோட்ராக்டர்கள், காட்பாடியில் உள்ள கவி உலகம் சிவானந்தம் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.23,000 மதிப்பில் மின் விசிறியை நன்கொடையாக வழங்கினர். இந்த நிகழ்வில் மாவட்ட ரோட்ராக்ட் தலைவர் J ஹரி, சங்கத்தின் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் ரோட்டேரியன்கள் கலந்துகொண்டனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# ரோட்டரிப் பணியை AI எவ்வாறு மறுவரையறை செய்யலாம்

ராகுல் D ஷா

*செயற்கை நுண்ணறிவை (AI) தங்கள் அன்றாடப் பணியில் எவ்வாறு நடைமுறையில், எளிதில் அணுகக்கூடிய வழிகளில் இணைத்து, சேவையை மேலும் திறமையானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், ஊக்கமளிப்பதாகவும் மாற்றலாம் என்பதை ரோட்டரித் தலைவர்களுக்குக் கற்பிப்பதும், அவர்களை ஈடுபடுத்துவதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.*

ரோட்டரி சங்கங்கள் சேவை, தலைமைத்துவம் மற்றும் தகவமைப்பை உள்ளடக்கியவை. வருடம் தோறும் தலைவர்கள், செயலாளர்கள், இயக்குநர்கள் புதிய ஆற்றல் மற்றும் யோசனைகளை கொண்டு வருகிறார்கள், ஆனால் நிர்வாகம், அறிக்கை மற்றும் திட்டமிடலில் சவால்களைச் சந்திக்கிறார்கள். அதிகரிக்கும் எதிர்பார்ப்புகளுக்கு, AI ஒரு வலுவூட்டும்.

ChatGPT, Perplexity, Canva போன்ற AI கருவிகள் தலைவர்களின் திறன்களை மேம்படுத்தும் பயனர் நட்பு தளங்களாக வளர்ந்துள்ளன. இவை மீள்வரும் பணிகளை தானியங்குபடுத்தி, ஈடுபாட்டை உயர்த்தி, ரோட்டேரியர்கள் அர்த்தமுள்ள சேவையில் கவனம் செலுத்த உதவுகின்றன.

முக்கியமாக, பல AI கருவிகள் இலவசமாக அல்லது குறைந்த செலவில் கிடைப்பதால் ரோட்டரி போன்ற குறைந்த பட்ஜெட் அமைப்புகளுக்கும் எளிதில் பயன்படுத்தக்கூடியவையாக உள்ளன. அவற்றின் இருமொழி மற்றும் பன்மொழி வசதிகள் இந்தி, மராத்தி, தமிழ் போன்ற உள்ளூர் மொழிகளில் தகவல்தொடர்புகளை உருவாக்க உதவி, மொழித் தடைகளை நீக்கி இந்தியா முழுவதும் அதிக உள்ளடக்கத்தை உறுதி செய்கின்றன.

மீண்டும் மீண்டும் நிகழும், நேரத்தை எடுத்துக்கொள்ளும் சில செயல்பாடுகளை AI எவ்வாறு எளிதாக்குகின்றது என்பதை பார்ப்போம்

### சிறந்த ஈடுபாடு

கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக உறுப்பினர்களை ஈடுபடுத்துவதற்கு படைப்பாற்றல் தேவை. கதைகள் சொல்வது அல்லது தனிப்பயனாக்கம் மூலம் ஆர்வத்தைத் தூண்டி, பொருத்தத்தை எடுத்துக்காட்டும் தனிப்பயனாக்கப் பட்ட அழைப்புகளை AI-யால் உடனடியாக உருவாக்க முடியும். தலைவர்கள் தலைப்பு அல்லது விவரங்களை வழங்கினால் AI அவர்களின் பார்வையாளர்களுக்கு ஏற்ற தொழில்முறை அழைப்புகளை உருவாக்கி, வருகை மற்றும் உற்சாகத்தை அதிகரிக்கும். ஒரு எளிய கட்டளையிலேயே சிறந்த வெளியீட்டை பெற முடியும், தேவையெனில் அதை எளிதில் திருத்தவும் முடியும்.

நீங்கள் அடுத்த கூட்டத்திற்கான அறிக்கையைக் கேட்கும்போது, அடுத்த தொடர் கூட்டத்தின் எண்ணும் உங்களுக்காக தானாக உருவாக்கப்படும்.

### சிரமமில்லாத வடிவமைப்பு

விளம்பரம் மற்றும் outreach-க்கு ஈர்க்கக்கூடிய காட்சி உள்ளடக்கம் இன்றியமையாதது. Canva மற்றும் Venngage போன்ற AI வடிவமைப்பு கருவிகள், நிகழ்வு கருப்பொருள்களை விவரிப்பதன் மூலம் தொழில்முறை ஃபிளையர்கள் மற்றும் சமூக ஊடக காட்சிகளை விரைவாக உருவாக்க சங்கங்களுக்கு உதவுகின்றன. Rotary Brand Center வழிகாட்டுதல்களுடன் சேர்ந்து பயன்படுத்தினால், இந்தக் கருவிகள் ஒரு கிராஃபிக் வடிவமைப்பாளர் தேவையின்றி பிராண்டிங்கை புதிய உயரத்திற்கு உயர்த்துகின்றன. AI உடன், படைப்பாற்றலுக்கு வரம்பு இல்லை, உங்கள் காட்சிகளை



தனித்துவமாக மாற்றுகிறது. சிறப்பு குறிப்பு: Canvaவின் இலவச பதிப்பான Co-pilot உங்கள் நோக்கத்திற்குப் பயன்படும்.

ரோட்டரியின் வருடாந்திர தலைமைப் புதுப்பிப்பு தகவல் தொடர்பு நடை மற்றும் வடிவமைப்பில் இடைவெளிகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. AI, விருப்பமான டெம்ப்ளேட்கள் மற்றும் லேஅவுட்களை சிரமமின்றி கற்று மற்றும் நகலெடுப்பதன் மூலம் நிலைத்தன்மையைப் பராமரிக்கிறது, ஒவ்வொரு கூட்ட அழைப்பு, அறிக்கை அல்லது செய்திமடலும் மெருகூட்டப்பட்ட, ஒரே மாதிரியான பாணியில் இருக்கும். ஒரே கணக்கில் உள்நுழைந்திருக்கும்போது ChatGPT போன்ற கருவிகள் மொபைல் மற்றும் மடிக்கணினிகள் முழுவதும் பணி வரலாற்றை தடையின்றி ஒத்திசைப்பதால், இந்தக் வடிவங்களை சாதனங்கள் முழுவதும் நிர்வகிக்க சங்கங்கள் AI-ஐ நம்பலாம்.

### அன்றாட செயல்பாடுகளை மாற்றுதல்

AI தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வை தானியங்குபடுத்துகிறது, உறுப்பினர்களின் பங்கேற்பு, சேவை நேரம் மற்றும் நிதி திரட்டும் முடிவுகளை BOD கூட்டங்களுக்கான தெளிவான காட்சிகளாக மாற்றுகிறது. இது நன்றி குறிப்புகள், முன்மொழிவுகள் மற்றும் நிதி திரட்டும் வேண்டுகோள்களை எளிதாக வரைகிறது. வாராந்திர கூட்ட அழைப்புகள் மற்றும் நினைவூட்டல்கள் உட்பட வழக்கமான அட்டவணையிடல் ஒரு சில நிமிடங்களில் நிறைவேற்றப்படுகிறது. சில சமயங்களில் வாராந்திர கூட்டங்களுக்கு புதிய, ஈர்க்கக்கூடிய யோசனைகளைக் கண்டறிய சங்கங்கள் சிரமப்படுகின்றன. AI ஒரு படைப்பாற்றல் பங்காளியாகவும் செயல்பட முடியும்:

- விருந்தினர் விரிவுரைகள் அல்லது தொழில்சார் கலந்துரையாடல்களுக்கான தலைப்புகளைப் பரிந்துரைக்கும்.
- வினாடி வினா கேள்விகள், வேடிக்கையான உண்மைகள் அல்லது கருப்பொருள் அடிப்படையிலான அறிமுகங்களை (எ.கா. – சுற்றுச்சூழல், இளைஞர்கள், ஆரோக்கியம்) உருவாக்கும்.
- ஒரு டிஜிட்டல் ஒப்படைப்புச் சுருக்கத்தைப் பராமரிக்கும்.
- செயல்பாடுகளை நிலையான இயக்க நடைமுறைகளை (SOPs) நிறுவி, சீரமைக்கும்.



### ரோட்டரி அறக்கட்டளை: தாக்கத்தை மேம்படுத்துதல்

ரோட்டரி அறக்கட்டளை வாழ்க்கையை மாற்றும் திட்டங்களை இயக்குகிறது. நன்கொடையாளர் பரப்புரை செய்திகளை உருவாக்குதல், வருடாந்திர அறிக்கைகளை தானியங்குபடுத்துதல் மற்றும் நிதி திரட்டும் உத்தியை மேம்படுத்த நுண்ணறிவுகளை வழங்குதல் மூலம் AI அறக்கட்டளை குழுக்களுக்கு உதவுகிறது. சரியான நேரத்தில் AI-உருவாக்க தொடர்புகள் மற்றும் அறிக்கைகளைப் பயன்படுத்தி பல தன்னார்வ அமைப்புகள் வரவுகளை அதிகரித்துள்ளன.

CSR கூட்டாண்மைகள் ரோட்டரி சேவையின் ஒரு முக்கிய தூணாகும். இணக்கமான கார்ப்பரேட் பங்காளர்களை அடையாளம் காணவும், பயனாளிகளின் தரவை பகுப்பாய்வு செய்யவும், இணக்க அறிக்கைக்கு இணங்கவும் மற்றும் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கவும் AI உதவுகிறது.

### உலகளாவிய மானிய மேலாண்மை: சிக்கலை எளிதாக்குதல்

தகுதி ஆராய்ச்சி செய்தல், விண்ணப்பங்களைத் தயாரித்தல், பங்குதாரர் தகவல்தொடர்புக்கு உதவுதல் மற்றும் மைல்கல் அறிக்கைகளை நிர்வகித்தல் மூலம் உலகளாவிய மானியப் பணியை AI எளிதாக்குகிறது.

AI மாதாந்திர செய்திமடல்கள் மற்றும் சங்க இதழ்களை உருவாக்கும் செயல்முறையை எளிமைப்படுத்துகிறது. தானியக்க வரைவு தயாரிப்பின் மூலம், சங்க குழுக்கள் ஆவணப் பணிகளை விட திட்டங்களை செயல்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த முடிகிறது.

AI இன் உண்மையான மேஜிக் தொழில்நுட்பத்தில் அல்ல, அது ரோட்டேரியர்களுக்கு நேரத்தையும் படைப்பாற்றலையும் எவ்வாறு திருப்பி அளிக்கிறது, அதிக அர்ப்பணிப்பு, கவனம் மற்றும் புதுமையுடன் சேவை செய்ய எவ்வாறு நம்மை செயல்படுத்துகிறது என்பதில் உள்ளது.

சுருக்கமாக, AI ரோட்டரி பணியை வேகமாக ஆக்குவது மட்டுமல்லாமல் ரோட்டரி ஆழமாக வேலை செய்யவும், பரந்த அளவில் சென்றடையவும், வலுவான தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது – திறனை பச்சாதாபமாகவும், உற்பத்தித்திறனை நோக்கமாகவும் மாற்றுகிறது.


AI கருவிகளுக்கு மேம்பட்ட தொழில்நுட்ப திறன்கள் தேவையில்லை. AI-ஐ நாம் ஒரு டிஜிட்டல் உதவியாளராகப் பயன்படுத்த வேண்டும், மனிதத் தொடுதலுக்கு ஒரு மாற்றாக அல்ல – அது நமது சேவை செய்யும் திறனைப் பெருக்கும் ஒரு கருவி, நமது மதிப்புகளுக்கு மாற்றாக இருக்கக் கூடாது.

எழுத்தாளர், RC புனே ஈஸ்டின் உறுப்பினர், ஒரு AI மற்றும் இணையப் பாதுகாப்பு நிபுணர்.



# பாடநூல்கள் வெளியிடுதல் — குஜராத்தியர் பாணியில்

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

1976-ம் ஆண்டின் தொடக்கத்தில், நான் ஒரு பதிப்பகத்தில் 'கமிஷனிங் ஆசிரியராக' முதல் வேலையில் சேர்ந்தேன். எனது பிரிவு பொருளாதாரம் மற்றும் மேலாண்மை ஆகும். இளங்கலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை எழுதக்கூடிய ஆசிரியர்களைக் கண்டறிவது என் வேலையின் ஒரு முக்கிய பகுதியாகும். இதில் இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களுக்குச் செல்வது அடங்கும். இதுவே வேலையின் சிறந்த பகுதியாகும். அந்த காலத்தில் மேலாண்மை இந்தியாவில் புதிய துறையாக இருந்ததால், மேலாண்மை ஆசிரியர் அதற்கு சிறப்பு கவனம் செலுத்தச் சொன்னார். அதாவது, மேலாண்மை நிறுவனங்கள் இருந்த பம்பாய், அகமதாபாத் மற்றும் கல்கத்தா ஆகிய இடங்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை பயணம் செய்ய வேண்டும். அதில் ஒரு பெரிய கதை இருக்கிறது.


ஒருமுறை, அகமதாபாத்தில், நான் IIM-ஐத் (இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்) தவிர மற்ற பல்கலைக்கழகத்திற்கும் சென்று, அங்கு பொருளாதாரத்திற்கான பாடப்புத்தகம் எழுதும் ஆசிரியர் யாராவது கிடைப்பார்களா என்று பார்க்க முடிவு செய்தேன். அங்கே எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பேராசிரியர்கள் குஜராத்தி மொழியில் மட்டுமே எழுதுவோம் என்று என்னிடம் கூறினர். எங்களுடையது ஒரு ஆங்கிலேய நிறுவனம், மிகவும் கறாரானது என்பதால் அது நிச்சயமாக சாத்தியமற்றது. நான் இதை உள்ளூர் வாசியிடம் விவரித்த போது, அவர் சிரித்துக்கொண்டே, அநேகமாக உண்மைக்குப் புறம்பான ஒரு கதையை என்னிடம் கூறினார்.

அவர், ஒருமுறை அச்சிட ஏதோ ஒன்றைக் கொடுப் பதற்காக ஒரு அச்சகத்திற்குச் சென்றிருக்கிறார். அங்கே இரண்டு கனவான்கள் நோட்டுப் புத்தகங்களில் ஏதோ ஒன்றை மும்முரமாக எழுதிக் கொண்டிருப்பதையும், நிரப்பப்பட்ட பக்கங்களைக் கிழித்து, அச்சு கோர்ப்பவர் களிடம் கொண்டு செல்லும் ஒருவரிடம் கொடுப்பதையும் கண்டார். கோடை விடுமுறை முடிந்து நான்கு நாட்களில் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படவிருந்ததாலும், அதற்குள் புத்தகம் தயாராக இருக்க வேண்டும் என்பதாலும் அங்கே ஒரு அவசர நிலை காணப்பட்டது. எழுத்தாளர்களில் ஒருவர், தனது புத்தகத்தையே மாணவர்களுக்குப் பரிந்துரைக்கும் பேராசிரியர், இதன் மூலம் விற்பனைக்கு தானே உத்தரவாதம் அளித்துக் கொள்கிறார் என்று அகமதாபாத்தில் உள்ள எங்கள் பிரதிநிதி கூறினார். அச்சிடுபவரே வெளியிடுபவராகவும் இருந்ததால், சகாக்கள் மறுஆய்வு போன்றவைகள் தேவையில்லை. இதில் மாணவர்களைத் தவிர மற்ற அனைவரும் பயனடைந்தனர். அது ஒரு நேர்த்தியான ஏற்பாடாக இருந்தது. ஆனால், யாருக்குத் தெரியும், ஒருவேளை மாணவர்கள் கூட பயனடைந்திருக்கலாம்.

நான் இந்தக் கதையை இப்போதும் சொல்வதற்குக் காரணம், இது நவீன, மேற்கத்திய மருந்து நிறுவனங்களுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. அவர்கள் பலவிதமான மருந்துகளைத் தயாரிக்கிறார்கள், பின்னர் மருத்துவர்களை சம்மதிக்க வைக்கும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்ட ஊடகப் பிரச்சாரங்களை உருவாக்கி அவற்றைப் பரிந்துரைக்கச் செய்கிறார்கள். இந்த முறை பாடப்புத்தகங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதைப் போலவே — பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டது. மேலே உள்ள கதையில் உள்ள மாணவர்களைப் போலவே, நோயாளிகளும் தங்களுக்குக் கொடுக்கப்படும் எந்தவொரு முட்டாள்தனத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பாடப்புத்தகங்களைப் பொறுத்தவரை, அது பொதுவாகப் பேராசிரியரே செய்யும் ஒரு ரகசியப் பிரச்சாரம். "என்னுடைய புத்தகத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைக்கும், பயன்படுத்தாதவர்களுக்குக் குறைந்த மதிப்பெண்கள் கிடைக்கும் - ஏன் தோல்வியும் அடையலாம்" என்று ஆசிரியர் அமைதியாக வதந்தி பரப்புவார். மருந்து நிறுவனங்களைப் பொறுத்தவரை, "இந்த மருந்து உங்கள் நோயாளிகளைக் குணப்படுத்தும். நீங்கள் இதைப் பரிந்துரைக்காவிட்டால், விளைவுகள் மிகவும் பயங்கரமானதாக இருக்கும்" என்பதே செய்தியாகும்.

பாடப்புத்தகங்களுக்கு இணையாக இருப்பது நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றிற்கான நவீன மருந்துகள் ஆகும். இந்த இரண்டு நோய்களும் ஏராளமான மக்களைப் பாதிக்கின்றன. எனவே சந்தை மிகப்பெரியது, ஒரு நிறுவனம் தனது மருந்தை பிரபலப்படுத்த முடிந்தால், அது மிகப்பெரிய லாபத்தை ஈட்ட முடியும். இதுவே இப்போது நடந்துகொண்டிருக்கிறது. மருத்துவர்கள் எதற்கெடுத்தாலும் உடனடியாக மருந்துகளைப் பரிந்துரைக்கிறார்கள். அவர்கள் நோயாளியைப் பயமுறுத்தி கட்டாயப்படுத்துகிறார்கள்.

சமீபத்தில் எனக்கு இதுதான் நடந்தது, எனது வருடாந்திர பரிசோதனைகளைச் செய்த மருத்துவர் எனக்குப் புதிய மருந்துகளைப் பரிந்துரைத்தது மட்டுமல்லாமல், மற்றொரு மருத்துவரிடமும் என்னைப் பரிந்துரைத்தார், அவரும் எனக்கு புதிய மருந்துகளைப் பரிந்துரைத்தார். நாள் முழுவதும் குழப்பமான கலவைகளில் நான் எடுத்த மூன்று மாத்திரைகள் தற்போது ஆறு மாத்திரைகளாக அதிகரித்துவிட்டது.■




Rotary Club of VIRUDHUNAGAR

UNITE FOR GOOD




# Yadhumanaval

## EMPOWERING GIRLS

Rotary strongly encourages partnership with like-minded Institutions and Corporates which support Rotary's programmes. Empowering girls has been a major focus of Rotary in the recent years.

Therefore the coming together of Rotary District 3212 and IDHAYAM, to empower young adults through a confidence building Programme specially designed by an illustrious life skills facilitator, Dr. Jayanthasri Balakrishnan, titled 'Yadhumanaval', is a great blessing indeed.

**No. of Occurrences** **125**

**No. of Beneficiaries** **1,60,376**

## Get in Touch



**Yadhumanaval**
Project Chairman
Rtn D.Vijayakumari
+91 94887 66388

The voice of Yadhumanaval is a war cry against women illiteracy, gender inequality, gender bias and sexual harrassment. Yadhumanaval is the voice of the voiceless and voiced less. It is for the women, by the women and of the women.




" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Jan 26

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40

ADVT.

# RJ MANTRA ENGLISH SCHOOL

(Idhayam Rajendran Charities)

Affiliated to CISCE -TN082,Virudhunagar



## ADMISSIONS OPEN
2026-2027

Our engaging curriculum, experienced educators, and vibrant learning environment empower students to grow academically, socially, and emotionally.

- Every classroom activity is a learning adventure
- Every competition is a chance to grow
- Every event is a community experience
- Every celebration is a moment of unity

www.rjmantra.com admin@rjmantra.com 9489067789